14

# சக்தி

322

# ஆர்ஸ் ரிலயன்ஸ் கைக் கடியாரங்

உஷ்ண தேசங்களுக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை. இவைகளின் தனிச் சிறப்புகளைக் கவனியுங்கள்



Q 42—ரு. 45

எஃகினுல் துருப்பிடிக்காமலும், வியர்வை படாமலும் இருக்கும்படி செய்யப்பட்ட பின்புறங்கள் உடையவை



Q 41—ரு. 45

உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு உறைகள்



Q 45—ரு. 50

இரண்டு வருஷம் எழுத்தால் உத்திரவாதம்



Q 43—ரு. 50

தூசியும், வியர்வையும், உள்ளே செல்லாதபடி பிரத்தியேகமான காலர்களும் சுற்றக்கூடிய ஸ்டெம்களும் உடையவை



Q 44—ரு. 50

கற்களிழைக்கப்பட்ட 15 துவாரங்களையுடையனவும் லீவர் அசைவுகளுடையனவுமான ஸ்விஸ் ரிலயன்ஸ் கைக்கடியாரங்கள்

AT THE SIGN OF THE CLOCK TOWER

## P. ORR & SONS LTD

MADRAS OOTACAMUND RANGOON LOND

POST BOX 317 MADRAS

எல்லா வகையான அச்சுவேலைகளும் நேர்த்
தியாகச் செய்து கொடுப்பதில் பெயர்பெற்ற

## சக்தி பிரஸ் லிமிடெட்

காரைக்குடியில் நிறுவப்பெற்றிருக்கிறது

★

# சக்தி பிரஸ் லிமிடெட்

சென்னை : : காரைக்குடி

# பர்மா-ஷெல் சேவை புரிகிறது . . .



ஒரு இயந்திர சாலையில் அதன் உலைக்கூடங்களுக்கும், என்ஜின்களை 'லூப்ரிகேட்' செய்வதற்கும் மற்ற சாமான் உற்பத்தி வேலைகளுக்கும் அநேக தரமான எண்ணைகள் வேண்டும். பர்மா-ஷெல் கம்பெனியாரிடத்தில் இவைகள் எப்பொழுதும் தயாராயிருக்கின்றன. ஒரு கப்பலுக்கு வேண்டிய ஆயிரக்கணக்கான டன்கள் எண்ணையானாலும், ஒரு ஆகாய விமானத்திற்குத் தேவையான நூற்றுக்கணக்கான காலன்கள் உயர்ந்த ரக 'ஏவியேஷன் ஸ்பிரிட்'டானாலும் அல்லது ஒரு மோட்டார் காருக்கு வேண்டிய ஒரே பைன்டு 'அப்பர் சிலிண்டர்' எண்ணையானாலும், மற்ற எவ்வித பெட்ரோலியம் பொருள்களானாலும் வேண்டிய அளவு பர்மா-ஷெல் கம்பெனியார் தேவைக்குத் தகுந்தவாறு கொடுத்து சேவை புரியத் தயாராயிருக்கிறார்கள்.

**பர்மா-ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அன்ட் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்**

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

ஏஜண்டுகள் :

கல்கத்தா பம்பாய் சென்னை கராச்சி புது டில்லி

BSGK 10

# சக்தி

## பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ருக்மிணி தேவி (அட்டைப்படம்) | ... |
| அன்பர்களுக்கு | 82 |
| ராஜாஜி ராஜதந்திரம் | 83 |
| காலச் சுழல் | 84 |
| கவிதையைச் சுவைப்பது எப்படி ?—சுவாமி சுத்தானந்த பாரதியார் | 85 |
| எமனுக்கு வரவேற்பு (கதை)—கே. வெங்கடாசலம் | 88 |
| குருவியின் கனவு (பாட்டு)—' துறைவன் ' | 90 |
| கோவா—ஏ. கே. செட்டியார் | 91 |
| ஸுவாஸ் (கதை)—வி. ஸ. காண்டேகர் | 93 |
| மாமாவின் கால்—' உல்லாஸி ' | 96 |
| ஹிந்து மதம்—சுப்பிரமணிய சிவா | 97 |
| பச்சை குத்தல்—மு. அருணாசலம் | 98 |
| கதம்பம் | 100 |
| புதிய பாலம் (கதை)—ஏ. சுப்பையா | 101 |
| காந்தி வாக்கு | 103 |
| ருக்மிணி தேவி—தி. ஜ. ர. | 104 |
| இரஞ்சிதன் தேவி (சரித்திரக் கதை)—எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் | 109 |
| ஆமையும் ராஜாவும் (கதை)—முல்க்ராஜ் ஆனந்த் | 112 |
| பச்சைப் புடவை (கதை)—ஸி. ஆர். ஸரோஜா | 115 |
| இளவேனிற் காலம்—ராய. சொ. | 117 |
| மூக்கிழந்த வாழ்வு—' மாயா ' | 119 |
| புத்தக உலகம் | 120 |
| கம்பனும் டி. கே. ஸி.யும்—வி. ஆர். எம். செட்டியார் | 121 |
| பறித்த பூக்கள் | 123 |
| சுதந்தர முயல் (பாலர் கதை)—' நீலா ' | 125 |
| செடியின் கதை (பாலர் பாட்டு)—தே. ப. பெருமாள் | 126 |
| ஒலியும் ஒளியும் | 127 |



**சந்தா விகிதம்**

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | 4 | 8 | 0 |
| 6 மாதம் | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.




மலர் 6
இதழ் 5

சித்திரபானு
வைகாசி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

# அன்பர்களுக்கு

'சக்தி' இரண்டு மாதத்துக்குமேல் தாமதித்துவிட்டது. பல அன்பர்கள் ஏன் என்று விசாரித்து, காரியாலயத்துக்கு இதுபற்றிப் பல கடிதங்கள் எழுதிவிட்டார்கள். 'சக்தி'யிடம் அவர்களுக்கு இவ்வளவு அபிமானமும் ஆர்வமும் இருப்பதுகண்டு நமக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. எனினும், தாமதத்தின் காரணத்தை அவர்களுக்கு அறிவிக்கவேண்டியது நமது கடமையாகும்.

யுத்த நெருக்கடி காரணமாக, சக்தி அச்சுக்கூடத்தைக் காரைக் குடிக்கு மாற்ற, திடீரென முடிவாயிற்று. காரைக்குடிக்கு வந்தோம். பிரம்மாண்டமான ஓர் அச்சுக்கூடம் புதிய இடத்துக்கு வந்து வேலை தொடங்குவதென்றால், சுலபமான காரியமா? பல தொல்லைகள். எல்லாத் தொல்லைகளையும்விடப் பெரிய தொல்லை 'டேக்ளரேஷன்' தொல்லை. 'டேக்ளரேஷன்' கிடைக்கப் பல நாள் பிடித்துவிட்டது. பத்துநாளைக்கு முன்தான் கிடைத்தது. எனவே, எதிர்பாராத, தவிர்க்க முடியாத இந்தத் தாமதத்துக்கு நண்பர்கள் மன்னிக்க வேண்டும் என்று வேண்டுகிறோம்.

இன்னும் ஒரு விஷயம். 'சக்தி' சென்ற இதழைவிட அதிகப் பக்கங்களோடும் பல்வேறு பொருள்களுடனும் இந்த இதழ் வெளி வந்திருப்பதை நண்பர்கள் கவனிக்கலாம். யுத்தகாலமானதால், 'சக்தி' யைத் தயாரிக்கும் செலவு ஒரு பிரதிக்கு எட்டணா வரையில் ஆகி விடுகிறது. அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய, விளம்பர வருமானம் போதுமான தல்ல. எனினும், 'சக்தி'யை நலிவுபடுத்த விருப்பமில்லை; வரவர அபிவிருத்தி செய்வதில்தான் எங்களுக்கு ஆவல். ஆகவே, தனிப் பிரதி யின் விலையை இரண்டணாக்கூட்டி ஆறணாவாகவும் அதற்கேற்றபடி சந்தா விகிதங்களைச் சிறிது கூடுதலாகவும் உயர்த்தியிருக்கிறோம். இந்தச் சிறு சிரமத்தைப் பாராட்டாமல், நண்பர்கள் முன்போல் ஆதரிப்பார்கள் என்று நிச்சயமாய் நம்புகிறோம்.

சந்தாதார்களுக்கு, பழைய விகிதத்தின்படி இதுவரையில் அனுப்பிய பிரதிகளுக்குச் சந்தாத் தொகையில் ஈவுப்படி சழித்து, மிச்சத் தொகைக்குப் புதிய விகிதப்படி கணக்காகும் மாதம் வரையில் பிரதி கள் அனுப்பி வருவோம்.

வணக்கம்.

'சக்தி' நிர்வாகிகள்,

# ராஜாஜி ராஜதந்திரம்

கொஞ்ச காலமாக உலகத்தில் பல விபரீதங்கள் நிகழ்ந்து வருகின்றன; ஆச்சரியப்படத்தக்க விபரீதங்கள். அந்த விபரீதங்களில் ஒன்று ராஜாஜியின் போக்கு. ராஜாஜி, ராஜதந்திர ஜகஜ்ஜாலங்களினால் சுயராஜ்யம் பெற்றுவிடலாமென்று நினைக்கிறார். தமது மனச்சாட்சிக்கே விரோதமாக நடக்கவும் துணிந்துவிட்டார். உண்மையாய் நாம் கேட்கிறோம்: அவர் தமது இதயத்தைத் தொட்டுப் பார்க்கட்டும். ஒன்றுபட்ட இந்தியாவை விட்டு, துண்டு போட்ட பாகிஸ்தான் இந்தியா—அதன் முஸ்லீம் பகுதியும் சரி, இந்துப் பகுதியும் சரி—களிப்போடு, சௌக்கியமாய் வாழ முடியுமென்று அவர் நினைக்கிறாரா? மனப்பூர்வமாய் நினைக்கிறாரா?

பூகோள இயற்கை அமைப்பை மீறி, அநியாயமாய்ப் பல துண்டு ராஜ்யங்களைச் சிருஷ்டித்த ஐரோப்பா இன்று என்னபாடு படுகிறது! அதன் மக்கள் இன்று என்ன துயரங்களை அனுபவிக்கிறார்கள்! இதையெல்லாம் கண்ணாரக் கண்டும், இந்தியாவில் ஒரு 'பழைய ஐரோப்பா'வைச் சிருஷ்டிக்க விரும்பும் ஒரு லட்சியத்துக்கு — பாகிஸ்தானுக்கு—கொள்கையளவிலாயினும், தேசபக்தி நிறைந்த ஒருவர் சம்மதிக்க முடியுமா? ராஜாஜி சம்மதிக்கிறார்; சம்மதித்துப் பிரசாரமும் புரிகிறார்! ராஜாஜி உத்தமருள் உத்தமனான தேச பக்தர்; அபார புத்திமான்; சிறந்த அரசியல் வாதி. அந்த ராஜாஜியே மாறிவிட்டார் என்றால், நாம் என்ன நினைப்பது? எதைத்தான் நம்புவது?

முழு இந்தியாவில், இந்துக்களும் முஸ்லீம்களும் ஒத்து வாழமுடியாதென்றால், சின்னாபின்னம் செய்த இந்தியத் துண்டுகளிலும் அவர்களும் இவர்களும் இருப்பார்களே; அங்கே மட்டில் எப்படி ஒத்து வாழ்வார்கள்? பாகிஸ்தான் என்றால், தங்கள் பங்கு நிலத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, முஸ்லீம்கள் வங்காளக் குடாக்கடலுக்குச் செல்லப் போகிறார்களா? அல்லது இந்துக்கள் இந்துமகா சமுத்திரத்துக்குக் கொண்டு செல்லத்தான் போகிறார்களா? அன்றி, எல்லா இடத்திலும் இவர்களும் அவர்களும் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்காமல் பிரிந்து வாழத்தான் போகிறார்களோ? பாதுகாப்புக்கள் வகுப்போம் என்றால், அந்தப் பாதுகாப்புக்கள் இப்போது எங்கே போயின?

'பைத்திய'த்துக்கு மருந்து பாக்கிஸ்தான் என்கிறார் ராஜாஜி. மனோபாவத்தை மாற்ற வாதம் பயனில்லை என்கிறார். நம்மைத் தங்கள் இஷ்டப்படி--சீமையிலிருந்து வரும் தாக்கீதுப்படி—நடக்கச் செய்ய, "இதோ வந்துவிட்டான் ஜெர்மன்காரன்; அதோ வந்துவிட்டான் ஜப்பான்காரன்" என்று அந்நிய ராஜதந்திரிகள் இதுவரையில் அரட்டி வந்ததைப்போல, ராஜாஜியும் செய்ய ஆரம்பித்துவிட்டார். எதற்கு? தேசீய சர்க்கார் அமைக்க. அந்த உறுதியையாவது அவர் பெற்றிருக்கிறாரா? பித்தம் தெளியும் மருந்தல்ல பாகிஸ்தான். ஆத்மநாச லாகிரி அது. அதனால் யாருக்கும் நன்மையில்லை. அயர்லாந்து இரண்டானது யாருக்கு லாபம்? பாலஸ்தீனம் துண்டுபட்டது யாருக்கு நன்மை? ஜெக்கோஸ்லாவாகியாவும், ஜுகோஸ்லாவியாவும் பிறந்தது யாருக்கு ஸுகம்? 'பாக்கிஸ்தான்!' ஐயோ! என்ன விபரீதம்! புனித தேசபக்தரான ராஜாஜியின் மனங்கூட இப்படிப் பேதளிக்க வேண்டுமா?

"இதெல்லாம் ராஜ தந்திரம்" என்று அவர் சொல்லக்கூடும். இதோ உலகம் சர்வ நாசம் அடைந்து வருகிறதே, படாத அவதியெல்லாம் பட்டு வருகிறதே! இவை அனைத்தும் ராஜ தந்திரங்களின் விளைவுகளே அல்லவா? உலகம் இன்று குட்டிச்சுவராய்ப் பாழடைந்து வருவது ராஜ தந்திரிகள் விதைத்த விதைகளின் பலனே என்று அவர் அறியாரா? 'பித்தம் தெளிய மருந்து,' பித்தன் விரும்பும் கல்லை அவன் கையிலே கொடுத்து 'என் மண்டையிலே அடி' என்பதாகுமா?

ராஜாஜி மகத்தான தவறு செய்துவிட்டார்; ஹிமாலயம் போன்ற தவறு. பிடிவாதம் செய்வதிலே தீரமில்லை; தவறைக் கைவிடுவது தான் தீரம். அன்றொரு நாள் காந்தி அப்படித்தான் செய்தார். மீண்டும் காந்தியை — கண்கூசச் செய்யும் அந்தப் பேரொளியை—பின்பற்றி, நம்மை வழி நடத்திச் செல்லும்படி நம் இணையற்ற தலைவன் ராஜாஜியை வேண்டுகிறோம். அவருக்கு அது முடியும்; அவரால்தான் முடியும்.

—

# காலச் சுழல் 1942

## ‘சான்ஸ்’ இழந்த கிரிப்ஸ்

ருஷியாவைச் சண்டையிலே சிக்கவைத்தார் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ். பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையில் பதவிபெற்றார். இந்தியாவுக்கு ஓடிவந்தார். வெற்றி பெற்றிருந்தால் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகவே, ஆகியிருப்பார். அந்த ‘சான்ஸ்’ போச்சு. அதற்குத்தான் நாம் அவருக்கு அனுதாபப்பட வேண்டும்; இங்கு தோற்றதற் கல்ல. அவர் புத்திசாலியா யிருந்தால், இங்கே வந்தே யிருக்கமாட்டார். அவர் என்ன தான் கொண்டு வந்தார்?

### யுத்தத்துக்குப் பிறகு

**(1) பிரியும் உரிமையோடு, பூரணக் குடியேற்ற நாட்டந்தஸ்தை இந்தியா பெறும்.**

**(2) ஒவ்வொரு மாகாணமும், சுதேச சமஸ்தானமும் தன் தன் இஷ்டப்படி ஐக்கிய இந்திய யூனியனில் சேரவோ, பல யூனியன்கள் ஸ்தாபிக்கவோ சுய நிர்ணய உரிமையுண்டு. அதாவது, ஒரு பாகிஸ்தான் அல்ல; பல பாகிஸ்தான்கள்!**

### இப்போது

**(3) ராணுவ இலாக்கா, பிரதம சேனாதிபதி கையிலேயே இருக்கும். மற்ற இலாக்காக்களெல்லாம், இந்தியர்களிடம் ஒப்படைக்கப்படும்.**

கிரிப்ஸ் கொணர்ந்த திட்டத்தின் சாரம் இதுதான். ‘நாளைக்கு வாழ்க்கைப் படுகிறேன்; கழுத்தே சுகமாயிரு’ என்ற கதை. “நாளைப்பாடு ஒருபுறமிருக்கட்டும். இன்று, ராணுவ இலாக்காவின் ஒரு பகுதியை இந்தியரிடம் ஒப்படையுங்கள். யுத்தம் சம்பந்தமான சகல அதிகாரமும் மட்டில், பிரதம சேனாதிபதி கையில் இருக்கட்டும். வைஸிராய் நிர்வாகசபை செய்யும் பெரும்பான்மைத் தீர்மானங்களுக் கெல்லாம் வைஸிராய் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற ஒரு சம்பிரதாயத்தையும் ஏற்படுத்துங்கள். தற்போதைக்கு இது போதும்” என்றது காங்கிரஸ். கிரிப்ஸ் கேட்கவில்லை. அவர் தூதும் முறிந்தது. ‘மதியிழந்து தன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்’ என்றவாறு, அவரும் மறைந்துவிட்டார்.

## கான்சாகேப் ‘துறவு’

‘இரு தேவ ஊழியர்கள்’ என்று மகாதேவ தேசாயினால் வர்ணிக்கப்பட்ட, அந்த எல்லைப்புற சகோதரர்களில் ஒருவரான டாக்டர் கான்சாகேப், காங்கிரஸை விட்டு, பொதுஜன சேவையைத் துறந்து அகன்றார் என்று கேட்க, நாம் பெரிதும் வருந்துகிறோம். ‘எல்லைப்புற காந்தி’யின் சகோதரர் அவர்; எல்லைப்புற மாகாணத்தின் காங்கிரஸ் பிரதம மந்திரியா யிருந்தவர். அவர் பொதுஜன சேவையைத் துறந்த காரணந்தான் விசித்திரமா யிருக்கிறது. அவருடைய மகள் ஒரு கிரிஸ்துவ வாலிபனைக் காதலித்து மணந்து கொண்டாள். இதை அவருடைய ராஜீய எதிரிகள் உபயோகித்துக் கொண்டு அவரைப்பற்றிப் பொய்ப் பிரசாரமெல்லாம் செய்கிறார்களாம். அதைப் பொறுக்க முடியாமல் அவர் அரசியல் துறவு பூண்டுவிட்டார். இது பிரமிக்கத் தக்கதாயிருக்கிறது; பயங்கரமாயுமிருக்கிறது. டாக்டர் கான் சாகேப் நீடூழி வாழ்ந்து, மீண்டும் பொது சேவைக்கு வரக்கூடிய அமைதி அவருக்கு ஏற்படவேண்டுமென்று நாம் வாழ்த்துகிறோம்.



காலமான ஐயரவர்கள்

## வாருங்கள் பர்மியரே

பர்மா விழுந்துவிட்டது. பர்மா கவர்னர் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டார். பர்மிய மந்திரிகளோ அவருக்கு முன்னாலே இங்கே புகுந்துவிட்டார்கள். இந்தியரைப் பர்மாவிலிருந்து விரட்ட வேண்டும் என்று முயற்சித்த ஆசாமிகள் இங்கும் வந்துவிட்டார்களா என்று நாம் ஆயாசப்படவில்லை. நாடிழந்து தவிக்கும் அவர்களை நம் மக்கள் ஆதரிக்க வேண்டும். தஞ்சம் என்று புகலடைந்த அந்நியரைக் கைவிடுவது இந்தியாவின் வழக்கமல்ல. இந்த நிமிஷத்தில் நமது பழைய வருத்தத்தை யெல்லாம் மறந்து, அவர்களை அனுதாபத்தோடு வரவேற்கிறோம்.

## ஐயரவர்கள் மறைவு

தமிழுக்குப் பெருந்தொண்டு புரிந்த மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் திருக்கழுக்குன்றத்தில் ஏப்பிரல் 29வயன்று காலமான செய்தி கேட்டுப் பெருந்துயர் உற்றோம். வயது 88. இந்தத் தள்ளாத வயதிலும், தமிழ்த் தொண்டை அவர்கள் நிறுத்தவே யில்லை. தமிழிலே பல பழம் நூல்கள் உண்டு என்று இன்று தமிழன் பெருமையோடு சொல்லமுடியும் என்றால், அதற்கு ஐயரவர்களின் இணையற்ற சேவையே காரணம். சகல பழந்தமிழ் நூல்களும் எங்கெங்கோ சுவடி ரூபத்தில் சிதைந்து சிதறிக் கிடந்தன. அவற்றை யெல்லாம் தேடிப்பிடித்து ஆய்ந்து தெளிந்து பதிப்பித்த மேதை அவர். மேலும், பண்டிதர்களின் சம்பிரதாய நடையை விட்டு, எளிய அழகிய நடையில் எழுத ஆரம்பித்த முதல் பண்டிதர் அவர்தான். இது புதிய தமிழ் எழுத்தாளர்களுக்குப் பேராதரவாகும். ஐயர் காலமானது, தமிழனுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அவருடைய உற்றார் உறவினர்களுக்கும் அவருடைய நெருங்கிய சிஷ்யர் திரு. கி. வா. ஜகந்நாதனுக்கும் நமது மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மாசு மருவு அன்னியில்

# சோபணா ஸமரத்

சொல்லுகிறார் சருமத்தை
எளிதில் பாதுகாற்கலாம் என்று

"என் சருமத்தைபாதுகாக்கநான் தினமும் செய்வது வேறு ஒன்றுமில்லை. சருமத்தை அழகாய் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன். நீங்களும் இந்த முறையை செய்து பாருங்கள், சருமத்தை அதிக மேன்மையாக செய்கிறது" என்று அழகிய சோபணா சொல்லுகிறார்.

## லக்ஸ் டாய்லெட் சோப்

சி னி மா ந டி க ளி ன் சு ந் தி ர சோ ப்

LEVER BROTHERS (INDIA) LIMITED

LTS. 57—86 TM.




'' ஸி. ஏ. க்யூ.'' இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

# ஸி. ஏ. க்யூ.

## உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்ப்ளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குணமளிக்கும் மருந்தென்று இதைச் சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்ப்ளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

**ஒரு புட்டி விலை ரூ. 1**

**மாத்திரைகள் ஒரு டப்பா அணா 14**

## ஸ்பென்ஸர் & கோ. லிமி.

சென்னை

மருந்து வியாபாரிகள்

# அசோகா

(தமிழ் நாட்டு)

அபிமானிகளுக்கு

## ஓர் அறிவிப்பு

★

சில காலமாக எமது விற்பனையாளர்களுக்குப் **பாக்குத்தூள்** சரியாக அனுப்பாததால், 3½-அணாவுக்கு விற்க வேண்டிய 50-சிறிய பொட்டலங் கொண்ட பாக்கட்டை 0-3-9, 0-4-0 விதமும் 0-0-1 விற்கவேண்டிய சிறிய பொட்டலத்தை 0-0-3-க்கு 2-பொட்டலம் விதம் விற்பனை ஆனதாகவும் அறிகிறேன்.

இனிமேல் ஏற்கனவே நான் முன்பு சப்ளை செய்துவந்த அளவிற்கு சப்ளை செய்ய ஏற்பாடு செய்திருப்பதால், இனி யாரும் அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரியப் படுத்திக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

எம். கே. கிருஷ்ணசெட்டி

கோயமுத்தூர்

# கவிதையைச் சுவைப்பது எப்படி?

சுவாமி சுத்தானந்த பாரதியார்



கவிகள், சூன்யத்திலிருந்து பிறப்பவையல்ல. கவிஞரும் மனிதர்தாம். கால, தேச, வர்த்தமானங்கள் அவர்களை, அவர்களுடைய உணர்ச்சிகளை, தூண்டுகின்றன; அவர்கள் பாடுகிறார்கள். கவிகளை அனுபவிக்க, பாராட்ட, சரித்திரக்கண் வேண்டும். ஆனால், உள்ளெழுச்சி அவற்றிலே உண்டா என்பதுதான் கேள்வி. இதை விளக்குகிறார் சுவாமி சுத்தானந்த பாரதியார்.

கலைகள் பல; அறுபத்துநான்கு கலைகள் நமது நாட்டில் வழங்கின. சித்திரம், சிற்பம், சங்கீதம், நாடகம், நாட்டியம்—ஆகிய கலைகள் நமது தமிழ்நாட்டில் அன்றும் இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றன. என்றாலும், கவிக்கலையைப் போன்று மற்றெந்தக் கலையும் அவ்வளவு ஆதரவு பெறவில்லை. தமிழர் கவியுள்ளம் படைத்தவர். நம் வீட்டுக் காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் பாட்டுண்டு; பாட்டும் பணியும் தமிழ் வாழ்வுடன் ஐக்கியப் பட்டுள்ளன. நம் பழமொழிகள், குழந்தைப் பாடல்கள் தாலாட்டுகள், கப்பல் பாட்டுகள், நலங்கு ஊஞ்சல் பாட்டுகள், நாடோடிப் பாடல்கள் இவற்றில் கூட உன்னதமான கவிச் சுவையும் பாவனாரஸமும் பொங்கித் ததும்புகின்றன. தமிழர் கவிச் செல்வம் அளப்பரிது. தமிழர் கவிக் கலைக்கே முதன்மை யளித்தனர். தமிழரசர் கவியரசரைச் சரிசமானமாகப் போற்றினர். புவியரசனைவிடக் கவியரசனை ஒரு படி அதிகமாகவே பொது ஜனங்கள் மதித்தனர். கவிகளுக்குக் கனகாபிஷேகம் செய்த மன்னர், சமீப காலத்திலும் இருந்தனர். உதாரணமாக, செந்தமிழ் வள்ளலான பாஸ்கர சேதுபதி, சிலேடைப் புலி பிச்சுவையரின் வெண்பாக்களுக்குத் தாராளமான பொன் பரிசளித்தார். கவிகள் காலத்துக்கேற்றபடி வருகிறார்கள்.

கலைகளில் பெரிது கவிதை; ஒரு சித்திரத்தைக் கண்ணால் பார்த்து இன்புறலாம்; ஒரு பாட்டைக் காதால் கேட்டு மகிழலாம்; ஆனால் கவிதையை உள்ளத்தில் ஐக்கியப்பட்டே உணர முடியும். ஒரு கவியை அறிய வேண்டுமானால், அவனுடைய பரிபக்குவத்தையும் உள்ளத்தையும் வாழ்வையும் முதலில் அறியவேண்டும். எல்லாக் கவிகளும் ஒரே மாதிரி பாடமாட்டார்கள். அவரவர் மனப்பான்மைக்கும் மன எழுச்சிக்கும் ஆத்ம மலர்ச்சிக்கும் தகுந்தபடியே கவிகள் வரும். ஆதலால், ஒரு கவியை ஆராயுமுன், அவன் எந்த நிலையிலிருந்து, எவ்வளவு மனப்பக்குவத்துடன், எந்தக் கருத்தைக் கொண்டு பாடியிருக்கிறான் என்பதை அறிய வேண்டும். 'அவர் மாதிரி இவர் இல்லையே, அது மாதிரி இது இல்லையே' என்று சொல்வது பிசகு; அவர் அவரே; இவர் இவரே. அது அதுவே; இது இதுவே. ஏனென்றால், கவிதா தேவி கணக்கற்ற, எல்லையற்ற வடிவினள்; இயற்கை யுலகில் எத்தனையோ புட்கள் உள்ளன; எல்லாம் புட்களே. என்றாலும், கிளி கிளிதான்; குயில் குயில்தான். குயில் கிளி மாதிரி பச்சையா யில்லையே, அல்லது பவளம்போல் இல்லையே என்று குயிலைக் குறை சொல்ல முடியாது; அப்படிச் சொல்பவர் குயிலின் காரியத்தை அறியாதவராவர். ஆதலால், ஒரு கவியை அறிபவரோ விமர்சிப்பவரோ முதலில் அவன் உள்ளத்துடன் ஐக்கியப்பட வேண்டும். வெறும் அபிமானத்தின் பேரிலோ, ஆட்களிடம் உள்ள வன்மத்தின் பேரிலோ, இகழையும் புகழையும் கக்கி யெறியக் கூடாது.

'பாவம் பாவம்' என்ற ஒரு வார்த்தை இப்போது பிரமாதப்படுகிறது. இது வட மொழி. கருத்து, உத்வேகம், எழுச்சி உணர்ச்சி என்பது இதன் பொருள். உண்மையான எந்தக் கவியும் கருத்தில்லாமல் பாடமுடியாது. கவிதை, நாக்கு நுனியில் வருவதன்று; உள்ளாழ்ந்த கருத்திலேதான் பொங்கிப் பிறகு நாவிலோ பேனா முனையிலோ வரும். அப்படியின்றி, ''சீர் கொண்ட ஏர் கொண்ட தார் கொண்ட ஊர் கொண்ட'' என்று எழுதிக் கணக்குப் போட்டு வார்த்தையை நிரப்புவோன் கவியாக மாட்டான். அவன் கவிதை, கணக்குடன் சரி; அதற்கு ஒட்டமிராது. ஒவ்வோர் உண்மைக் கவியும் ஒரு கருத்துடன் அவதரிக்கிறான்; அக் கருத்தே அவனது ஜீவநாடி; அந்த நாடியைப் பிடித்தே அவனது உள்ளத்தை அளக்க முடியும். தனது கருத்துக்கேற்ற காலம் வருமட்டும் உண்மையான மகாகவி மௌனமா யிருப்பதுண்டு. ஒட்டக்கூத்தன் கவி கடலுக்கு வந்தபிறகு தான், கம்பக் கவி ஊறத் தொடங்கியது.

படிகம்போன்ற உள்ளத்துடன் கவியின் உள்ளத்திற் கலந்து, கருத்தை உணர்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொரு கவிக்கும் உயிராக ஒரு கருத்துண்டு; அதுவே சொற்பொருளணிகளுடன் விதவிதமாக மலர்ந்து விளங்கும். உதாரணமாக வள்ளுவர் கருத்து உலகினுக்கு வாழ்வாங்கு வாழ வழி காட்டுவது. அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று துறைகளிலும் மனிதன் எப்படி வாழ்ந்தால் கடவுளை அடையலாம் என்பதை வள்ளுவர் விளக்கினார். இந்தக் கருத்தே முப்பாலின் இனிய சுவையாகும். வாழ்வாறு இறைவனருளைச் சேர்வதே அவர் வாக்கின் உள்ளம்; அதற்கேற்றபடியே அவர் குறள் செய்திருக்கிறார். குறள் அந்தக் காலத் தமிழில் செய்யப்பெற்றது. இந்தக் கால விமர்சகன் ஒருவன் ''வள்ளுவர் தமிழ் கடினம்;

ஷெல்லியின் க்வீன் மாப் (Queen Mab) படியுங்கள்; எவ்வளவு உணர்ச்சி அதில் பொங்குகிறது; பழைய மூடப் பழக்கங்களுக்கெல்லாம் அவர் எப்படிச் சவுக்கடி கொடுக்கிறார்!" என்றால் பொருந்தாது. வள்ளுவர் வள்ளுவரே; ஷெல்லி ஷெல்லியே. ஷெல்லி வள்ளுவராக முடியவே முடியாது.

ஷேக்ஸ்பியர் மனித இயற்கையை ஆழ்ந்த இனிய சொற்சித்திரமாக, நாடகமேடையில் உணர்ச்சி ததும்ப விளக்கினார். அவர் நமக்கு விளக்குவது வீரிய மனிதனை (vital man); ஆத்மீக மனிதனையன்று. "எங்கள் காளிதாஸனுக்கு இணையுண்டோ? படியுங்கள் சாகுந்தலத்தை. ஆஹா! கதாநாயகி எவ்வளவு நாணத்துடன் அடக்கமாகப் பேசுகிறாள்! ரிஷி ஆசிரமக் காட்சிகள் எவ்வளவு ரமணீயமாயிருக்கின்றன! ஷேக்ஸ்பியரின் மாக்பெத், ஒதெல்லோ, லீயர், ஹாம்லெட் நாடகங்களில் கொலை கூத்தாடுகிறதே. மாக்பெத்தைப் படித்து முடிந்ததும், நம்மையே அவன் கொல்லவிடுவது போலிருக்கிறது; காளிதாஸனைப் படித்ததும், மனதுக்கு ஒரு நிம்மதி உண்டாகிறது. அவனுடைய உவமைகள் அனுபவத்தில் சாணை பிடித்து வந்தன" என்று அடுக்கக் கூடாது. ஷேக்ஸ்பியரின் காலம், அவனுடைய மனவெழுச்சி, பக்குவம், அவன் பிறந்த நாட்டின் எண்ணப் போக்கு, கவியின் கருத்து—இவற்றை ஆராய வேண்டும்.

பிரம்மா எத்தனையோ உடல்களைப் படைக்கிறார்; ஒவ்வொன்றின் அகமும் அமைப்பும், வெவ்வேறாகவே யிருக்கும். சிருஷ்டியில் இரண்டு இலைகள்கூட ஒரேமாதிரியிருப்பதில்லை. ஷேக்ஸ்பியர் புற மனிதனைத்தான் பார்த்தார்; அவனுடைய மன விகாரங்களையும் கர்ம விகாரங்களையுமே கவனித்தார். புறவுலகில் புற மனிதன் செய்யும் நன்மை தீமைகளை அவர் மிகத் திறமையுடன், அற்புதமான சொல்லமைதியுடன் அரங்கேற்றினார். காளிதாஸன் ஞானபூமியான பாரத தேசத்தில் பிறந்தவன். இந்தத் தேசத்தின் உயிர்நாடி ஆத்ம சக்தி, ஆத்மஞானம்; இந்தச் சமுதாயத்தின் ஆதர்சம், ரிஷிஜீவனம். நமது சமுதாயத்தின் சட்டதிட்டங்களையும், கலைகளையும் வகுத்தவர் முனிபுங்கவர். அவர் உள்ளமே பெரும்பாலும் நமது கவிச் செல்வத்தின் சிகரமாக விளங்குவது. அந்த உள்ளத்தை மறந்த யாரும் நமது நாட்டின் உண்மைக் கவியாயிருக்க முடியாது. சமுதாயம் அவர்களை ஒப்புக்கொள்ளாது. நம் நாட்டுக் கவிதையின் உயிர் ஆத்ம சக்தி, ஆத்ம தேஜஸ்; அதன் அடிப்படையில் நிஷ்காம்ய கர்மத்தால் வாழும் தர்ம ராஜ்யத்தையும் சத்திய வாழ்வையும் எழுப்புவதே நம் கவிகளின் ஆதர்சம். நம் நாட்டின் தலைசிறந்த கவிகள் வேத ரிஷிகளும், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, இதிகாசங்கள் முதலிய அருள் நூல்களை ஆக்கிய பரம பக்தர்களுமே ஆவர்; இவர்களை மறந்தால், நம் கலைகள் உப்பு சப்பில்லாத வெறும் சொற்கோவையே யாகும். பாரதியாரும் "தமிழில் பழ மறைகள் பாடுவோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம். இங்கே தேவர் சங்கம் கூடும்; இந்தியா உலகிற்கு அமர வாழ்வளிக்கும். நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை" என்ற ஆழ்ந்த அத்யாத்மக் கருத்துக்களை அள்ளித் தெளிக்கிறார்.

நம் நாட்டுக் கவிகள் ரிஷி ஞானத்தில் பழுத்தவர்கள். வேத ரிஷிகள், வால்மீகி, வசிஷ்டர், வியாச பகவான், சுகப்பிரமம், காளிதாஸர், சங்கர பகவத் பாதாசாரியார், துளஸிதாசர், கம்பர், ஔவை, அப்பர், தாயுமானவர், அருட்சோதி வள்ளலார், வேமனா, கபீர், துகாராம், ராமப்பிரசாதர், வித்யாபதி, சண்டிதாஸ், நரசிம்ம மேதா, கனகர், புரந்தரதாஸர், கவி குஞ்சர பாரதியார், கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை—முதலிய எந்தப் பழங் கவிகளைப் பார்த்தாலும் சரி, அவர்கள் கருத்தெல்லாம் மனித வாழ்வை இறைவன்பால் உயர்த்துவதாகவே யிருக்கும்; இவர்களெல்லாம் அற்புதமான கவி மணிகளே. இவ்வாறாக, கம்பர்போல வால்மீகி யில்லையே; வால்மீகிபோல வியாசர் இல்லையே; வியாசர்போலச் சங்கரர் இல்லையே என்னக்கூடாது. ஆத்ம சாந்தத்தைத் தேடும் ஞானிகளுக்குச் சங்கரர் பாடலும் தாயுமானவர் பாடலுமே பரம சாந்தம் அளிக்கும். கம்பனின் உண்டாட்டுப் படலமோ மலர் கொய்படலமோ, நைடதமோ கேட்கப் பிடிக்காமல் இருக்கலாம்; காமரஸத்தை அனுபவிக்கும் கவிகளுக்கு அவை மதுரமாயிருக்கும்; தாயுமானவர் பாடலோ, பட்டினத்தார் பாடலோ அவனுக்குப் பிடித்தமாயிராது. அதற்காக, கம்பனின் காதற் கவியே பெரிது; தாயுமானவரின் ஞானக்கவி என்ன கவி என்னக்கூடாது. கம்பர் நிலையில் கம்பர் பெரியவர்; தாயுமானவர் நிலையில் அவர் பெரிய மஹான். கம்பர் கம்பரே; தாயுமானவர் தாயுமானவரே. ஞான விளக்கத்தில் தாயுமானவருக்கே மேன்மை: கலைவிளக்கத்தில் கம்பனுக்கே மேன்மை தர வேண்டும்.

சங்கக் கவிகள் கம்பீரமான நயகரா வீழ்ச்சிபோன்றவை. கரடுமுரடான பாஷைகளில் முட்டி மோதிக்கொண்டு ஒரே அகவல் அருவியாக வந்தன. கம்பர் காலத்தில் அவற்றிற்கு நவரச பாவனையும், பல சந்தச்சுவையும், வாழ்வையும் இயற்கையையும் ஒட்டிய பொருட் சுவையும் ஏற்பட்டன. அதற்கு முன்பு எழுந்த காவியங்களில் சிறந்தது **ஜீவக சிந்தாமணியே.** அது ஜைன காவியம். வாழ்வைத் துறவில் கொண்டு போய் முடிப்பது அதன் இயல்பு. கம்பர் காதலையும் வீரத்தையும் முதன்மையாகக் கொண்டு வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் கலைச்சுவை யேற்றினார். கம்பன் வால்மீகியிடம் கதை மட்டுமே பெற்றான். காவியமெல்லாம் அவனது சொந்த ரசனை; கம்ப ராமாயணத்தைத் தமிழர் நாகரிக விளக்கம் என்றே சொல்லவேண்டும். தமிழர் கலை, காதல், கடவுளன்பு, வீரம், போர்நெறி இவற்றை அவன் அற்புதமாகப் பாடியிருக்கிறான். அவன் காவிரிக் கரையில் சரயு நதிவளத்தைக் காண்கிறான். கம்பன் கவிதை ஜீவரஸத்தில் ஊறியது; வால்மீகியின் வாக்கு உலகிற்குத் தர்மத்தையும் தர்மாத்மாவான ராமனையும் விளக்கவே எழுந்தது. துளஸிதாஸின் வாக்கு எளிய உபமானங்களால் ஜனங்களுக்கு அரிய நீதி தர்மத்தைப் புகட்டுவது, துளஸிதாஸ் காலத்தில் நம் நாடு அறமிழந்து, அதர்மக் கொடுமையால் வருந்தியது. துளஸி ராமாயணம் மனித வாழ்விற்கு அறப்பொலிவு ஏற்றவே வந்தது. பைபிளுக்கு அடுத்தபடி அதுவே நம் நாடெங்கும் பரவியுள்ளது. வால்மீகி ராமாயணங்கூட அடுத்தபடிதான்; ஒரு வடநாட்டான் ஸித்தார், தபிலாவுடன் தாளம் போட்டுத் துளஸி ராமாயணம் பாடுவதைக் கேட்டால், ஆனந்த பரவசம் உண்டாகும்.

கவியுள்ளத்துடன், பாடுவோன் உள்ளம் அப்படி லயித்துப்போகிறது.

பொதுஜனங்கள் எளிதில் உணரும்படி நீதி புகட்டுவதில் துளஸிதாஸருக்கு இணையே கிடையாது. உபமானங்களில் துளஸி, காளிதாசனுக்குச் சமான மானவர். 'துளஸிதாஸ்! என்ன பிரமாதம்? கம்பனின் கார்காலப் படலத்தைப் படியுங்கள். அதிலுள்ள இயற்கை வர்ணனை வேறெந்தக் கவிக்கும் வராது' என்னக்கூடாது. 'துளஸியின் கருத்தென்ன, அதை அவர் எப்படி நிறைவேற்றுகிறார்; கம்பன் கருத்தென்ன, அதை அவர் எப்படி நிறைவேற்றுகிறார்' என்பதையே கவனிக்க வேண்டும். கம்பன் கம்பனே; துளஸி துளஸியே; வால்மீகி வால்மீகியே; ஹோமர் ஹோமரே; தாந்தே தாந்தேயே. மில்தன் தாந்தேயின் திருக்காட்சியைப் படித்தே ஆவேசங் கொண்டான். கண்ணிழந்த பிறகு உள்ளக் கிளர்ச்சியால் மில்தன் சுவர்க்க நஷ்டகாவியம் பாடினான். அவனும் நரக வர்ணனை பாடினான். ஆனால், அதில் தாந்தேயின் விரிவும் வேலைப்பாடுகளும் பயனும் இல்லை. ஸ்வர்க்க வர்ணனையில்கூட மில்தன் தாந்தேயை அணுக முடியாது. தாந்தே தெய்வப் புலமையுடன் அதை வர்ணித்திருக்கிறான். வேத ரிஷிகள் வாக்கைத் தூக்கியடிக்கிறது அவன் வாக்கு. மில்தனுடைய கருத்தே வேறு; அவனது காவியம் ஈடனிலிருந்து வீழ்ச்சிபெற்ற மனித சமுதாயத்திற்கு ஏசுநாதரை விளக்கும் உய்தி பெறும் ஆவேசத்துடனேயே பொங்கியோடுகிறது. தாந்தேயின் கருத்துக்கள் பல மில்தனில் அப்படி யப்படியே உள்ளன; என்றாலும், அருட்கவி தாந்தே தாந்தேதான்; ஆசுகவி மில்தன் மில்தனே. காலமும் கருத்தும் கண்டே கவிகளை மதிக்க வேண்டும். அவரவர் இடத்தில், அவரவர் பக்குவத்தில், அவரவரை வைத்துப் பேசவேண்டும்.

கவிகளை அறிய ஒருவன் கவியுள்ளம் படைத்திருக்க வேண்டும்; கவியின் உள்ளத்துடன் ஒன்றி நினைக்கவேண்டும். பித்தக்காரனுக்கு மாம்பழம் கசக்கிறது; காமாலைக் கண்ணுக்குச் சூரியன் மஞ்சளாயிருக்கிறது. அது அவன் குற்றமே. அதுபோல், ஒரு நல்ல கவிதையை ஒருவன் படிக்காமல் கூட, 'இவனா பாடியிருக்கிறான்! சை!' என்று ஒதுக்கிவிடலாம். அருமையறிந்த ஒருவனால் அந்தக் கவி உலகில் புகழ்பெறலாம். உதாரணமாக, சிந்தாமணியைத் 'திருட்டுப் புரட்டுச் சிந்தாமணி' என்று முன்னே சில சைவர் இகழ்ந்து பாடினர். அதை வெளியிட்ட நமது தமிழ்த் தாத்தாவைக்கூடச் சிலர் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதனால், திருத்தக்கரின் பெருமை குறையவில்லை. கம்பராமாயணத்தைக் குறை சொல்பவர் இன்றும் உண்டு. அதற்குப் போட்டியாக, காஞ்சி புராணம் எழுந்தது. கம்பனில் பிழை கண்டு பிடிப்பதே சிலருக்குத் தொழிலாயிருந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றே கம்பன் மறுபடியும் உயிரோடிருக்கிறான்; இன்றே நம்மவர் அவனை அறியத் தொடங்குகின்றனர்.

சில கவிகளை மக்கள் அவர்கள் காலத்தில் அறிவதில்லை; பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, ஒரு ரசிகன் எழுந்து அக்கவிநயத்தை உலகிற்கு விளக்குகிறான். பிறகு, அது அமர காவியமாக விளங்குகிறது. இன்று சுரங்க இருளில் மாசுபடிந்த மண் கட்டி நாளையே வெளிவந்து பத்தரை மாற்றுத் தங்க மகுடமாக விளங்கலாம். எதையும் அததன் இடத்தில் வைத்து, நம்மவர் மதிக்க வேண்டும். கம்பனைக் கம்பனாக, சேக்கிழாரைச் சேக்கிழாராக, வள்ளலாரை வள்ளலாராக அவரவர் தகுதியறிந்து நம்மவர் போற்ற வேண்டும். நமக்குப் பிடித்த ஒரு கவியைப் போற்றலாம்; ஆனால், நாம் இன்னும் அறிந்து கொள்ளாத கவியைத் தூற்றக்கூடாது. நமக்குப் பிடித்த கவியை "அடடா! எவ்வளவு இனிமை!" என்று மேடைகளில் மெச்சலாம்; ஆனால், நாம் இன்னும் ஆழ்ந்து பயிலாத மற்றொரு கவியை "சை! அதென்ன கவி" என்று செருக்குடன் ஒதுக்கக் கூடாது. இது நம் விமர்சகர்கள் அறியவேண்டிய விஷயமாகும். ஷேக்ஸ்பியர் கவி மன்னன் என்பதற்காக, ஷெல்லி, கீட்ஸ், பைரன், டென்னிஸன் முதலிய கவிகளை ஆங்கிலேயர் தாழ்த்துவதில்லை. கவிக் கோயிலில், உள்ளெழுச்சியுடன் பாடிய உண்மைக் கவிகள் பலருக்கும் இடமுண்டு. இந்தக் கருத்து நம்மவர் உள்ளத்தில் இடம் பெற்றால், கவிக்கலை செழித்தோங்கும்.

## அவன்தான் ரஸிகன்!

உலக குபேரர்களில் ஒருவர் ராத்சைல்டு என்று நண்பர்களுக்குத் தெரியும். அவருடைய மாளிகைக்கு இரண்டு பிச்சைக்காரர்கள் சென்றார்கள்.

"முதலில் நான் உள்ளே போய் வருகிறேன். பிறகு, நீ செல்லலாம். இந்த மாதிரி பணக்காரர்களை எப்படிச் சரிப்படுத்துவது என்பது எனக்குத் தான் தெரியும்" என்று சொல்லி ஒருவன் உள்ளே சென்றான்.

பிரபுவின் சந்நிதானம் அவனுக்குக் கிடைத்தது. இவன் சொன்னதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த பிரபு, கடைசியில், இவனைத் தம் காரியதரிசியிடம் அனுப்பினார். அவர் இவனைத் தானாதிகாரியிடம் அனுப்பினார். தானாதிகாரி, கணக்குப் பிள்ளையிடம் அனுப்பினார். கணக்குப் பிள்ளை, வாசல் காவலனிடம் அனுப்பினார். வாசல் காவலன், இவனை ஒரு கல்தாக் கொடுத்து வெளியே அனுப்பினான்.

"என்ன கிடைத்தது?" என்று ஆவலோடு கேட்டான் வெளியே காத்திருந்தவன்.

"அப்படி யொன்றுமில்லை. ஆனால், ஒரு முக்கிய விஷயத்தைக் கண்டுபிடித்தேன். அது என்னவென்றால், அங்கேயுள்ள முறை ரொம்ப அற்புதமாயிருக்கிறது!" என்று மிகவும் ரஸனையோடு பதிலளித்தான் வெறுங்கையன்!

## மந்திரவாதி!

பிசாசு பிடித்த ஒரு பெண்ணுக்கு மந்திரம் செய்ய, ஒரு மந்திரவாதியை அழைத்து வந்தார்கள்.

பெண் ஆகாயத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்து, யாரையோ தள்ளுவது போல், இரண்டு கைகளையும் வீசிக் கொண்டிருந்தாள்.

மந்திரவாதி : "என்ன அம்மா செய்கிறாய்?"

பெண் : "ஒன்றுமில்லை. என்னைச் சூழ்ந்திருக்கும் இந்தப் பிரம்ம ராட்சஸிகளைத் தள்ளிக் கொண்டிருக்கிறேன்."

மந்திரவாதி : (திகைப்புடன்) : "பிரம்மராட்சஸிகளா! அவர்களை என் மீதா தள்ளி விடுகிறாய்? நான் போகிறேன், அம்மா" என்று சொல்லிக் கிளம்பி விட்டான்!

சிறு கதை :

# எமனுக்கு வரவேற்பு

**கே. வெங்கடாசலம்**

“கதை மொழிபெயர்ப்பன்று; கற்பனைதான். ஆனால், வங்க மோஸ்தரில் அமைந்துள்ளது” என்று நண்பர் உறுதி கூறுகிறார். வங்காள மொழிபெயர்ப்புகள் மலிந்து வரும் நேரத்தில், வங்க மோஸ்தருக்கும் மதிப்பு இருந்துதானே தீரும்? மோஸ்தரைப்பற்றிக் கவலையில்லை. படியுங்கள்; ரஸிப்பீர்கள்.

கைலாஸநாத பாபு கிட்டத்தட்ட நாற்பத்தேழு வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தார். கொடுத்து வைத்தவர் என்றால் அவர்தான். இத்தனை நீண்டகாலத்தில் துன்பத்தைக் கனவில்கூடப் பார்த்திராதவர். பணத்துக்கோ குறைவில்லை. அவரும் ஒரு கோடீசுவரரே. சொன்ன வேலையைக் கேட்க, ஏராளமான வேலைக்காரர்கள். நேரம் போவதே தெரியாது. வாழ்க்கையின் முழுச் சுவையையும் அனுபவிப்பவர் கைலாஸநாதர்.

குடும்பம் என்ற கொந்தளிக்கும் கடல் கூட, அவருடைய வாழ்க்கைத் தோணிக்கு வழிவிட்டது. தங்கமான குணம் பொருந்திய மனைவி; புருஷன் கீறிய கோட்டை அக்கினி வேலியாக மதிக்கும் சாது. மகனைப் பார்த்தால் கோடீசுவரனின் குமாரன் என்றே தெரியாது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாபுவின் திருக்குமாரி, சுகுணவதி என்ற பட்டம் பெற்றவள்.

இவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்த கைலாஸநாதருக்கு, 1924-ஆம் வருஷத்தை, ஒரு துர்ப்பாக்கிய வருஷமென்றே கூற வேண்டும். அந்த வருஷத்தில்தான் அவர் முதன்முதலாக மலேரியாவினால் பீடிக்கப்பட்டார். பணக்காரர்களுக்கு வியாதி வந்தால் சுலபத்தில் குணமாகாது என்ற விதி, பாபுவின் விஷயத்திலும் மெய்யாயிற்று. நோய் நீடித்துப் போயிற்று. தினசரி சிவில் ஸர்ஜன் பத்துத் தடவை வந்து போனார். அவருக்கென்று மாடியில் தனி அறை ஒன்று ஒதுக்கப்பட்டது. ‘ஸ்பிரிங்’ கட்டிலின்மீது இலவம் பஞ்சு மெத்தை போடப்பட்டிருந்தது. அந்த அறையே ஓர் ‘இங்கிலீஷ் மெடிக்கல் ஹால்’ ஆகக் காட்சி கொடுத்தது.

கைலாஸ பாபு படுக்கையில் விழுந்து ஆறு மாதங்களாகிவிட்டன. கட்டான தேகம் ‘வில வில’த்துப் போயிற்று. கண்கள் குழி விழுந்தன. எழுந்து நடக்கவும் சக்தியற்றுக் கிடந்தார். முகம் வெளுத்துக் காணப்பட்டது. தாம் இனிப் பிழைப்பது கடினம் என்பதை அவர் உணர்ந்திருக்கவேண்டும். இல்லையானால், அவர் வாய், சிவ நாம உச்சாடனம் செய்யவேண்டியதில்லையே!

மாலை நேரம். இருள் வருவதே பாபுவுக்குப் பயங்கரமாக இருந்தது. மின்ஸார விளக்கின் நீலவொளியில் ஓர் உருவம் கண்ணாடி டம்ளரை வைத்துவிட்டுப் போனது தெரிந்தது. மிகவும் தள்ளாடிக்கொண்டே டம்ளரிலிருந்த பாலைக் குடித்தார். பாலும் கசந்தது. ‘தொப்’பென்று தலையணை மீது சாய்ந்தவர், சற்றே கண்ணை மூடினார்.

ஒரு கனவு; இன்பக் கனவு. அது பூலோகம் இல்லையென்று நிச்சயமாகத் தெரிந்தது. அடர்ந்த விருட்சங்கள். மலையிலிருந்து விழும் நீர் வீழ்ச்சி. அருகிலே ஒரு தேவகன்னிகை. அழகே உருவெடுத்து நடம்புரிவது போன்ற எழில் தோற்றம். அவள் பாடிக்கொண்டிருந்தாள். பாட்டென்றால் பாட்டா? இல்லை; உள்ளத்தை உருக்கும் தெய்வீக கானம். அருவியின் சலசலப்பு, அந்தப் பாட்டின் பின்னணி ஸங்கீதமாக அமைந்தது. இந்தக் கானாமிர்த வாரிதியில் ஏதோ ஓர் அற்புதமான சக்தி மறைந்திருந்தது. கானம் இவரை ‘வா, வா’ என்று அழைப்பது போலிருந்தது. கொஞ்ச நேரத்தில் அந்தப் பெண்ணுடன் ஓர் ஆணுருவமும் சேர்ந்துகொண்டது. சிறிது கோரமான தோற்றம்தான். ஆனாலும், கருணையில்லாமலில்லை. ஒரே தாண்டவம்; கூத்தும் களிப்பும்.

‘டக், டக்’கென்ற சத்தம். கைலாஸ நாதர் திடுக்கிட்டு விழித்தார். கனவுலகிலிருந்து நனவுலகுக்கு இறங்கி வந்தார். கையில் ‘ஸ்டெதாஸ் கோப்’புடன் எதிரே டாக்டர் நின்றுகொண்டிருந்தார். அது எமனுடைய பாசக் கயிறு போல இருந்தது பாபுவுக்கு. டாக்டர் மெள்ள மெள்ள நகர்ந்து இவருடைய மார்பின்மீது அதை வைத்துப் பார்த்தார். பின்பு ஏதோ மருந்து கொடுக்கச் சொல்லிவிட்டு, வெளியே போக எத்தனித்தார்.

“டாக்டர்!” என்று, என்றுமில்லாத குரலில் பாபு கூப்பிட்டார். டாக்டர் ஸ்தம்பித்துப் போய்த் திரும்பினார்.

“டாக்டர்! உங்களை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். கேட்கலாமா?” என்று பாபு கேட்டார்.

“கேள்வியா? கேளுங்களேன்.”

“மரணத்துக்குப்பின் மனிதன் எந்நிலை அடைகிறான்?”

டாக்டர் கொஞ்சம் திகைத்துப் போனார். பக்கத்தில் கிடந்த நாற்காலியைக் கட்டிலினருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

“பாபு! ஏன் இதையெல்லாம் யோசிக்கிறீர்கள்? வியாதி சீக்கிரமே குணப்பட்டுவிடும்” என்று மெல்லிய குரலில் கூறினார்.

கைலாஸ நாதர் ‘கட கட’வென்று சிரித்துவிட்டார். வறண்டு போயிருந்த முகத்தில் அந்தச் சிரிப்புக்கூட ஏதோ பயங்கரமாகத்தான் இருந்தது. டாக்டரின் உடலில் ஒவ்வோர் உரோமக்காலும் குத்திட்டு நின்றது.

“டாக்டர்! நான் வேடிக்கைக்காகக் கேட்கவில்லை. ஒருக்கால் நான் சாக அஞ்சுகிறேன் என்று நினைக்கிறீர்களோ? இல்லவே இல்லை!” என்று சொல்லி, மீண்டும் சிரித்தார்.

“மரணத்துக்குப் பின் மனிதன் ஒன்றும் ஆவதில்லை. வீணாக மனசை அலட்டிக் கொள்ளாதீர்கள்” என்று கூறிவிட்டு டாக்டர் வெளியே சென்றார்.

கைலாஸ பாபு படுக்கையில் படுத்துக் கொண்டே யோசிக்கலானார். சாவு, சாவு! அவருடைய மனக் காதில் அது நாராசம் போலப் பாய்ந்தது. குபேர ஸம்பத்து, தங்கமான மனைவி, ஸந்தான பாக்கியம், உல்லாஸ வாழ்க்கை இவைகளை யெல்லாம் விட்டுப் பிரிவதா? சற்றும் முடியாத காரியம். ஆனால், அந்தக் கனவு, இனிய கீதம்?......இந்த எண்ணமெல்லாம் சேர்ந்து, அவரது மூளையைக் குழப்பின. சாக்காடு கரிய உருவில் அவரைப் பயமுறுத்தியது. கண்களை இறுக மூடி, முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டார்.

இரவு ஜாம மிருக்கும். நள்ளிரவின் அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. ஆனால், ஒரே ஒரு ஜீவன் மட்டும் அமைதியை நாடித் தவித்துக்கொண் டிருந்தது.

ஏணிப்படி வழியாக யாரோ வரும் சத்தம் கேட்டது. கைலாஸ பாபு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டார். வாசல் திரைச் சீலையை விலக்கி விட்டு, ஒரு பிரம்மாண்டமான உருவம் உள்ளே நுழைந்தது. சுமார் ஆறடி உயரம். உயரத்துக்கேற்ற ஆகிருதி. காவி யுடை. கையில் கமண்டலம். சந்நியாசிக் கோலத்திலும் முகத்தில் களை சொட்டிற்று.

பாபு ஆயிரமெண்ணங்கள் எண்ணினார். எமனே இவ்வித உருத் தாங்கி, தமது இன்ப வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வருவது போலிருந்தது. பாபுவின் உடல் நனைந்து விட்டது; வியர்த்து விறுவிறுத்தது. இரைந்து கூப்பிட முயன்றார்; வாயிலிருந்து வார்த்தை புறப்பட்டால் தானே!

அந்த உருவம் அவர் அருகில் வந்து உட்கார்ந்தது; ஆம், அந்த வியாதிப் படுக்கைமீதுதான்.

"கைலாஸ்! என்னைத் தெரியவில்லையா? நான்தான் சரணன். ஆம்; தெரிகிறதா?" என்று சாந்தமாகக் கேட்டார் அந்தப் புதியவர்.

"சரணன்! சரணன்! சரணா!" என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டே, பிரபு யோசித்தார்.

பிறகு, திடீரென்று "ஆ, சரணா! இந்நிலையிலும் என்னை மறவாத உன் அன்பே அன்பு!" என்று கட்டிக்கொண்டு அழுதார்.

சரணன் கைலாஸ பாபுவுக்குப் பள்ளித் தோழர். அவருடைய பால்ய வாழ்க்கையில் சரணன் ஒரு முக்கிய அம்சமாக விளங்கினார். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். படிக்கும்போது கூட, வேதாந்திபோல் காணப்பட்டார். தேவி உபாசகராக மாறிய சரண பாபுவின் சக்தி எங்கும் வியாபித்திருந்தது. அற்புதங்களெல்லாம் செய்ய வல்ல யோகி சரண பாபு என்று ஊரெல்லாம் பிரசித்தம். கைலாஸ நாதரும் அதைக் கேள்விப்பட் டிருந்தார்.

"கைலாஸ்! உனக்கு எது வேண்டுமோ, கேள். அளிக்கிறேன்"

"நிச்சயமாகவா?" என்று கைலாஸ் பாபு கேட்டார். அவருடைய கண்களில் என்றுமில்லாத பிரகாசம் மின்னியது.

"ஆம், சற்று முன் நீ கண்ட கனவு கூட எனக்குத் தெரியும். இப்பொழுது என்ன வேண்டும், சொல்."

"நான் இன்னும் வாழவே விரும்புகிறேன். இறக்க மனம் வரவில்லை" என்று தழதழத்த குரலில் கைலாஸ் பாபு கூறினார்.

"ஆனால், நீ கண்ட சொர்க்கத்துக்குப் போக, உனக்கு மனம் இல்லையா, உன் உள்ளத்தை உருக்கிற்றே அந்த தேவகானத்துக்காக வாவது? — யோசித்துச் சொல்."

கொஞ்ச நேரம் மௌனம். பின்பு, கைலாஸ் பாபு கூறினார்: "வேண்டாம் அந்த ஸொர்க்கம். இந்தப் பூவுலக வாழ்வையே நான் இச்சிக்கிறேன்."

"சரி; அவ்விதமே ஆகட்டும். ஒன்று மட்டும் நிச்சயம். சொர்க்கத்தின் அழைப்பு மீண்டும் வராது. சாவைக் கண்டு நீ அஞ்சுகிறாய். பாவம்! சாவு என்பதில்லாவிட்டால், நித்திய சுகத்தை அடைவதெப்படி?"

"சரணா! நீ கிருபை வை" என்று கைலாஸ் பாபு கைகளைக் கூப்பினார்.

"ஓம் சக்தி!" எனக் கூறிக் கொண்டே, சரணன் போய்விட்டார்.

படுக்கையிலிருந்து எழுந்த பாபு ஏதோ புதிய பலம் பெற்றது போன்ற உணர்ச்சி யடைந்தார். இரண்டடி நடந்து பார்த்தார். நன்றாக நடக்க முடிந்தது. நொடிப்பொழுதில் வியாதி பூர்ண குணம் ஆகிவிட்டது. எல்லாம் சரணன் கிருபை! உற்சாகத்துடன் கீழே இறங்கி வந்தார். சந்துஷ்டியான தமது குடும்பப் பார்லிமெண்டில் மீண்டும் தலைமை வகித்தார்.

ஏழு வருஷங்கள்—உண்மையிலே ஒரு பெரிய 'வியாழ வட்டம்' தான். ஆனால், காலச் சிற்பி இந்தக் காலத்தில் என்னென்ன காரியங்களை யெல்லாமோ செய்துவிட்டான். கைலாஸ நாதரின் வாழ்க்கையிலும் இந்த ஏழு வருஷங்கள் பெருத்த மாறுதல்களை உண்டு பண்ணின.

ஒன்றை யடுத்து ஒன்றாக எத்தனையோ சங்கடங்கள் அவருக்கு நேர்ந்தன. பாங்கி முறிந்துபோனதினால், அவரது செல்வத்தில் முக்கால் பங்கு குறைந்துவிட்டது. சரி; பணம்தான் போகட்டும். சங்கடங்கள், அவமானங்கள் இவைகளை யெல்லாம் எப்படிச் சகிப்பது? தங்கம்போல் இருந்த மனைவிக்கு எங்கே யிருந்துதான் அந்த வியாதி வந்ததோ? நூதனமான வியாதி. படுக்கையும் பாயுமாக மாதங்கள் பல கழிந்தன. ஆனால், குணமாகக்கூடிய சின்னமே தென்படவில்லை. மகனோ இவ்வளவு நாள் அப்பாவியாக இருந்தது, பாயுமுன் புலி பதுங்குவது போலத்தான் ஆயிற்று. கைலாஸ பாபுவின் வார்த்தைகளுக்கு அவன் காதே கொடுப்பதில்லை. குடியும் கூத்தியும் தனக்கென்று ஏற்பட்ட சம்பத்துக்கள் போல, பையன் அவைகளிலே அமிழ்ந்து விட்டான். கேட்பானேன்! மிகுந்திருந்த சொத்தும் குறைந்தது. போதாக் குறைக்கு, சர்க்கார் ஆஸ்பத்திரியில் மேகவியாதியால் பையன் நலிந்துகொண் டிருந்தான்.

கைலாஸ பாபுவுக்கு ஒரே ஒரு மனச் சாந்திதான் இருந்தது. அது அவருடைய அருமை மகளே. அதிலும் கடவுள் கண் வைத்துவிட்டார். திடீரென்று ஒரு நாள் அவள் யாருடனோ ஓடிவிட்டாள். அந்தோ! துர்ப்பாக்கியம், மனச் சஞ்சலம், அவமானம் எல்லா

மாகச் சேர்ந்து பாபுவை மீண்டும் படுக்கையில் தள்ளின.

பாபுவின் மனது யோசித்து யோசித்துச் சலித்துவிட்டது. இக வாழ்வு அவருக்குப் பெரும் பாரமாக, தவிர்க்கமுடியாத கொடும் தண்டனைபோல், இருந்தது. 'சட்' டென்று ஏதோ முடிவுக்கு வந்தவராக, மேஜை டிராயரை இழுத்தார். 'விறு, விறு' என்று கடிதம் ஒன்று எழுதி அதைச் சரண பாபுவின் விலாசத்துக்கு அனுப்பினார். பின்பு நிர்ச்சிந்தையாகத் தூங்கினார்.

ஒரு வாரம் சென்றது. மாலை நேரம். சாயங்கால 'டெலிவரி' உண்டு. பாபு மேல் மாடியில் படுத்துக்கொண்டிருந்தார். 'தபால்' என்றதும், திடுக்கிட்டு எழுந்தார். கை நடுங்கிக் கொண்டே தபாலைப் பெற்றார். சரணன் எழுதிய பதில். வாசித்ததும் அவரது முகம் வெறிச்சோடிப் போயிற்று. சரணன் எழுதியிருந்தார்: "கைலாஸ்! என்ன இருந்த போதிலும் உன் வேண்டுதலை மறுக்க மனமில்லை. முன்போல் அல்லாமல் எமனை முகமலர்ச்சியுடன் வரவேற்க, இப்போதேனும் தெரிகிறதா? அனுபவம் அறிவுக்கு விலை. ஆனால், சொர்க்கத்தைப் பணயம் வைத்த சூதாட்டம் அது. கைலாஸ்! அந்தச் சூதிலே நீ தேறி விட்டாயா?" முற்றிலும் எதிர் பாராத பதில்!

கைலாஸ நாதரின் உடம்பு நடுங்கியது. மண்டை சுழல்வதுபோல் இருந்தது. சற்றே கண்ணை மூடினார்.

பழைய கனவு இல்லை; அந்த இன்ப ஸொற்பனத்தைக் காணோம். உள்ளத்தைக் கவரும் அந்தத் தேவ கீதத்தையும் காணவில்லை. எம தாண்டவம் மட்டில், மெய் சிலிர்க்கும்படியான 'ஜல், ஜல்' என்று சலங்கை ஒலி துள்ள, தென்பட்டது. தாம் அந்தச் சலங்கை யொலியின் சுருதியிலே ஐக்கிய மாவது போன்ற பிரமை; தோற்றமுங்கூட. சாவுதான், தாம் விரும்பி அழைத்த சாவுதான். ஆனால், முகமலர்ச்சி யில்லை; சரணன் குறித்த சூதிலே அவர் தேறவில்லை. பாவம்! அந்த ஏழு வருஷங்களுக்கு முன்னேயாக விருந்தால்......?

---

# குருவியின் கனவு

'துறைவன்'

வானத்து வீதியிலே—இசையினை
வீசி யனற்கொழுந்து
போலத் திரியேனோ—ஒளியதைப்
போர்த்து விளங்கேனோ.

மெல்லச் சிறகசைத்தே—என்றன்
மெல்லியல் கூட வர
செல்லச் சிறு குரலால்—மாலைச்
செம்மையைப் பாடேனோ.

தென்னை மரத்தினிலே—தவழும்
தென்ற லசைந்தூதும்
மென்மை யொலியினிலே—ஊசல்
மேலெழுந் தாடேனோ.

பொங்கொளிச் சாகரத்தே—தேவர்
பொற்பந் தெழுந்தது போல்
தொங்கு முகில் கிழித்து—எழுந்திடும்
ஜோதியைப் பாடேனோ.

செங்கடல் மார்பினிலே—அந்திச்
செங்கதிர் மீதினிலே
தங்கப் பிழம்பெனவே—ஒரே
தாவிலே பாயேனோ.

---

# கோவா

ஏ. கே. செட்டியார்

சுதந்திர இந்தியாவுடன் சேர்ந்து ஐக்கியமாக வேண்டும்—போர்ச்சுகீஸியரிட மிருந்து விடுதலை யடைய வேண்டும் என்று உணரத் தொடங்கி விட்டனர் கோவா வாசிகள். இந்தியாவிலேயே ஒரு சிறு பகுதியா யிருந்தும், கோவாவின் மக்கள் வாழ்வது விசித்திரம். அங்கே நேரில் தாம் கண்ட காட்சிகளை நண்பர் விவரிக்கிறார்.



கோவா என்றதும் பால்கோவா ஞாபகம்தான் வருகிறது. ஆனால், நான் இங்கே எழுதுவது பால்கோவாவைப் பற்றி யல்ல; நமது நாட்டிலே போர்ச்சுகீசிய ருக்குச் சொந்தமான கோவா (Goa) என்னும் பிரதேசத்தைப் பற்றித்தான்.

வெஸ்டர்ன் இந்தியன் போர்ச்சுகீஸ் ரயில்வே என்பது ஒரு கம்பெனி. பெயர்தான் நீளமாக இருக்கிறதே தவிர, இந்த ரயில்வேயின் நீளம் சுமார் ஐம்பது மைல்தான். ஐம்பது மைலே யானாலும், அழகிய பல காட்சிகளைக் காண்கிறோம். மலைகளின் மீது குகைகளைக் கடந்து, இந்த வேகமில்லாத ரயில் 'கடக், கடக்' என்று செல்லும். 'கடக்' என்றால், எம். எஸ். எம். ரயில்வேயின் ஞாபகம் வருகிறதல்லவா? இந்த வெஸ்டர்ன் இந்தியன் போர்ச்சுகீஸ் ரயில்வேயையும் நமது எம். எஸ். எம். கம்பெனியார்தான் நிர்வகிக்கிறார்கள்.

கோவாவுக்குச் செல்லும் வழியிலே, சமுத்திர மட்டத்திலிருந்து 3000 அடி உயரமுள்ள மலையில் ரயில் செல்கிறது. வழியிலே அழகான பெரிய நீர்வீழ்ச்சி ஒன்றிருக்கிறது. அதற்குப் 'பால் நீர்வீழ்ச்சி' என்று பெயர். ''பெயர்தான் பால் நீர் வீழ்ச்சி; ஆனால், அது தண்ணீர்தான்'' என்றார் எனக் கருகிலிருந்த ஒரு பிரயாணி. அவர் ஒரு கோவாக்காரர். எனவே, இவ்வாறு அவர் கூறியதைக் குறித்து, நான் சிறிதும் ஆச்சரியப் பட வில்லை.

கோவானியர்கள் முதல் தரமான சமையல்காரர்கள். இந்தச் சமையல்காரர்களின் மூலமாகத்தான் கோவாவை நான் அறிமுகப் படுத்திக் கொண்டேன். வெளி நாடுகளுக்குச் செல்கிற பல கப்பல்களிலே இந்திய உணவுகளைத் தயாரிப்பவர்கள், இந்தக் கோவானியர்கள்தான். நியூயார்க்கில் ஓர் இந்திய உணவுச் சாலையில் சமையல் செய்பவரும் ஒரு கோவானியர்தான். சமையல் செய்வது கோவானியருக்குப் பிறப்புரிமை போலும்!

ஏழ்மைக்கு முதன்மை ஸ்தானம் எங்கே கொடுக்கலாம் என்று கேட்டால், கோவாதான் ஞாபகத்துக்கு வரும். மாடியில்லாத வீடுகள், களையில்லாத முகங்கள், செல்வம் இல்லாத மக்கள், சினிமா இல்லாத ஊர்கள், வியாபார மில்லாத துறைமுகம், வேகமில்லாத ரயில், தங்குவோர் இல்லாத ஹோட்டல்கள் முதலியவைகள் நிறைந்ததுதான் கோவா.

மார்ம கோவா என்பது துறைமுகம். இது இயற்கையிலேயே நன்றாக அமைந்திருக்கிறது. சென்ற வருஷம் அங்கே சென்ற பொழுது, மூன்று ஜர்மன் கப்பல்களைக் கண்டேன். அந்தக் கப்பல்கள் இந்தத் துறைமுகத்திலே சிறைப் படுத்தப் பட்டிருக்கின்றன. கப்பலிலுள்ள ஜர்மானியர்கள் அடிக்கடி கரைக்கு வந்து குடித்து விட்டுச் செல்வார்கள்.

மார்ம கோவாவிலே இரண்டு பெரிய ஹோட்டல்கள் இருக்கின்றன. ஒன்று கடற்கரைக்குச் சில கஜ தூரத்தில் இருக்கிறது. ஒரு காலத்தில் இந்த ஹோட்டல் மிகப் பிரபலமாக இருந்ததாம். இப்பொழுது அதன் பழம் பெருமையைக் காட்டும் சின்னங்கள்தான் அங்கே யிருக்கின்றன. ஆடுகிற கட்டில், உடைந்துபோன நாற்காலி, சுறு சுறுப்பில்லாத வேலையாட்கள், ஓடாத மின்சார விசிறி, எரியாத மின்சார விளக்குகள், எல்லாவற்றுக்கும் மேலாக, சுத்தம் செய்யப் படாத அறை, கப்பலில் மூன்றாவது வகுப்பி லிருப்பது போன்ற ஒருவித நாற்றம் இவை யனைத்தும் கொண்டது அந்த ஹோட்டல். உணவு வேண்டுமென்றால், முதல் நாளே கூறிவிட வேண்டும். 'உணவில் சுவையே கிடையாது' என்று நாம் கூறுவதற்கு முன், வேலைக்காரன் மாயமாய் மறைந்து விடுவான்.

இந்த ஹோட்டலிலே குளிப்பதற்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் விநோதமானவை. குளிக்கும் அறையில், தகரத்தால் செய்த நீளமான வாளி ஒன்றைக் கயிற்றில் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்கள். இந்த வாளி பூமியிலிருந்து சுமார் நாலு அடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். இந்த வாளியில் தண்ணீரை நிரப்பி யிருப்பார்கள். அதிலிருந்து நாம், ஒரு சிறிய பாத்திரத்தால், தண்ணீரை எடுத்து மேலே ஊற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு சௌகரியமாக ஸ்நானம் செய்து விட்டு, ஹோட்டலுக்கு வெளியே வந்த பொழுது, மூன்று ஜப்பானியர்கள் உட்கார்ந்து கொண்டு, பஸ் வருவதற்காகக் காத்திருந்தார்கள். வாஸ் கோடகாமா என்பது கோவாவிலுள்ள பெரிய ஊர்களில் ஒன்று. மார்ம கோவாத் துறைமுகத்திலிருந்து இந்த ஊர் நான்கு மைல் தூரத்தி லிருக்கிறது. இந்த ஊருக்கு ஆறு மணிக் கொரு ரயிலும், மூன்று மணிக் கொரு மோட்டார் பஸ்ஸும் தான் செல்லும். இந்த பஸ்ஸுக்காகக் காத்திருந்த மூன்று ஜப்பானியர்களும், அன்றைய தினம் துறைமுகத்துக்கு வந்த ஒரு ஜப்பானியச் சாமான் கப்பலில் வேலை பார்ப்பவர்கள். இவர்க ளருகே சென்று, பஸ் வர

நேர மாகு மென்றும், ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வாஸ்கோட காமா ஸ்டேஷன் மாஸ்டருக்கு டெலிபோன் செய்தால் அவர் அங்கேயிருந்து ஒரு டாக்ஸியை அனுப்புவார் என்றும், டாக்ஸிக்கு ஒன்றே கால் ரூபாய் வாடகையாகு மென்றும் அரை குறையான ஜப்பான் பாஷையில் உளறினேன். அந்தக் குள்ளர்கள் மிகவும் சந்தோஷப் பட்டார்கள். டாக்ஸிக்கு ஈவுப்படி பணம் கொடுத்தோம்.

பஞ்சிம் என்பதுதான் கோவாவின் தலை நகர். மார்ம கோவாவிலிருந்து சிறிது தூரம் கடல் வழியாகச் சென்று அக்கரை சேர்ந்து, பிறகு மோட்டாரில் செல்ல வேண்டும். கடல் பிரயாணம் சுமார் 3 மைலும் கரைப் பிரயாணம் சுமார் 10மைலு மிருக்கலாம். பஞ்சிம் நகரம் ஒரு துறைமுகமும் கூட. ஆனால், சிறிய கப்பல்கள்தான் இங்கே வரலாம்.

இந்த ஊரில் எங்கே பார்த்தாலும் 'டாவர்ன்கள்' (Taverns) இருக்கின்றன. சாராயக் கடைக்குப் போர்ச்சுகீஸ் பாஷையிலும் 'டாவர்ன்' என்றே பெயர். இந்தக் கடைகளுக்குப் பொதுஜன ஆதரவு மிக அதிகம். இங்கே தாய்நாட்டின் (போர்ச்சுக்கல்) உயர்ந்த சரக்குகளையும் விற்பனை செய்கிறார்கள். இந்தச் சாராய வகைகள், மற்ற இடங்களை விட இங்கே மிக மலிவாகக் கிடைக்கும். பம்பாய் மாகாணத்தில் பூரண மதுவிலக்கு அமுலி லிருந்த பொழுது, வழக்கமான பெருங் குடியர்களுக்கு இந்த ஊர்தான் அபய மளித்தது. குடிப்பதற்காக மட்டும் இந்தப் பிரபுக்கள் நூற்றுக் கணக்கான மைல் கப்பலில் பிரயாணம் செய்து இந்த நகருக்கு வருவார்கள். பொதுவாக, பஞ்சிம் நகரத்தைக் குடியர்களின் சுவர்க்கம் என்று கூறலாம்.

கோவாக் காரர்களுக்கு மீனும் சோறும் தான் ஆகாரம். சோறில்லா விட்டாலும் பாதகமில்லை; மீன்மட்டும் இருக்க வேண்டும். பஞ்சிம் நகரத்திலே பிரபலமான ஒருஹோட்டலுக்குச் சென்றேன். அங்கே என்ன இருந்தது? சூப் முதல் கடைசி வரை எல்லாம் மீன் சம்பந்தப் பட்டவைதான்!

கோவாவில் மிகவும் குறிப்பிடத் தக்கது, சில நூற்றாண்டுகளுக்கு முன்னே கட்டப்பெற்ற பிரபலமான கத்தோலிக்க மடம். இதனை ஸ்தாபித்த பெரியாரான பாதிரி காலஞ் சென்று விட்டார். அவரைப் பெரிய மகான் என்று கொண்டாடுகிறார்கள். அவருடைய பிரேதத்தைப் பக்குவமாக வைத்திருக்கிறார்கள். சில வருஷங்களுக் கொரு முறை இதனைப் பொது மக்கள் தரிசிப்பதற்காக வெளியில் காட்சியாக வைப்பார்கள். இது பெருந் திருநாளாக விருக்கும். இந்த மகானின் உடலைத் தரிசிக்க, இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டு வருவார்கள். இந்த மகானின் சுண்டு விரலை மட்டும் தனியாக ஒரு கண்ணாடிக் குழாயில் வைத்து மக்கள் வணங்குகிறார்கள். இந்தச் சுண்டு விரலை, சாதாரண நாட்களிலும் எல்லோரும் தரிசிக்கலாம்.

இந்த மடத்தின் தோற்றம் மிகவும் கம்பீரமானது. பெரிய அரண்மனையைப் போல் விசாலமானது. மடம் முழுவதும் பாதிரிமார்களாலேயே கட்டப் பெற்றது. இங்கே உள்ள சித்திர வேலைப்பாடுகள் மிக உயர்ந்த முறையில் அமைந்திருக்கின்றன. கோவாவில் இன்று தினமும் கிறிஸ்துவர்களுக்கு—அதிலும் கத்தோலியர்களுக்குத்தான் செல்வாக்கு அதிகம். கிறிஸ்துவர்களை விட ஹிந்துக்கள் அதிகமா யிருந்தபோதிலும், ஹிந்துக்களுக்கு அரசாங்கத்தில் போதுமான உரிமையில்லை; சலுகை யெல்லாம் கிறிஸ்துவர்களுக்குத்தான். இதனால்தான் கோவாவில் ஹிந்து - கிறிஸ்துவப் பிரச்சினை மிகப் பெரிதாக வளர்ந்திருக்கிறது.

கோவானியப் பெண்கள் பொதுவாக ஆயாள் வேலைக்குத் தகுதியானவர்கள்; நல்ல தேகக் கட்டுடையவர்கள். இவர்களில் சிலர் சுருட்டுக் குடிப்பார்கள். பாதி குடித்த சுருட்டை அணைத்து விட்டு, அதைக் கூந்தலில் சொருகிக் கொள்வார்கள். நமது நாட்டில் பூ வைத்துக் கொள்வது போல, கூந்தலில் அவர்கள் சுருட்டு வைத்துக் கொள்கிறார்கள்!

கோவாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் பெரும்பாலும் பெண் போர்ட்டர்களைப் பார்க்கலாம்.

கோவா எல்லா வகையிலும் மிகச் சிறிய நாடு. தங்கள் நாட்டை, போர்ச்சுகீசியர்களிடமிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டு மென்று கோவானியர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சுதந்திர இந்தியாவுடன் தாங்கள் ஐக்கிய மாவதில்தான் தங்கள் நாட்டுக்குப் பிரகாசமான எதிர்காலம் உண்டாகு மென்று கோவானியர்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். அவ்வாறு நேருமானால், நமது நாட்டிலே உடுப்பிக் காப்பிக் கிளப்புகள் குறைந்து, கோவானியக் காப்பிக் கிளப்புகள்தான் அதிகமாகிவிடும்!

---

## உண்மையான ஆவல்

இயேசு கிறிஸ்து, ஒருநாள் கடற்கரையோரமாய் உலாவிக் கொண்டிருக்கும் போது, ஒரு பக்தன் அவரிடம் வந்து, "கர்த்தரே! ஈசுவரனை ஒருவன் எப்படி அடையக்கூடும்?" என்று கேட்டான். இயேசு கிறிஸ்து, அப்படிக் கேட்டவனோடு சமுத்திரத்தில் இறங்கி, அவனைத் தண்ணீரில் அமிழ்த்தினார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனை விடுவித்து, கைகளைப் பிடித்துத் தூக்கி, "உனக்கு எப்படி யிருந்தது?" என்றார். பக்தன், "எனது ஸ்திதி வெகு பரிதாபகரமாக விருந்தது; எனக்கு அந்திய காலமே வந்துவிட்டதுபோலத் தோன்றியது" என்று பதில் சொன்னான். இதைக் கேட்ட இயேசு கிறிஸ்து, "இப்போது தண்ணீருக்குள் இருக்கும்போது மூச்சு விடுவதற்கு உனக்கு இருந்தது போன்ற ஆவல், ஈசுவரனைக் காண்பதற்கு இருக்குமானால் நீ அவனை நிச்சயமாகத் தரிசிப்பாய்" என்றார்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்

* *

நீ இவ்வுலகத்தினின்று ஐந்து வருஷம் முன்னரே போனால் என்ன? பின்னர்ப் போனால் என்ன? ஈசன் இட்ட கட்டளையில் தவறு எப்படி இருக்கும்? எந்தச் சக்தி உன்னை உண்டாக்கிற்றோ, அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம்? நாடகத் தலைவன் நடிகனைப் போ என்பதில் என்ன பிழை? ஐயோ! நாடகம் முழுதும் ஆடவில்லையே என்பாய். நாடகம் முடியவில்லை என்பது உண்மை. ஆனால் முடியாத நாடகமே நாடகத் தலைவன் இட்ட முடிவு. நாடகத்துக்காவது நாடகத்தின் முடிவுக்காவது நீ தலைவன் அல்ல. ஆகையால், கலங்காமல் உடலை விட்டு நீங்குவாயாக! சாந்தக் கடவுள் உன்னை விடுவிப்பான்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

# உங்கள் வதனம் வசீகர எழில்வாய்ப்பது எங்ஙனம்?

வசீகர எழில் அநேகமாக எல்லா மாதர்களும் பெறமுடியும். உங்கள் முகத்தைச் சரியாக பராமரித்து வராவிடில் உங்கள் சௌந்தரியத்தில் ஒரு பாகம் நீங்கள் இழக்க நேரும்

மாதர்கள் தங்களது சௌந்தரியத்தை விருத்தி செய்ய, பண்டு பண்டையிலிருந்தே கையாண்டுவரும் சிங்காரிப்பு வித்தைகள் பற்பல உள்ளன. ஆனால் முகம் பருபருத்து காந்தி குன்றி யிருக்குமாகில் எப்படிச் சிங்காரித்தும் யாது பயன்? மாசற்றுப் பட்டுப்போன்ற வதனம் ஸ்திரீகளின் வனப்பிற்கு இன்றியமையாத தல்லவோ! முகத்தை விகாரப்படுத்தும் கோடுகள், கரும் புள்ளிகள் முதலியன வியர்வை காரணமாக உள்ளிருந்து கழியும் மலமும் அழுக்கும் சருமத் துவாரங்களில் படிதலினாலேயாம். முகம் பருபருத்து காந்தி குறைவது கடும்வெயிலும் சூடான வரண்ட காற்றும் அடிக்கடி படுவதின் பயன்தான். பாண்ட்ஸ் க்ரீம் இடைவிடாது உபயோகித்தால் உங்கள் முகம் ரோஜா இதழ்போன்று மிருதுத்துவமும் புதுமையும் பெறும். அதிலடங்கியுள்ள அரிய தைலங்கள் மயிர்க் கண்களினுட் சென்று அன்றுடம் படியும் அசுத்தங்களை யெல்லாம் போக்குவதோடு வெயிலும் காற்றும் பட்டு, சருமம் வரண்டு போகாமல் போஷணை யளித்துக் காப்பாற்றவும் செய்கிறது. பிரதி காலையிலும் இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் கொஞ்சமெடுத்து விரல் நுனியால் முகத்திலும் கழுத்திலும் தேய்க்கவும். சொற்ப நேரம் அப்படியே யிருக்கட்டும். அது மயிர்க் கண்களினுட் சென்று எண்ணெய் அழுக்குகளைக் கரைக்கும். பின்பு துடைத்துக் களையுங்கள். பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். அது எண்ணெய்ப் பற்றுள்ளதன்று. அது சருமத்தை வெயிலும் காற்றும் புழுதியும் படாதபடி நிச்சயம் பாதுகாக்கிறது.




உடனேயே பாண்ட்ஸ் க்ரீம் உபயோகிக்கத் தொடங்குங்கள். சொற்ப வாரங்களுள் உங்கள் முகம் மிகவும் மிருதுத்துவம் வாய்ந்து நவயௌவன காந்தியோங்க விளங்கும்.

★ பாண்ட்ஸ் க்ரீம் ★

## ராஜாஜிக்குப் பதில் !

பாக்கிஸ்தான் பிசாசை
எதிர்க்கும்

## அகண்ட இந்தியா

பம்பாய் மாகாணத்தின்
மாஜி காங்கிரஸ் மந்திரி

**கே. எம். முன்ஷி**

எழுதிய அரிய நூல் அடுத்த
'சக்தி' மலராகும்

கொடுமுடி ராஜகோபாலன்
மொழிபெயர்ப்பு

அச்சில் இருக்கிறது
விரைவில் வெளிவரும்

---

## சக்தி மலர்கள்

**இனி நாம் செய்ய வேண்டுவது யாது ?** ரூ. 1 0

இந்நூல் மகாத்மா காந்தியடிகள் தமது குருவெனப் போற்றும் ருஷ்யப் பெரியார் லியோ டால்ஸ்டாய் எழுதிய 'What then must we do?' என்னும் அரிய நூலின் இனிய மொழி பெயர்ப்பு. இரண்டாம் பதிப்பு.

**கமலா முதலிய சிறு கதைகள்** ரூ. 1 0

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள கதைகளில் தமிழ்ப் பண்பு வீசுகிறது. இலக்கிய ரஸிகர்களுக்கு நல்விருந்து. ஆர். திருஞானசம்பந்தம் எழுதியது.

**சக்தி காரியாலயம்**

மதுரை காரைக்குடி

---

## அன்றுவேலையைநன்றுதுவக்குங்கள்

# நரஸூஸ்

## டீ அல்லதுகாபி அருந்தி

அன்று வேலைகளை நன்று செய்ய, காலையிலெழுந்தவுடன் அரை குறை தூக்கத்தையும், சோம்பலையும் துரத்தி, உற்சாகத்தையும் ஊக்கத்தையு மளிக்கவல்லது ஒரு கப் காபி அல்லது டீ தான். வாங்கும்போது நரஸூஸ் காபி, டீயை வாங்கத்தவருதீர்கள். அவைகள் எப்பொழுதும் உயர்ந்தவை.

மற்ற விபரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

**நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி**

ஹெட் ஆபீஸ் :—சேலம்.

MNK. 10 TM.

---

உயர்தரமான

# பேப்பர்கள்

## கிடைக்கும்

**செல்லப்பா & கம்பெனி**
பேப்பர் வியாபாரிகள்
காரைக்குடி

---

## உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

---

## அனுபவ ஜோதிஷர்

திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர் காலத்தைப்பற்றி 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

**புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி**
3/2, பிராடிஸ் ரோட், மயிலாப்பூர்
மதராஸ்

ஆசிரியர் :

வி. ஸ. காண்டேகர்

மொழிபெயர்த்தவர் :

வெ. ராம ராவ்



“ஏது, பெருத்த சமாதியில் ஆழ்ந் திருக்கிருப்போல் இருக்கே!”

ரேகையின் இந்த வார்த்தைகள் காதில் விழவும், அதுவரையில் ஏதோ வொரு புத்தகத்தில் புதைந் திருந்த தன் தலையை மேலே உயர்த்தினுள் சீலா. ஆழ்ந்த தூக் கத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு குழந்தையை வலுக்கட்டாயப் படுத்தி எழுப்பும் பொழுது, அதுவரையில் அதன் முகத்தில் நிலவிவந்த புன்னகையும் திருப்தி யும் மறைந்து, அருவருப்பும் அதிருப்தியும் தோன்றுகின்றன; சீலாவின் முகத்திலும் அத்தகைய தொரு மாறுதல் ஏற்பட்டது. மறு விஞடி ரேகை அவள் முன் பாக வந்து நின்று, போட்டோ எடுக்கு முன்னர் போட்டோகிரா பர் காமிராவை ஒழுங்குபடுத்து வதைப்போல, அவளைத் தீட்சண்ய மாய்ப் பார்த்துக்கொண்டு, “ஸ்வா ரஸ்யமான கட்டம் வாசிக்கும் போது நான் வந்ததால், பங்கம் ஏற்பட்டதோ?” என்று கேட் டாள்.

சீலாவின் முகத்தில் லேசான சிரிப்பு ஒன்று கோடிட்டதுபோல மின்னி மறைந்தது.

“எங்கே பார்க்கலாம், அப் படிப்பட்ட சுவாரஸ்யமான நாவல் தான் என்ன என்று.”

சீலா தான் படித்துக் கொண் டிருந்த புஸ்தகத்தை அவசரம் அவசரமாக மறைத்து விட்டாளாத லால், அது என்ன புஸ்தகம் என்று அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் ரேகைக்கு அதிகரித்தது. ரேகையைக் கொஞ்ச நேரம் அலக் கழித்து, அவளுடைய ஆத்திரமும் ஆர்வமும் உச்ச நிலை அடைந்த தும், சீலா பெருஞ் சிரிப்புடன் அந்தப் புஸ்தகத்தை வெளியே எடுத்து மேஜையின் மேல் வீசி யெறிந்தாள். என்ன புஸ்தகமது? அட பாவமே, ரேகையின் ஜன்ம விரோதியான பீஜகணிதம்!

மிருகக் காட்சிச் சாலையில் ஏதாவதொரு விசித்திர ஜந்துதென் படுமாயின், ஜனங்கள் எப்படி வாயைப் பிளந்து கொண்டு பார்ப் பார்களோ, அதே விதமாக ரேகை யின் கண்கள் சீலாவைப் பார்த்துக் கொண்டிருந்தன.

காலேஜில் சீக்கிரமாக நான்கு மணிக்கே ‘பிராக்டிகல்’ வகுப்பில் தன் பரிசோதனையை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்ட சீலா, ஒரு மணி நேரம் பீஜ கணிதக் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தாள். ஆனல், அதே போல நான்கு மணிக்கே காலேஜை விட்டுவிட்டு வந்த ரேகையினல், அந்த மாதிரி செய்ய முடியவில்லை. யாராவது நல்ல வெகுமதி தருவதாயிருந்தால் கூட, அப்படிச் செய்ய அவளால் முடியாது. ரசமான நாவல்களைப் படிப்பதற்கே உடம்பு வணங்கா மல், அவள் இத்தனை நேரம் அவர்களுடைய ஜாகைக்கு அருகாமை யில் ஓடிக்கொண்டிருந்த வாய்க் காலின் கரையில் நின்றுகொண்டு, தண்ணீரில் சிறு சிறு கூழாங்கற் களை எறிந்து, அப்படிச் செய்வத ஞல் நிர்மாணமாகும் வட்ட வடிவ முள்ள நீரலைகளின் உருவங்களைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந் தாள்.

இந்தச் சிறு பிள்ளை விளையாட் டில் ஈடுபட்டிருந்த அவளுக்குத் திடீரென்று காஞ்சனனுடைய நினைவு உண்டாயிற்று. சமீபத்தில் சில நாட்களாக, காஞ்சன னுடைய பேச்சினலும் சிரிப்பி ஞலும், வர்ணித்துச் சொல்ல முடி யாததோர் இன்ப உணர்ச்சி தன் உள்ளத்தில் ஏன் பிறக்கிறது? காஞ்சனனுக்கும் தனக்கு மிடையே சிறுவயதிலிருந்தே பழக்கமுண்டு. தவிர, தன் தமைய னின் ஆப்த நண்பன் என்ற முறை யில் சகஜமாகத் தன்னைக் காண அவன் அடிக்கடி வருகிறுன். அவ்வளவுதானே! அப்படி யிருக்க, தன் உள்ளம் அவனிடம் ஏன் இப்படி ஓர் அலாதிமாதிரியாக இப்போது திடீரென்று இழுத்துச் செல்லப்படுகிறது? சில சந்தர்ப் பங்களில் காற்றிலே மிதந்துவரும் ஏதோ வொரு நறுமணத்தினல் மனது மிகவும் பரவசமாகிறது; ஆனல், அந்த வாசனை நமக்கு எங்கிருந்து வருகிறது என்பதும், எப்படி வருகிறது என்பதும் விளங்குவதில்லை. அதே அனுபவம் தான் உண்டாயிற்று ரேகைக்கும்.

காஞ்சனன் முதன் முதலாக நடித்ததொரு ஸினிமாப்படம் இரண்டு மாதங்களுக்குமுன் அவ் வூரில் திரையிடப்பட்டது. அதில் அவன் மிக வெற்றிகரமாகவே நடித்திருந்தான். அவன் தன்னைச் சந்திக்க வரும்போ தெல்லாம், மேற்கண்ட காரணத்தினால் மாண வர்கள் அவனைக் காணக் கும்பல் கூடுவதே தன் மனம் அவனிடம் இழுக்கப்படுவதற்குக் காரணமாக இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு அவள் வந்தாள். ஆனால், மேலும் யோசிக்கையில், இந்தக் காரணம் அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை அவள் மனதுக்கு. பின்னே வேறென்ன காரணம் இருக்கக்கூடும்? இந்தக் குழம்பிய மனநிலையில் ஒருமுறை தண்ணீரில் கூழாங்கல்லுக்குப் பதிலாக ஒரு சிறு மண்ணாங்கட்டியை எறிந்து விட்டாள். நீரில் அலை ஒன்று என்னவோ பிறக்கத்தான் பிறந்தது. என்றாலும், பளிங்கு போல் தெளிந்திருந்த நீரில் மண் கட்டி விழுந்த இடத்தைச் சுற்றி வட்டமாகக் கொஞ்சதூரம் தண்ணீரில் கலக்கம் ஏற்பட்டு விட்டது—தெளிவு சிதைந்தது.

அவசரம் அவசரமாக, அவள் தங்கள் அறைக்குத் திரும்ப லானாள். அன்று 'பாக்யசக்ரம்' என்ற படத்தைப் பார்க்கவேண்டும் என்று காஞ்சனனுடன் தாங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தது மாலை நான்கு மணி அடிக்குமட்டும் அவளுக்கு நன்றாக நினைவில் இருந்தது. 'ப்ராக்டிகல்' வகுப்பில் ஏதோவொரு ரஸாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது, ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றிக் கொண்டிருந்த அவளுக்கு, இந்த இனிய நினைவுதான் ஒருவாறு ஆறுதல் அளித்துவந்தது. ஆகையால், மரத்தின் குளிர்ந்த நிழலில் நின்ற வண்ணம் வாய்க்கால் நீரில் அலைகளை எழுப்பி விளையாடிக் கொண்டிருந்தபொழுது, உண்மையில் அவள் தன் மனப்பொய்கையில் எழுந்த பற்பலவிதமான எண்ண அலைகளில் ஈடுபட்டு மூழ்கி யிருந்தாள்.

தான் தங்கள் அறையைச் சமீபிக்கும்போது, சீலாவும் காஞ்சனனும் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்துகொண்டு வம்பளந்து கொண்டிருப்பார்கள் என்று அவளுடைய கற்பனை ஒடிற்று. காஞ்சனன் தன்னைப் பார்த்துக் கேட்பான்: "என்ன ரேகா! இது வரைக்கும் எங்கே ஓடிப் போயிருந்தே?" தான் அதற்குப் பின்வருமாறு பதில் தருவாள்: "ஸினிமா ப்ரபஞ்சத்தில் உழலும் ஜனங்களுக்கு ஓடிப்போவதைத் தவிர வேறே என்ன தெரியும்?" தன் குல்லாவைக் கரகரவென்று கைவிரலில் சுற்றிக்கொண்டே காஞ்சனன் கேட்பான்: "ஆனால், நான் இன்று அவசியம் வருவேன் என்பது உனக்கு ஞாபக மில்லையே!" தான் சீலாவைப் பார்த்த படியே பதில்தர வேண்டும்: "நான் இங்கில்லை என்பதற்காக நீ என்னவோ ஆகாசத்தைப் பார்த்துக்கொண் டிருக்கவேண்டி வரவில்லை யல்லவா? அது தவிர, இந்தப் பகல்வேளையில் ஆகாசத்தில் கேவலம் ஒரு நட்சத்திரமாவது தென்படுமா? ஆனால், உன் பாக்கியம் உன் எதிரில் இப்பொழுது இரண்டு ஒளிமிக்க சுக்ரநட்சத்திரங்கள் மின்னிக்கொண் டிருக்கின்றனவே!"

சுந்தரமான நட்சத்திரங்களைக் கண்டு ஆனந்திக்கும் எண்ணத்துடன் நடுமுற்றத்துக்கு வந்து, அங்கே பரவியுள்ள அமாவாசைக் காரிருளைக் கண்டு ஏமாற்றமடைந்தால் எப்படியிருக்கும்? அதே நிலைமை ஏற்பட்டது ரேகைக்கு. அவள் திரும்பிவந்தபோது, காஞ்சனனின் சுவட்டையே காணோம். அறையில் ஏதாவது சுவாரஸ்யமான புத்தகத்தைப் படிப்பதில் சீலா ஈடுபட்டிருக்க வேண்டுமென்று சென்றது அவள் ஊகம். ஆனால், சீலா உண்மையில் எதைப் படித்துக்கொண்டிருந்தாள் என்பதைக் கண்டதும், அவளுக்குப் பெரு வியப்புண்டாயிற்று! நெருப்பின் ஜ்வாலையினின்று தப்பி, அதன் மூலகாரணமான கனி தழலில் விழுவது எங்கேயாவது உண்டா?

"எனக்கு ரொம்ப ஆச்சரியத்தை உண்டாக்குகிறதடி யம்மா உன் செய்கை ஒவ்வொன்றும்."

சீலா தன் புருவங்களைக் கொஞ்சம் உயர்த்தினாள்.

"சீலா! உனக்கு இருதயம் என்பதே கிடையாதாடீ?"

"கிடையாது; சாதாரணமாக நாவல்களில் காண்கிறோமே கதா நாயக நாயகிகள், அவர்களுக்கு இருப்பதைப் போன்ற இருதயம் என்னவோ எனக்குக் கிடையாது."

சீலாவின் இந்த மறைமுகமான குத்தல் ரேகையின் உள்ளத்தில் படாமல் இருக்கவில்லை. இருந்தாலும், அது ஒன்றும் தனக்குப் புரிந்ததாக வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொண்டு, அவள் கேட்டாள்: "ஏனடீ சீலா! இந்த ஸாரமற்ற படிப்பில் உனக்கு அலுப்புத் தோன்றுவதே கிடையாதாடீ?"

"ஏனடி யம்மா! சேற்றில் இறங்கி வேலைசெய்ய அருவருப்பும் அலுப்பும் கொண்டால், உழவனுக்குச் சரிப்படுமா?"

"சபாஷ், சீலா! உன்னைப்போல் குறைந்தது இன்னும் பத்துப்பேர் உழவர்களாக மாறினால், கிராமங்களுக்குத் திரும்பிப் போங்கள் என்று நம புனருத்தாரணத் தலைவர்கள் கரடியாய்க் கத்தவேண்டி ஏற்படாது. படித்த வாலிபர்கள் பட்டாளம் பட்டாளமாகக் கிராமங்களைத் தேடி ஓடுவார்கள்."

தன் ரூபலாவண்யத்தைக் குறித்து மறைமுகமாக ரேகை இவ்வாறு புகழ்ந்தது, தான் விதவையாக இருந்துங்கூடச் சீலாவுக்கு மகிழ்ச்சியைத் தராமல் இருக்கவில்லை. ஒரு நல்ல பாடகனை, அவனைப்போலவே நன்றாகப் பாடக் கூடிய வேறு நான்கைந்து பாடகர்கள் நன்றாய்ப் பாராட்டினால் தான் உண்மையான ஆனந்தம் உண்டாகிறது; அவ்வண்ணமே தன் சௌந்தர்யத்தைப் பற்றி, தன்னை யொத்த மற்றோர் அழகியிட மிருந்தே கிடைக்கும் புகழுரை ஓர் அழகிய பெண்ணுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சீலாவுக்கு ஆனந்தம் உண்டானால்கூட, அவள் அதைச் சற்றும் வெளிக்குக் காட்டிக் கொள்வது கிடையாது. இந்த முறை ரேகையினிட மிருந்து வந்த இந்தப் புகழுரையை, ஒருகொட்டாவி விட்ட வண்ணமே அவள் கேட்டுக் கொண்டாள். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு ரேகை கேட்டாள்: "மணி என்னடி?"

சுவரின் புறமாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்த டைம்பீஸை இந்தப் பக்கமாகத் திருப்பினாள் சீலா. மணி சற்றேறக்குறைய ஆறு ஆகியிருந்தது. சீலா கடிகாரத்தை இந்தப் பக்கம் திருப்பிக்கொண் டிருக்கும் போது, அவளுடைய மணிக்கட்டு

சூன்யமாக இருந்ததை, ரேகை உடனே கண்டுகொண்டாள்.

"ரிஸ்ட் வாட்ச் எங்கேடி உன்னுடையது?"

"வெளியே கொடுத்திருக்கிறேன்."

"யாருக்கு?"

"காஞ்சனனுக்கு."

காஞ்சனன் வந்திருந்தானு! எப்பொழுது? சீலா தன் கைக் கடிகாரத்தை அவனுக்கு எப்போது தந்தாள்? ரேகைக்கு இது ஒரு பெரிய புதிராகவே இருந்தது. காஞ்சனன் தன்னைக் கேட்டுத் தன் கடிகாரத்தை வாங்கிக்கொள்வதை விட்டு, சீலாவின் கடிகாரத்தை வாங்கிக்கொண்டு போனது ரேகையின் மனதை ரொம்பவும் உறுத்திற்று. அவளுக்குண்டான வெறுப்பில், தன் கோபத்தை மௌனம் சாதித்துக் காட்டியிருக்கலாம், ஆனல், சகஜமாக மனித சுபாவமே அப்படித்தான்; ஏதாவது ஒருவிதமான பரபரப்பு ஏற்பட்டு விட்டால், அது கண்ணில் விழுந்துவிட்ட கரித் துண்டுமாதிரி, சும்மா உட்கார்ந்திருக்க விடாது.

"காஞ்சனனுக்கு என்னத்துக்கு வேண்டியிருந்ததாம் உன் கடிகாரம்?"

"அவர் நடிக்கவேண்டிய புதிய சமூகப் படம் ஒன்று தொடங்கப் போகிறதல்லவா, கூடிய சீக்கிரத்தில்? அதில் கதாநாயகனை நடிக்கும்போது தரித்துக்கொள்ளவாம். என் கடிகாரம் அவருக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதாம்."

"கடிகாரம்தான் பிடித்திருக்கிறதோ—அல்லது.........."

சீலாவின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டதும், ரேகைக்கு மேலே பேசத் துணிச்சல் ஏற்படவில்லை. பொறுமை என்னும் முள் அவளுக்குத் தெரியாமலேயே அவள் உள்ளத்தில் குத்திக்கொண்டிருந்தது; இதன் காரணமாக, அவளது நெஞ்சில் ஒருவித வேதனையும் ஏற்பட்டிருந்தது. தான் மாலை ஆறு மணிக்குள் அங்கே வந்து சேராவிட்டால், அவ்விருவரையும் நேராகவே தியேட்டருக்கு வந்துவிடும்படி காஞ்சனன் சீலாவிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறுன் என்பதை அறிந்ததும், அந்த முள்ளின் குத்தல் இன்னும் அதிகரித்தது.

சீலா வற்புறுத்திய தன்மேல், தியேட்டருக்கு நடந்தே போவதற்கு ரேகையும் சம்மதித்தாள். கோடை காலமானதால் வற்றிப் போயிருந்த ஆற்றைக் கடந்து செல்லும் குறுக்குப்பாதை வழியாகப் போகலாம் என்று தீர்மானமாயிற்று. ஆற்றின் அக்கரையில் அவர்கள் சென்றுகொண்டிருந்த ஒற்றையடிப் பாதையினருகில், அவர்களுக்கு அறிமுகமான சில நண்பர்கள் வசிக்கும் ஒரு சிறிய பங்களாவிலிருந்து, ஒரு மரத்தில் பூரணமாகப் பூத்திருந்த பாரிஜாத மலர்களின் வாஸனை, நாலாபுறத்திலும் கம்மென்று வீசியது. அந்த இனிய மணத்திஞல் இழுக்கப்பட்ட ரேகையின் உள்ளத்தில் திடீரென்று அவளால் அடக்க முடியாத ஓர் ஆவல் எழுந்தது. அந்தப் பங்களாவின் காம்பௌண்டுக்குள்ளே சென்று கொஞ்சம் பாரிஜாத மலர்கள் பறித்து வர வேண்டுமென்று அவள் விரும்பிஞள். அதனுல் அவள் சற்றுத் தயங்கித் தயங்கி நின்றுள்; ஆனல், சீலாவோ இதைக் கவனித்தவளாகவே தோன்றவில்லை.

"சீலா, உனக்குப் பிடிக்காதாடீ இந்தப் புஷ்பங்கள்?"

"ஏனடீ, ரேகா! நீயும் நானும் கிட்டத்தட்ட ஒரு வருஷ காலமாய் ஒரே அறையில் வசித்துக்கொண்டு வருகிறோம்; இன்னும் உனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை போல் இருக்கு நாலுபேரைப் போல நானும் மனுஷ ஜாதியைச் சேர்ந்தவள் தான் என்று."

"பாரிஜாதப் புஷ்பங்கள் இவ்வளவு சமீபத்தில் கைக்கெட்டும் படியான சந்தர்ப்பம் கிடைத்த பின், யாராவது சும்மா இருப்பார்களா?"

"சும்மா இருக்காமல் என்ன செய்யச் சொல்றே?"

"ஒரு நாலு பூவையாவது பொறுக்கி எடுத்துக் கொள்கிறது."

"புஷ்பத்தின் மணம் கிடைத்த பின், அதோடு திருப்தி யடையாமல், அந்தப் புஷ்பமே வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால் சரிப்படாது. புஷ்பங்கள் என்ன, நாலே நான்கு நாழிகை நேரத்தில் வாடிக் கருகிப் போகின்றன. அதைவிட அவற்றின் வாசனையைப் பற்றிய நினைவு மாத்திரம் நம் மனதில் நிரந்தரமாக இருக்கும்படி அனுபவித்துவிட்டு, தூரத்திலிருந்தே போய்விடுவது மேலல்லவா?

அன்று படம் பார்த்துக் கொண்டிருந்தபோது, ரேகையின் மனநிலை சரியாக இருக்கவில்லை.

இதற்குமுன் ஒருமுறை காஞ்சனன், தான் முதன் முதலாக நடித்திருந்த படத்தைப் பார்ப்பதற்கு அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்றிருந்தான்; அன்று சீலா ஒரு பக்கத்திலும், மத்தியில் ரேகையும், ரேகையின் மற்ருெரு பக்கம் காஞ்சனனுமாக அமர்ந்திருந்தார்கள். இன்றும் அதே முறையில் தாங்கள் உட்காரவேண்டும் என்று அபேட்சித்திருந்தாள் ரேகை. ஆனல், நடந்தது வேறு விதமாக! காஞ்சனன் தானகவே சீலாவுக்கும் ரேகைக்கு மிடையில் அமர்ந்து கொண்டான். படம் ஆரம்பமான பிறகு, இடையில் இரண்டொருதரம் அவன் சம்பாஷித்த தெல்லாம் சீலாவுடன் தான். அவன் பக்கத்தில் ரேகை என்ற பெயர்கொண்ட தொரு சிலை உட்கார்ந்திருந்தாற்போலவே தோன்றிற்று. ஒரு முறைகூடத் தவறியும் இவள் பக்கம் அவன் திரும்பவில்லை.

(தொடரும்)

## வேலைக்காரி போல!

வேலைக்காரி எஜமானனுடைய வீட்டை "எங்களுடைய வீடு" என்கிருள். என்ருலும் அவ்வீடு அவளுடைய தல்ல வென்றும், அவள் வீடு வெகு தூரத்துக்கப்பால் ஒரு குக்கிராமத்தில் இருக்கிறதென்றும் அவளுக்கு நன்ருய்த் தெரியும். அவளது நினைவெல்லாம் அவளுடைய சொந்த வீட்டைப் பற்றியே யுள்ளது. இன்னும், அவள் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கும் தன் எஜமானனுடைய குழந்தையை, "என் ஹரி வரவரப் பொல்லாதவனுகி விட்டான். என் ஹரி இதையெல்லாம் சாப்பிடுவான்" என்கிருள். என்ருலும், ஹரி அவளுடைய குழந்தையல்ல வென்பது அவளுக்குத் தெரியும். என்னிடம் வருபவர்களிடம், இந்த வேலைக்காரியைப் போல் பந்தமற்ற வாழ்க்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று சொல்கிறேன். இவ்வுலகத்தில் அவர்கள் வாழ்ந்தபோதிலும், அதனுடன் சம்பந்தப்படாமல் எல்லாருடையவும் உறைவிடமாகிய ஈசுவரனிடம் சித்தத்தைத் திருப்பவேண்டுமென்று சொல்கிறேன். பக்தியின் பொருட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று, நான் அவர்களுக்குக் கூறுகிறேன்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்

**வாழ்க்கை விநோதம் :**

*அது அலுக்காத ஹாஸ்யக் களஞ்சியம்..........*
*ஆனால், கடைசியில் அந்தப் பயல்..........*

# மாமாவின் கால் — 'உல்லாஸி'

எங்கள் மாமா வேலுசாமியின் காலை நீங்கள் பார்த்தீர்களானால், சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகி விடுவீர்கள். அந்த மாதிரி காலை நான் வேறெங்கேயும் பார்த்ததே யில்லை. அந்த அஷ்டகோணலை என்னால் பூர்ணமாய் வர்ணித்துச் சொல்லமுடியாது. அவர் என்னை நோக்கி வீதியிலே நடந்து வருவாரானால், என் விலாவறுந்து போகும்; அப்படிச் சிரிப்பாய்ச் சிரித்து விடுவேன்.

சில விசித்திரப் பொருள்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிவிட்டால், நமக்கு அவற்றின் தமாஷ் மறந்துபோவதுண்டு. ஆனால், எங்கள் மாமாவின் கால் அப்படிப்பட்டதல்ல; அது எத்தனைமுறை பார்த்தாலும் அலுக்காத ஹாஸ்யக் களஞ்சியமாகும்.

ஏதோ நான் ஒருவன் மாத்திரந்தான் அந்தக் காலின் ஆனந்த விகடத்தைப் பார்த்துப் பருகிக் கொண்டிருப்பதாக, நீங்கள் எண்ணிவிடவேண்டாம். இல்லவே யில்லை. இது சரதம்; முக்காலும் சரதம். இன்னும் பல பேர் அதைப் பார்க்கிறார்கள்; ரசிக்கிறார்கள்; சிரிக்கிறார்கள்.

எங்கள் மாமா பஸ்ஸிலே ஏறுவார். அந்தப் பக்கம் பார்த்து ஒரு முகம் சிரிக்கும். மற்றொரு முகம் வாயில் துணியை அடைத்துக் கொள்ளும். இன்னொன்று ஆகாயத்தை நோக்கும். பீச்சிலே போய், அந்த ஸிமெண்டுப் பெஞ்சியில் அவர் உட்காரட்டுமே, இதே கதைதான். அவர் காலைக் கண்ட கூட்டத்திலே பல தினுசுச் சிரிப்புகள் பல விதமாய்க் கிளம்பும்.

ஆனால், ஒன்று. என் மாமாவின் முகத்துக்கு நேரே, அவர் காலைப் பார்த்து நான் சிரிப்பது கிடையாது. சிறு வயது முதலே மாமாவிடம் மிக மரியாதையாய் நடந்து கொள்ளும்படி நாங்கள் வளர்க்கப் பட்டிருக்கிறோம். மேலும், தன் காலின் பிறவி அமைப்புக்கு ஒரு மனிதன் எப்படிப் பொறுப்பாளியாவான் என்று நான் அறியாமல் இல்லை.

நானும் மாமாவும் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் என்னைக் கண்டீர்களானால்; மாமாவுக்குக் கால் என்ற ஒரு சமாசாரம் இருப்பதாகவே அறியாதவன் போல நான் நடந்துகொள்வதைக் காண்பீர்கள். அவருக்கு அருகே நிற்கும்போது, நான் தலையைக் குனியக்கூட மாட்டேன். குனிந்தால், அவர் கால் என் கண்ணில் தென்படாமலிருக்காது; அது தென்பட்டால், எனக்குச் சிரிப்பு வராமலிராது; சிரிப்பு வந்தால், அதற்கு வேறே ஏதாவது பொய்க்காரணம் கட்டித் தளுக்காய்ச் சமாளிக்க வேண்டும். (இந்தமாதிரி சில சமயம் நடந்துமிருக்கிறது.) இந்தத் தொல்லையெல்லாம் எதற்கு?

என் நண்பர்களான எத்தனையோ பேரிடம் எங்கள் மாமாவின் கால் அழகைப்பற்றி நான் வர்ணித்திருக்கிறேன். அதைக் கேட்ட மாத்திரத்திலே எல்லோரும் விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். மேயும் பசுமாடுகள் கூட. எங்கள் மாமாவின் காலைப் பார்த்ததும் அதிசயமாய்த் தலையைத் தூக்கிப் பார்க்கும் என்றால், நீங்களே அதை ஊகித்துக்கொள்ளுங்களேன். பசுமாடுகள் சிரிக்குமென்று நீங்கள் எதிர்பார்க்க வியலாது. ஆனால், அவைகளுக்கு யோசிக்கும் திறமையில்லை யென்று நீங்கள் சொல்லமுடியாது. மாமாவை அவைகள் பார்க்கும் பார்வையைக் காணும்போது, அவை "என்னால் இதை நம்பமுடியவில்லை. காலா இது! இதைக்கொண்டா இந்த ஆசாமி நடக்கிறான்! இல்லை; இது ஏதோ ஜாலம்" என்று நினைப்பது போல எனக்குப் புலப்படும். அவ்வளவு வெறிப்பு அவைகளின் கண்ணிலே தோன்றும்.

மாமாவின் கால் ஹாஸ்யத்தை எல்லாரும் ரஸிப்பதாக நான் சொல்ல வில்லை. சில ஜனங்கள் கண்ணைமூடிக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஹாஸ்யமெல்லாம் எங்கே தென்படப் போகிறது? இன்று காலைதான், ஒரு முட்டாளைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். ஒரு மனிதன் எவ்வளவு மூடனாகவும் அதிகப் பிரசங்கியாகவும் இருக்கமுடியும் என்பதை அப்போதுதான் கண்டேன்.

தன் வீட்டு வாசலில் என்னைக் கண்டவுடனே, அவன் என்னிடம் நெருங்கி வந்தான். ஏதோ பெரிய ரகஸ்யம் சொல்லுகிறவன் மாதிரி, என் காதோடு காதாக, "எனக்குச் சிரிப்பென்றால், ரொம்பக் குஷி" என்றான்.

"யாருக்கும் அப்படித்தான்" என்று நான் ஒப்பம் வைத்தேன்.

"ஒரு விஷயம். சொன்னால் கோபிக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்ற பீடிகையுடன், "நீங்களும் உங்கள் மாமாவும் வீதியிலே நடக்கும்போது எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வருகிறது" என்று அவன் 'கிசுகிசு'த்தான்.

என்ன விஷயம் வரப்போகிறது என்று நான் ஊகித்துவிட்டேன். ஆகையால், நகைப்புடன், "கால் தானே?" என்று மெல்லிய குரலில் கேட்டேன்.

"ஆமாம்" என்ற அவன், வாயைக் கையால் பொத்திக் கொண்டு, கலகலவென்று நகைத்தான்.

"ரொம்ப ஸரி. அதில் என்ன தப்பு? உள்ளதைச் சொன்னால், கோபித்துக்கொள்ள, நான் அவ்வளவு முட்டாளல்ல. எனக்கேதான் அப்போது சிரிப்பு வருகிறது."

அவன் ஆச்சர்யத்தால் மிரள மிரள விழித்து, "பேஷ்! பேஷ்!! பேஷ்!!!" என்று கூச்சலிட்டு, "பலே! தன் காலைக் கண்டு, தானே சிரிக்கும் ஆசாமியை நான் இதுவரையில் கண்டதே யில்லை" என்று முடித்தான்.

பிறகு, என் காலை ஒரு முறை கண்ணோட்டம் விட்டு, 'கலீர்' என்று வயிறு வெடித்து விடும் போல் சிரித்தவண்ணம், திடீரென்று ஓடி, தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டான்.

அயோக்கியப் பயல்! என்ன துடுக்கு! அவன் மாத்திரம் இனி வெளியே தலையைக் காட்டட்டும். என்ன செய்கிறேன், பாருங்கள்.

# ஹிந்து மதம்

சுப்பிரமணிய சிவா

> அறிவே தெய்வம் என்றால், சிலை எதற்கு? இந்தக் கேள்விக்கும் இன்னும் பல ஐயங்களுக்கும் இவ்வரிய கட்டுரையில் பதில் கிடைக்கும். காலஞ் சென்ற சிவா எழுதிய இது, 1920-ஆம் ஆண்டு, காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தாரால் முதன் முதல் வெளியிடப்பட்டது.

## நம்பிக்கையே பிரதானம்

இது ஹிந்து மதத்தின் முதற் கொள்கை. கடவுள் இருக்கிறாரென்று நம்பவேண்டும்.

கடவுள் என்பது யாது?

எல்லா வகைகளிலும், எல்லா ரூபங்களிலும், இடையின்றி, ஓயாமல் எப்போதும் அசைந்து கொண்டிருக்கும் இந்த உலகத்தினுள்ளேயிருந்து இதை ஆட்டுவிக்கும் சக்திக்குக் கடவுள் என்று பெயர்.

அதன் வடிவம் யாது?

கடவுளின் வடிவம் சைதன்யம், சுத்தஞானம், சுத்த அறிவு, சுத்த உணர்வு, சுத்த போதம். 'சுத்த அறிவே சிவம், சிவம்' என்று தாயுமானவர் முழங்குகிறார்.

இந்த உலகத்தை உள்ளிருந்தசைக்கும் சக்தி ஞான வடிவமானதென்று நாம் கண்டுகொள்வதெப்படி?

உலகத்தின் பொதுமையாகிய இயற்கை முன்வடிவம், மனிதன் முதல் செடிகொடிகளீறாக உள்ள ஜீவர்கள் பின்வடிவம்; இயற்கை பூர்வ ரூபம், ஜீவர்கள் உத்தர ரூபம்; இயற்கை தாய்ப் பொருள், ஜீவர் மகப் பொருள்; இயற்கை சட்டி, ஜீவர்கள் அகப்பை.

பூர்வ ரூபத்திலில்லாத வஸ்துவும் குணமும் உத்தர ரூபத்தில் ஏற்படாது. தாய்ப்பொருளில்லாத இயல்பும் குணமும் மகப்பொருளில் தோன்றாது. சட்டியில் உள்ளதுதான் அகப்பையில் வரும்.

ஜீவர்களிடத்துச் சைதன்யம் இருப்பதால், இயற்கையினுள்ளே சைதன்ய சக்தி இருக்கிறதென்றும், ஜீவர்களிடத்தே சைதன்யந்தான் பூத ரூபங்களைத் தன்னிஷ்டப்படி ஆட்டுவிப்பதால், இயற்கையிலும் சைதன்ய ரூபியாகிய பரமாத்மாவே பூத ரூபங்களை இயக்குகிறாரென்றும் நிச்சயப்படுத்திக் கொண்டோம்.

* * *

**இந்தக் கடவுளை நம்புவதென்றால், எப்படி நம்பவேண்டும்?**

உடல், பொருள், ஆவி மூன்றையும் அவருடைய திருவடிகளில் ஒப்படைத்து விடவேண்டும். செய்கைகளையெல்லாம் அவருக்கு, பூஜாத் திரவியங்களாக ஸமர்ப்பிக்க வேண்டும்.

அறிவை அவருக்குத் திருக்கோயிலாகச் சமைத்துவிடவேண்டும். எல்லாப் பாரங்களையும் அவர் பொறுப்பாகச் சார்த்திவிடவேண்டும். எல்லாக் கஷ்டங்களையும் எல்லாத் துன்பங்களையும் எல்லாக் கவலைகளையும், அவருடைய திருநாமத்தை நினைத்த அளவில் மறந்துவிடக் கற்கவேண்டும்.

'நெஞ்சகமே கோயில், நினைவே
சுகந்தம், அன்பே
மஞ்சன நீர், பூஜைகொள்ள
வாராய் பராபரமே!'

என்றும்,

'செப்புவதெல்லாம் ஜபம், நான்
சிந்திப்பதெல்லாம் உன்
ஒப்பில் தியானம் என
ஓர்ந்தேன் பராபரமே!'

என்றும் தாயுமானவர் பாடியிருக்கிறார்.

குழந்தை தாயை நம்பியிருப்பது போலவும், வேலையாள் எஜமானனை நம்பியிருப்பது போலவும், ஊசி காந்தத்தை நம்பியிருப்பது போலவும் ஒருவன் கடவுளை நம்பவேண்டும். இங்ஙனம் கடவுளை நம்பிக் கவலைகளையெல்லாம் நீக்கி, ஐயத்தை அறுத்தெறிந்துவிட்டு, நிறைந்த சந்தோஷத்துடன், ஒருவன் உடலைக் காக்கும் பொருட்டாகவும் அறிவை வளர்க்கும் பொருட்டாகவும் உலக நன்மைக்காகவும் தனக்குத் தனக்கு இயல்பான கடமைகளைச் செய்து கொண்டிருக்கவேண்டும். தனக்குத் தனக்கு நியாயமாக இயற்கையிலேயே கிடைக்கும் இன்பங்களை அனுபவித்துக் கொண்டு, விருப்பு வெறுப்புக்கள் இல்லாமல், இவ்வுலகத்தைச் சொர்க்கமாக எண்ணி நடக்க வேண்டும்.

எங்கும், எப்போதும், யாருக்கும், எதற்கும், எந்தக் காரணம் பற்றியும் பயப்படக்கூடாது.

இங்ஙனம் கடவுளை நம்பி வழிபடுவோன், எல்லாவிதமான பயங்களும் நோய்களும் தீர்ந்து இவ்வுலகத்திலேயே அமரத்தன்மை (அதாவது சாகாத நிலை) அடைகிறான். இவ்வண்ணமே ஸ்ரீமத் பகவத்கீதையில் கண்ணபிரான் சொல்லுகிறார்:

'அர்ஜுனா! குளிரையும் வெப்பத்தையும், இன்பத்தையும் துன்பத்தையும் விளைவிக்கும் இயற்கையின் தீண்டுதல்கள் தோன்றி மறையும் இயல்புடையன; அவை என்று மிருப்பவை யல்ல. அவற்றைப் பொறுத்துக்கொள்.'

[கீதை இரண்டாம் அத்தியாயம், 14-ஆம் சுலோகம்.]

'புருஷரேறே! இவற்றால் வருத்தப்படாமல் இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கருதும் தீரபுருஷன் சாகாதிருக்கத் தகுவான்—'

[கீதை இரண்டாம் அத்யாயம், 15-ஆம் சுலோகம்.]

எல்லாப் பொருளையும் தானாகவும், தன்னை எல்லாப் பொருள்களாகவும் எவன் கருதுவானோ, அவன் இந்த மண்ணுலகத்திலேயே சாகாத நிலையாகிய அமரநிலையெய்துவானென்பது ஹிந்து மதத்தின் ஸித்தாந்தம்.

சைவம், வைஷ்ணவம், த்வைதம், அத்வைதம் முதலியன ஹிந்துமதப் பிரிவுகள். இவையெல்லாம் வேதத்தையே ஆதாரமாக உடையன.

* * *

**விடுதலை பெற்ற ஜீவன் முக்தன் என்ன விதமான குணங்களையும் ரூபங்களையும் அடைவானென்பதைப் பிரத்யட்சமாகவும் சூசனையாலும் விளக்கும் பொருட்டாக, நம் ஆலயங்களிலுள்ள தேவச்சிலைகள் சமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சிலைகள் மனிதர் பக்தி

பண்ணுவதற்கு ஸஹாயமானவை. ஆனால், சிலைகளில் மாத்திரமே ஈசன் இருக்கிறானென்று ஹிந்துக்கள் நினைப்பதாகச் சிலர் எண்ணுகிறார்கள். இது தவறு. ஈசனைத் தொழுதல் சுலபமாக இருக்கும் பொருட்டுத் தற்காலத்துக்கு அவரை ஒரு சிலையில் ஆவாஹனம் செய்து ஹிந்துக்கள் கும்பிடுகிறார்கள்.

'' சொல்லடா ஹரி யென்ற
கடவுள் எங்கே ?
சொல் ! '' என்று ஹிரணியன் தான்
உறுமிக் கேட்க,
நல்லதொரு மகன் சொல்வான் :
'' தூணில் உள்ளான் ;
நாராயணன் துரும்பில் உள்ளான் ! ''
என்றான் :
வல்லமை சேர் கடவுள் இல்லா
வஸ்துவில்லை ;
மஹா சக்தி இல்லாத இடம்
ஒன்றில்லை ;
அல்லல் இல்லை ! அல்லல் இல்லை !
அல்லல் இல்லை !
அனைத்துமே தெய்வம் என்றால்
அல்லல் உண்டோ ? '

(பாரதி)

* *

மேலும், ஹிந்துமதம், அவனவன் வாழ்க்கை மேம்படவேண்டுமாயின் அதற்குப் பிறரை எதிர்பார்த்தல் அவசியமில்லையென்றும், அவனவன் செய்யும் நற்செயல்களால் இம்மையிலேயே உயர்ந்த பயன்களைப் பெறலா மென்றும் கற்பிக்கிறது.

பிற பல மதங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்தில் ஒருவனுக்குள்ள விசேஷ உதவி என்னவென்றால், ஒருவன் கடவுளை இறந்த பின்னால் தான் பார்க்கலாமென்று பிற மதங்கள் சொல்வது போலன்றி, ஒருவன் கடவுளைத் தன் பக்தியின் மஹிமையால் இவ்வுலகத்திலேயே பார்த்து அவனருளால் இந்த மண்ணுலகத்திலேயே அமரத்தன்மை பெற்று நித்திய வாழ்க்கை வாழலா மென்று ஹிந்து மதம் போதிக்கிறது.

' திருமா லிருஞ் சோலை மலை
என்றேன்—என்னத்
திருமால் வந்தேன் நெஞ்சு
நிறையப் புகுந்தான் ! '

என்று நம்மாழ்வார் பாடியிருக்கிறார்.

---

# பச்சை குத்தல்

**மு. அருணாசலம்**

> வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் பச்சை குத்திக் கொள்வதுண்டு. காரணத்தோடுதான். இதேமாதிரி உலகெங்கும் முன் காலத்திலே பச்சை குத்தி வந்தார்கள் பல காரணங்களால். பச்சை குத்திக்கொள்வதை நம் பழம் புலவர் கவிகளிலும் பாடி யிருக்கிறார்கள். அதை யெல்லாம் விரிவாய் விளக்கும் இது வொரு ரஸமான ஆராய்ச்சி.

நாகரிகம் முதிர முதிர, எத்தனையோ பழைய வழக்கங்கள் மறைந்து வருகின்றன. பச்சை குத்திக் கொள்வதென்பதும் அவற்றுளொன்று. இது நல்லதா கெட்டதா, அல்லது இது வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிக் கவலையில்லை ; இந்த வழக்கம் இப்போது மறைந்து வருகிறதென்பது உண்மை.

பழைய காலத்திலே, இது ஒரு தேசத்து மக்களிடந்தான் தோன்றிற்று அல்லது ஓரினத்து மக்களிடந்தான் காணப்பட்டது என்பதாகச் சொல்ல முடியாது. உலகெங்குமே இவ்வழக்கம் பரவியிருந்தது. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த எகிப்திய மக்களிடத்திலும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த சீன மக்களிடத்திலும்,பச்சைகுத்துகிற வழக்கம் இருந்து வந்தது. உயர்ந்த நாகரிகம் வாய்ந்த கிரேக்கரிடமும் இருந்தது; காட்டு மிராண்டிகளான அமெரிக்கப் பூர்வ குடிகள், நீக்ரோவர், எஸ்கிமோக்கள் முதலியோரிடமும் இருந்தது. பர்மாவிலும் இந்தியாவிலும் இருக்கிற தென்பதை நாம் அறிவோம்.

பச்சை குத்துகிற வழக்கம் எதனாலே ஏற்பட்டது? இது ஒரு ரசமான கேள்வி. புராதன மக்கள் தங்களை அழகு படுத்திக் கொள்வதற்காகவே பச்சை குத்திக் கொண்டார்கள். ஆடவரை வசீகரிக்கவேண்டிப் பெண்கள் இந்த 'அலங்கார'த்தைச் செய்து கொண்டார்கள் ; ஆண்களும், தங்களைப் பெண்கள் விரும்ப வேண்டுமென்ற கருத்தோடு இதைச் செய்து கொண்டார்கள். அராபியர் தங்கள் குழந்தைகளுக்கு அடையாளமாகப் பச்சை குத்துவதுண்டாம். மிலேச்ச ஆஸ்திரேலியாவிலே, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனி அடையாளம் ஒன்று உண்டாம் ; அந்த அடையாளத்தைத் துடையில் எழுதிக் கொள்வார்களாம். சில தேசங்களிலே, குழந்தைகள் பன்னிரண்டு வயதைக் கடந்து வாலிபப் பருவமடைந்தார்கள் என்பதைக் காட்டப் பச்சை குத்துவதுண்டு. கிரேக்க நாட்டிலுள்ள திரேஸ் நகரத்து உயர்குலப் பெண்டிர் தங்கள் குலப்பெருமையைக் காட்டப் பச்சை குத்திக் கொள்வதுண்டு என்று ஹெரோடாடஸ் என்ற ஆசிரியர் கூறுகிறார். காட்டுமிராண்டிகள் மிகப் பயங்கரமான முறையில் பச்சை குத்திக் கொள்வார்கள் ; இது அவர்களுடைய தைரியத்துக்கும் வீரத்துக்கும் அடையாளமாம் ; தவிர, இதைக் கண்டு விரோதிகள் அஞ்சி ஓட வேண்டுமாம் !

பச்சை குத்திக் கொண்டால் தான், சொர்க்க லோகத்துக்குப் போக முடியும் என்ற கொள்கை எஸ்கிமோக்களிடையிலும் பீஜித் தீவினரிடையிலும் இருக்கிறது.

வெள்ளைக்காரரிடையிலும் இந்த வழக்கமுண்டு. ராணுவத்தை விட்டு ஓடிப் போனவனுக்கும் ராணுவத்தில் சரியானபடி நடந்து கொள்ளாதவனுக்கும் சில எழுத்துக்களை அடையாளமாகப் பச்சை குத்தி விடுகிற வழக்கம், சென்ற நூற்றாண்டு வரையில் இங்கிலாந்தில் இருந்தது. மாலுமிகளுக்கும் வெள்ளைக்காரப்! படைவீரர்களுக்கும் இதிலே அதிக மோகம் இருக்கக் காண்கிறோம். தங்கள் பெயரையோ படையிலே தங்களுக்குரிய எண்ணையோ முன் கையில் அடையாளமாகக் குத்திக் கொள்வார்கள் ; போரில் ஈடுபட்டு இவர்கள் இறந்துபோய், உடல் சின்னா

பின்னமாக நேரிட்டால், இந்த அடையாளங்களைக் கொண்டு தெரிந்துகொள்ள முடியுமல்லவா?

இப்படியாக, பச்சை குத்துவதற்கு எத்தனையோ காரணங்கள். பச்சை என்று மட்டும் நாம் சொன்னபோதிலும், வேறு பல நிறங்களும் உண்டு. சிவப்பு நிறத்தில் குத்திக்கொண்டிருப்பதை எங்கும் காணலாம். சில நாடுகளில், நெருங்கிய உறவினராவது உற்ற நண்பராவது இறந்துபோனால், துக்கம் கொண்டாடுவதற்காக, வெள்ளை நிறம் அல்லது மஞ்சள் நிறத்தை வைத்துக் குத்திக் கொள்வதுண்டாம்.

பச்சை குத்துகிற முறையும் பழமையான முறைதான். 'பச்சை குத்தலையா அம்மே - பச்சை குத்தலையா ?' என்று கேட்டுக்கொண்டு தெருவில் குறத்தி போவாள். கூப்பிட்டு விட்ட பிறகு, அவள் போய் ஒரு வகைப் பச்சிலை கொண்டு வருவாள். என்ன வடிவத்திலே குத்திக் கொள்ள விரும்புகிறார்களோ அந்த வடிவத்தைப் பச்சிலைச் சாற்றினால் கையில் எழுதி விடுவாள். அதன்மேல் நெருக்கமாக ஓர் ஊசி கொண்டு குத்தி, அந்தச் சாற்றை உள்ளே செலுத்துவாள். இந்தச் சாறு உள்ளே இறங்கி, இரத்தத்தில் கலந்து, பட்ட இடத்திலுள்ள தோலை எப்போதும் பச்சை நிறத்தோடிருக்கச் செய்து விடுகிறது. ஊசியால் குத்தும் போது வலிக்கத்தான் செய்யும். ஆனாலும், குத்திக்கொள்பவர்கள் எப்படியோ அந்த வலியைப் பொறுத்துக் கொள்ளுகிறார்கள். இதிலே அவ்வளவு மோகம்.

நம் நாட்டிலே எந்தெந்த விதங்களில் மக்கள் பச்சை குத்திக் கொள்ளுகிறார்களென்பது பார்க்க வினோதமாயிருக்கும். நெற்றியின் மத்தியிலே ஒரு பொட்டு, அல்லது நாமம் போட்டதுபோல ஓர் ஒற்றைக் கோடு; இது சாதாரணம். இதுபோக, முன்கையிலும் மணிக்கட்டின் மேலும் விரலின்மேலும் கோலம் போலக் குத்திக் கொள்வதுமுண்டு. இவை யாவும் வெறும் அலங்காரத்துக்கென்றே எண்ணலாம். சிலர், தங்களுக்குப் பிரியமானவர்கள் பெயரை - அதாவது, குழந்தை, பெற்றோர், குரு முதலியோர் பெயரை - எழுதிக் கொள்வார்கள். எல்லாவற்றிலும் விசித்திரமானது வேறொன்று உண்டு. தேள், பூரான் முதலிய விஷ ஜந்துக்களின் உருவத்தைத் தங்கள் கையில் எழுதிக் கொண்டோர் தொகை அதிகம். வெள்ளைக்காரர்களும் தங்கள் முன் கைகளில் பாம்பு முதலியவற்றின் வடிவத்தைக் குத்திக்கொண்டிருக்கக் காண்கிறோம். இந்த உருவங்களைப் பச்சை குத்திக்கொண்டால், இந்த ஜந்துக்கள் தங்களைக் கொட்ட அல்லது கடிக்கமாட்டா என்று மக்கள் நம்புகிறார்கள். அப்படிக் கொட்டவோ கடிக்கவோ நேர்ந்தாலும், இவற்றின் விஷம் தங்களை ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையும் உண்டு. இல்லாவிட்டால், அச்சம் விளைவிக்கிற இந்த விஷ ஜந்துக்களின் உருவத்தை யாராவது விரும்பி எழுதிக் கொள்ள முன் வருவார்களா?

பக்தி காரணமாகத் தங்கள் இஷ்ட தெய்வத்தின் உருவத்தை எழுதிக் கொள்வது மற்றொரு வகை. முருகன், கண்ணன் முதலிய தெய்வங்களின் அழகிய குழந்தை வடிவத்தைப் பலர் எழுதிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். தாங்கள் வழிபடுகிற தெய்வத்தின் ஞாபகம் எப்போதும் தங்களுக்கு இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இப்படிச் செய்து கொள்கிறார்கள்.

இது சம்பந்தமாக, அப்பர் சுவாமிகள் சரித்திரத்திலுள்ள ஒரு சம்பவம் இங்கே நினைவுக்கு வரலாம். சிவபெருமானுடைய அடையாளங்களான சூலக் குறியையும் ரிஷபக் குறியையும் தம் உடம்பிலே தரிக்கவேண்டும் என்று சுவாமிகள் விரும்பினாராம். பெண்ணாகடத்திலே சென்று இறைவனை நோக்கி, "மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேற் பொறி" என்றும், 'இடபம் பொறித்து என்னை என்று கொள்ளாய்'' என்றும் பிரார்த்தித்து, அங்ஙனமே பொறிக்கப் பெற்றாராம்.

வைதிக ஒழுக்கமுடைய வைஷ்ணவர்கள், இன்றும் 'முத்திரா தானம்' பெற்று வருகிறார்கள்; அதாவது திருமாலின் அடையாளங்களான சங்கு சக்கரம் என்னு மிரண்டையும் காய்ச்சி, அந்தச் சூடு காரணமாக அவற்றின் குறி எப்போதும் தோளில் இருக்கும்படி அவற்றைச் சூட்டோடு ஒத்திக் கொள்கிறார்கள். இவ்வாறு கடவுளுடைய சின்னங்களைப் பொறித்துக் கொள்வது பக்தி காரணமாக எழுந்த செயல்.

இவற்றைப் போலவே, பழைய காலத்தில், மற்றொரு காரணத்துக்காகப் பச்சை குத்திக்கொள்ளும் வழக்கம் இருந்தது. சிறந்த வீர புருஷனைக் கண்டபோது, அவனைப் போலவே நாமும் ஆகவேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படுகிறது. அவனை ஒரு லட்சிய புருஷனாகவே கொள்கிறார்கள். இப்படி ஈடுபடுவதன் காரணமாக, அவ்வீரன் பெயரைத் தங்கள் மார்பில் எழுதிக் கொள்கிற வழக்கமும் உண்டாயிற்று. வீரனுடைய பெயரை மார்பில் எழுதிக் கொண்டதால் மட்டும் வீரம் வந்துவிடுமா? தான் ஒரு வீரனாகிவிட முடியுமா? முடியாதுதான். ஆனால், இதில் ஒரு நல்ல பலன் இருக்கவே செய்கிறது. அடிக்கடி ஒருவன் தன் உடம்பிலே இந்த எழுத்துக்களைப் பார்க்க நேரிடுகிறது. பார்க்கும்போதெல்லாம், அந்த வீரனுடைய புகழும், அவன் செய்த வீரச் செயல்களும் நினைவுக்கு வரும். அது காரணமாகத் தானும் அவனைப் போலப் புகழ் பெற வேண்டுமென்ற ஆசை இயல்பாக உண்டாகும். ஒரு லட்சிய புருஷனுடைய ஞாபகம் வந்த மாத்திரத்திலே, அவன் கொண்டிருந்த உன்னத லட்சியத்தைத் தானும் கொண்டு, அதை அடைய முயலுவான். ஒருவேளை, அந்த லட்சியத்தை அணுக முடியாமலே போகலாம். ஆயினும், அதை நோக்கிச் சிறிதாவது முன்னேறுவதற்கு இந்த நினைவு ஒரு தூண்டுகோலாயிருக்கும்.

வாழ்க்கையிலே காணும் மற்றொரு உண்மையும் இக் கருத்தைச் சற்றே தெளிவு படுத்தும். பக்திமான்களான முதியவர்கள் சிலர், தாங்கள் செய்யும் எந்தக் காரியத்துக்கும், கூடவே, சண்முகா அல்லது சங்கரா அல்லது ராமா, கிருஷ்ணா என்று சொல்வதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆணவமுனைப்பை அகற்றுவதற்காகவும், ஆண்டவனுடைய நினைவு அகலாதிருப்பதற்காகவும், பக்திமான்கள் இவ்விதம் சொல்லிப் பழகிக் கொள்ளுகிறார்கள். அன்றியும், முடிவு காலத்தில், அவனுடைய திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இவ்வுலகத்தை நீத்துச் செல்வதற்கும் இப்பழக்கம் ஒரு நல்ல சாதனமல்லவா?

இதை நினைவில் வைத்துக் கொண்டு, வீரனுடைய பெயரை மார்பிலே எழுதிக்

கொள்ளுகிற வழக்கத்தைக் கவனித்தால், அதுவும் மிக்க பயனுடையதென்பது புலப்படும். இப்படிப்பட்ட விஷயத்தைப் புலவரொருவர் சொல்லுகிறார். வாணன் என்ற ஒரு பெரிய வீரன் இருந்தான். அவன் சிறந்த படைப் பலமுடையவன். அதோடு, அவன் நாடும் மிக்க செழிப்புடையது. இக்காரணங்களினாலே, அப்போதிருந்த அரசர்களிற் சிலர்கூட அடிக்கடி வாணனுடைய உதவியை நாடுவார்கள். சிலர், படையை அனுப்பி உதவவேண்டுமென்று வேண்டுவார்கள். வேறு சிலர், தங்கள் நாட்டில் பயிர் விளையாமல் பஞ்ச மேற்பட்ட படியினாலே, உணவுக்கு வேண்டிய நெல் அனுப்பவேண்டும் என்று இரப்பார்கள். அவரவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் வாணன் தருவான். இப்படியாக, கொடையாலும் வீரத்தாலும் அவன் அக்காலத்து அரசர்களுக்கும் ஒரு லட்சிய புருஷனாக விளங்கினான். அவனுடைய கொடைத் திறனையும் வெற்றிப் பிரதாபத்தையும் அவர்கள் எக்நேரமும் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இதைத்தான் புலவர் சொல்ல வந்தார். கவியாகச் சொல்லுகிறார்.

அரசர்கள் வீட்டிலே குழந்தை பிறக்கிறது. பிறந்த குழந்தை திடகாத்திரமா யிருக்கிறது; மார்பு அகன்று விரிந்திருக்கிறது; இதைக் கண்டு அந்த அரசர்களுடைய தேவிகள் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்:

பேரரசர் தேவிமார்
பெற்ற மதலையர்தம்
மார்பகலம் கண்டு
மகிழ்வரே.........

என் இந்த மகிழ்ச்சி?

—போர் புரிய
வல்லான் அகளங்கன்
வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று!

வாணனுக்கு, வாணனென்றும் அகளங்கனென்றும் எத்தனையோ பெயர்கள், எத்தனையோ விருதுகள், பட்டங்கள். அத்தனைப் பெயர்களையும் விருதுகளையும், அந்தக் குழந்தையின் அகன்ற மார்பிலே எழுதி விடலாமல்லவா? எழுதுகிற பெயர்கள் அதிகமாயிருந்தால், வீர உணர்ச்சியும் அதிகமா யிருக்குமல்லவா? இதனால்தான் அந்தத் தேவிமாருக்கு அவ்வளவு மகிழ்ச்சியாம்.

## கதம்பம்

வியாசர் சொல்லாத கதை: தர்மபுத்திரர் ஒரு பொய் சொன்னார். அதற்காக நரகத்தைப் பார்த்துவிட்டுச் செல்ல நேர்ந்ததல்லவா, அப்போது ஓர் அறையில் சிலர் தூண்களில் கட்டப்பட்டு மெலிந்து கிடந்தார்களாம்.

"இவர்கள் யார்?" என்றார் தர்மர்.

"இவர்கள் அசட்டு வியாபாரிகள்" என்று பதிலளித்தான் சித்ரகுப்தன்.

அடுத்த அறைக்குப் போன போது, அங்கேயும் சிலர் தூண்களிலே கட்டப்பட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் 'கொழு, கொழு' என்று வலிவோடு இருந்தார்கள்.

"இவர்கள்?" என்று கேட்டார் தர்மர்.

"சமர்த்து வியாபாரிகள்" என்று பதில் கிடைத்தது.

தர்மருக்கு ஒன்றும் புரியவில்லை. "அவர்கள் ஏன் இளைத்திருக்கிறார்கள்? இவர்கள் ஏன் கொழுத்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

"சற்று நேரத்தில் அதை நீங்கள் நேரே காணலாம்" என்றான் சித்ரகுப்தன்.

கொஞ்ச நேரத்தில், வியாபாரிகளின் உணவான கஞ்சி வந்தது. ஒவ்வொரு வியாபாரிக்கும் எதிரே அரை அடி தூரத்தில் கஞ்சிக் கலயம் வைக்கப்பட்டது. ஒவ்வொருவனுக்கும் ஒரே ஒரு கையை மட்டில் அவிழ்த்து விட்டு, இரண்டடி நீளமுள்ள ஓர் அகப்பையை அந்தக் கையோடு கட்டிவிட்டார்கள். எதிரே கஞ்சியிருந்தும் குடிக்க வகை தெரியாமல், அசட்டு வியாபாரிகள் சும்மா உட்கார்ந்திருந்தார்கள்.

சமர்த்து வியாபாரிகளோ அப்படி இல்லை. ஒவ்வொருவனும் தன் தன் அகப்பையைக் கொண்டு, அடுத்தவனுடைய கலயத்திலிருந்து எடுத்து, அவனுக்கு ஊட்டினான். இப்படியாக, ஒவ்வொருவனும் அடுத்தவன் உதவியால் பசியாற்றிக்கொண்டான்!

தர்மசாலி: கைலாசவாசலில் போய் நின்று, உள்ளே நுழைய வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள் ஒரு பெண்.

"நீ யார்?" என்று கேட்டார் நந்திபகவான்.

பெண்: "நான் யாரா? நான் ஒரு பரோபகாரி. தர்மமெல்லாம் செய்திருக்கிறேன்."

நந்தி: "என்னென்ன தர்மங்கள் செய்திருக்கிறாய்? ஒன்றிரண்டு சொல், பார்க்கலாம்."

பெண்: "என் வீட்டுக்கு அருகே ஒரு முடவன் வந்தான். பரிதாபப்பட்டு இரண்டணாக் கொடுத்தேன்."

நந்தி: "சித்திரகுப்தரே! இது நிஜமா?'

சித்திரகுப்தன்: "ஆமாம், சுவாமி. இவள் கணக்கில் அந்த இரண்டணாவை வரவு வைத்திருக்கிறேன்."

நந்தி: "சரி பெண்ணே! இன்னும் ஏதாவது தர்மம் செய்திருக்கிறாயா?"

பெண்: ஆஹா! பத்திரிகை விற்கும் ஒரு சிறுவனிடம் ஓர் அணா விலையுள்ள ஒரு பிரதி பத்திரிகை வாங்கினேன். நாலணாவைக் கொடுத்து, சில்லறை வாங்க மறந்துவிட்டேன். திருட்டுப் பயல்! அவனாவது ஞாபகமூட்டினானா? இல்லை. அந்த மூன்றணாவையும் தர்மச் செலவிலேயே எழுதிக்கொண்டேன்."

நந்தி: "குப்தரே! இதுவும் சரிதானா?"

சிததிரகுப்தன்: "உண்மைதான் சுவாமி!"

நந்தி: "இன்னும் ஏதாவது உண்டா?" என்று கேட்டார்.

பெண் சிறிது தயங்கி நின்று, "சட்டென்று ஞாபகத்திற்கு வரவில்லை. என் கணக்கை........." என்று இழுத்தாள்.

சித்ரகுப்தன் குறுக்கிட்டு, "சுவாமி! இந்தப் பெண்ணை என்ன செய்வது?" என்று படபடப்பாய்க் கேட்டான்.

"என்ன செய்வது? இவளுடைய நாலணாவை இவளிடமே வீசியெறிந்துவிட்டு, இவளை நரகத்துக்கு விரட்டிவிடும்" என்று கட்டளையிட்டார் நந்திபகவான்.

ஸ்பானியக் கதை மொழிபெயர்ப்பு:

# புதிய பாலம்

ஏ. சுப்பையா

> இன்னும் அந்தப் பாலம், சிற்பிக்கு அழியாப் புகழ் அளித்துக்கொண்டு அங்கே நிற்கிறது. ஆனால், அந்தத் ‘தேவரகஸ்யம்’ மட்டில், நிகழ்ந்திரா விட்டால், சிற்பி எங்கே? பாலந்தான் எங்கே? காதல் தெய்வீக மன்றோ?

ஸ்பெயின் தேசத்திலே, டோலிடோ என்பது டாகஸ் நதிக்கரையிலுள்ள ஓர் அழகிய நகரம். அக்கரையில் கண்ணைக் கவரும் பூங்காவனங்களும், இனிய கனி தரும் பழத் தோட்டங்களும் இருந்தன. வெயில் காலத்தில், நகர மக்கள் இந்தத் தோட்டங்களில் உல்லாசமாகப் பொழுது போக்கிக் களிப்பது வழக்கம். கவிகள் இதைப் பாடிப் புகழ்ந்தார்கள். இந்த டாகஸ் நதியைக் கடக்க, ஸான் மார்ட்டின் என்ற பெயருள்ள நீண்டதொரு பாலம் இருந்தது. இது அந்த நகரத்துக்கே ஒரு பெரிய சிற்பச் செல்வமாக விளங்கியது.

பதினாலாவது நூற்றாண்டின் மத்தியில் டான் என்ரிகே என்ற மன்னன், தன் படைகளுடன் டோலிடோவை முற்றுகை யிட்டான். ஆனால், டோலிடோ வாசிகள் எளிதில் விட்டுக் கொடுக்கவில்லை. ஸான் மார்ட்டினைக் கடந்து சென்று, தீரத்துடன் போராடி, எதிரிகளை அவர்கள் துவம்சம் செய்தார்கள். இந்தப் பாலத்தை அழித்துவிட்டால், நகரம் பணிந்துவிடும் என்று எண்ணினான் என்ரிகே. ஒரு நாளிரவு அந்த அழகிய பாலத்தின் மேலே மரங்களை வெட்டிக் குவித்து எதிரிகள் தீ வைத்தார்கள். பாலம் சில மணி நேரத்தில் தகர்ந்து விழுந்து, எரிந்து சாம்பலாயிற்று. அதன் தூண்கள் வெடித்து விழுந்த சத்தத்தைக் கேட்டு, நகர வாசிகள் திடுக்கிட்டார்கள். ஆனால், இந்தப் பெரிய நஷ்டம் அவர்களது கோபத் தீயை மூட்டியது. மிக உக்கிரமாகப் போராடி எதிரிகளை ஓட்டினர்.

பல வருஷங்கள் கடந்தன. பழைய பாலத்தைப் போல வலிவும் வனப்பும் உள்ள மற்றொரு பாலத்தைக் கட்டிவிட வேண்டுமென்று டோலிடோ வாசிகள் விரும்பினார்கள். அது அவ்வளவு எளிதாக முடியவில்லை; டாகஸ் நதி அதற்கு இடங் கொடுக்கவில்லை. எந்தச் சிற்பியாவது தைரியத்துடன் முன்வந்து வேலையை ஆரம்பித்தால், பாதி வேலை முடியு முன்பே, தாங்கு கட்டைகளையும் தூண்களையும் தண்ணீர் அடித்துக் கொண்டு போய்விடுவது வழக்கம். நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிற்பிகள் இந்த வேலையைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டுமென்று மன்னன் பறை யறைவித்தான். ஆனால், ஒருவராவது நான் முயல்கிறேன் என்று முன்வரவேண்டுமே? இது முடிகிற காரியமில்லை யென்று எல்லோருக்கும் பயம்.

சில காலத்துக்குப் பிறகு நகருக்கே புதிய இருவர்—ஜுவான் என்ற சிற்பியும் அவன் மனைவியும்—டோலிடோவுக்கு வந்து சேர்ந்தார்கள். அழிந்து போன பாலத்தை மிகக் கவனமாக அவர்கள் பார்த்தார்கள். அப்பால், அந்த இடத்துக்குப் பக்கத்திலேயே ஒரு வீட்டை அமர்த்திக் கொண்டு குடியிருந்தார்கள். ஒரு நாள் ஜுவான் ராஜசபைக்குச் சென்று, தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான். அரசனுக்கும் அவனுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

“இந்தப் பாலத்தைக் கட்டுவதில் ஏற்படும் கஷ்டங்களை நீ அறிவாயா?”

“ஆம், அறிவேன்; ஆனால் அவைகளைத் தீர்க்கவும் எனக்கு வழி தெரியும்.”

“வேறே எங்கேயாவது இது மாதிரி பெரிய கட்டிட வேலையை முடித்திருக்கிறாயா?”

“இதுவரையில் இல்லை.”

“நீ இதைக் கட்டி முடிப்பாய் என்று எப்படி நம்புவது?”

“உங்களுக்கு ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். இந்த வேலையில் நான் தவறினால், என் உயிரையே அதற்குப் பணயமாகத் தருகிறேன். பாலம் கட்டி முடிந்ததும், கீழே நாட்டப்பட்டிருக்கும் மரக் கால்கள் முதலியவைகளை அப்புறப்படுத்தும்போது, நான் மட்டும் பாலத்தின் நடுமத்தியில் நிற்பேன். பாலம் நிலை கொள்ளாமல் விழுந்தால், நானும் அதனுடன் விழுந்து, நசுங்கி உயிரை விடுவேன். இதுவே நான் தங்களுக்கு அளிக்கும் வாக்குறுதி.”

மன்னன் தலையை அசைத்தான். சிற்பியும் மகிழ்ச்சி கொண்டான். தன் திறமையை உலகத்துக்குக் காட்ட ஒரு நல்ல தருணம் வாய்த்தது என்பது அவன் மகிழ்ச்சிக்குக் காரணம். ஓடோடியும், தன் வீடு சென்று, தன்னை எதிர் பார்த்துக்கொண்டிருந்த காதல் மனைவி காதரைனிடம் தனது நோக்கம் ஈடேறி விட்டதைத் தெரிவித்தான். இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம் அவன் தனக்கே ஓர் அழியாத ஞாபகச் சின்னத்தை யல்லவா அமைத்து விடுகிறான்? காதரைன் அடைந்த மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை.

வேலையும் ஆரம்பமாயிற்று. பழைய பாலம் நின்ற இடத்தில் புதிய பாலம் எழும்பியது. பழைய பாலத்தின் அறிகுறிகள் மறைந்தன. பாலத்தின் கண்களிலே மத்தியக் கண்ணை இணைப்பதுதான் சிரமம். டாகஸ் நதி அங்கேதான் தன் முழு வலிமையையும் காட்டும். நீரின் வேகத்தை எதிர்த்து நிற்கும் சக்தி அந்தக் கண்ணின் இரு பக்கச் சுவர்களுக்கும் இருக்க வேண்டும். இல்லையானால், பாலத்தின் கதி அதோகதிதான். இந்த வேலையை ஜுவான் திறமையாகப் பூர்த்தி செய்து விட்டதைப் பார்த்துப் பார்த்து, மன்னனும் மற்றவரும் மகிழ்ந்தார்கள்; அவனைப் புகழ்ந்தார்கள்.

வேலை முடிந்து விட்டது. கீழே தாங்கலாக நிறுத்தப்பட்ட மரக் கால்கள், கட்டைகள், சாரக்கழிகள் முதலியவைகளை அப்புறப்படுத்த வேண்டியதுதான் பாக்கி. பாலத் திறப்பு விழாவுக்கு நாளும் குறிப்பிடப்பட்டது. டோலிடோ வாசிகள் அன்றைய தினத்தை ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடத் திட்டம் போட்டிருந்தார்

கள். ஆனல், அவர்களுடைய விருப்பம் நிறைவேற முடியாமல் ஓர் இடையூறு குறுக்கிட்டது.

மாலை நேரத்தில் ஜுவான் பாலத்தை நோக்கிச் சென்ருன். மறுநாள் திறப்பு விழா நடக்கப் போகிறது. எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதே அவனது உத்தேசம். மத்திய வளைவின் மேலேறி நின்று கூர்மையாகக் கவனித்தான். எல்லாம் சரியாகவே யிருந்தது. ஆனல், திடீரென்று ஒரு விஷயம் அவன் கண்ணில் பட்டது; முகம் கறுத்தது. அவனது உடம்பிலுள்ள ரத்தமே குளிர்ந்து விட்டது. எல்லாம் வீணுயிற்று என்ற ஏக்கம் உண்டாயிற்று. திரும்பிப் பாராமல் வீட்டை நோக்கி ஓடினன். தன் புருஷனைப் புன்சிரிப்புடன் காதரைன் வரவேற்ருள். ஆனல், அவன் முகம் கவலை பாய்ந்திருந்ததைக் கண்ட மனைவி திகைப்படைந்தாள்.

"உடம்புக்கு ஏதாவது அசௌகரியமா?" என்று அவள் கேட்டாள்.

"ஒன்று மில்லை" என்ற பதிலே வந்தது.

ஆனல், காதரைனை ஏமாற்ற முடியுமா? அவள் வெகு எளிதில் தன் புருஷனின் கவலைக்குரிய காரணத்தைத் தெரிந்து கொண்டாள்.

"என் கவலையைத் தீர்ப்பது எளிதான காரியமல்ல" என்ருன் சிற்பி.

"என் காதலின் வல்லமையை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை! அதற்கு இயலாதது எதுவுமில்லை" என்ருள் காதரைன்.

"எனது வேலை பூர்த்தி அடைந்து வெற்றி பெறுந்தருவாயில், கணக்கில் ஏற்பட்ட ஒரு சிறு பிசகினல், எல்லாம் குடி முழுகிப் போய்விட்டது. நாளை தினம் மரக் கால்களையும் தூண்களையும் அகற்றும்பொழுது, பாலம் தன் நிலையில் நிற்க முடியாமல் கீழே சாய்ந்துவிடும். அரசனுக்கு அளித்த வாக்குறுதிப்படி நானும் அத்துடன் விழுந்து மாளவேண்டியதுதான். என் வெற்றியும் மகிமையு மெல்லாம் தண்ணீரில் அமிழ்ந்து மூழ்கிவிடும்" என்று தீனக்குரலில் சொன்ஞன் சிற்பி.

"பாலம் ஆற்றில் மூழ்கலாம். ஆனல், நீங்கள் மூழ்க, நான் சம்மதியேன். மன்னனிடம் மண்டியிட்டு உங்களுக்கு விடுதலை வாங்கி வருவேன்" என்ருள் காதரைன்.

"அப்படியே மன்னன் எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தாலும், நான் உயிர் வாழப்போவ தில்லை. மான மிழந்தபின் வாழ்வதும் ஒரு வாழ்வா?" என்ருன் சிற்பி.

"அப்படியானல், உங்களுக்கு உயிரும் கௌரவமும் ஒருங்கே கிடைக்கும்" என்று உறுதி கூறினள் காதரைன். தன் உயிரைப் போன்ற காதலனை இழக்க நேரிடுகிறதே என்ற துயரத்தில்தான் தன் மனைவி இப்படி மனங்கலங்கிப் பேசுகிருள் என்று எண்ணினன் ஜுவான். அவளுடைய உள்ளத்திலே எண்ணிய எண்ணத்தை அவன் எப்படி அறிவான்?

நள்ளிரவும் வந்தது. கவலையில் ஆழ்ந்த ஜுவான் தூக்கத்தில் மூழ்கி விட்டான். இதுதான் சமயம் என்று, காதரைன் மெல்லத் தன் படுக்கையை விட்டெழுந்தாள். ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். ஒரே மையிருட்டு. இடையிடையே மின்னல்கள் வானத்தில் தோன்றி மறைந்தன. எங்கும் நிசப்தம். டாகஸ் நதியின் ஆரவாரம் மட்டுமே ஒலித்தது. காதரைன் தன் கையில் ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொண்டாள். உடம்பை ஒரு கறுத்த கம்பளியால் மூடிக்கொண்டு, தைரியமாக வெளியேறினள். அவள் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஆனல், காதலனது உயிரைக் காக்கத் துணிந்த காரிகைக்கு வேறு எந்தப் பயமும் ஒரு பொருட்டாகத் தோன்றுமா?

புதிய பாலத்தை அவள் அடைந்தாள். திடீரென்று ஒரு பேரிடி ஒலித்தது. பாலத்தைத் தாங்கி நின்ற மரக் கால்கள் அதிர்ந்தன. அந்தக் கொள்ளிக் கட்டையைக் கையால் வீசி நெருப்பை எரிய விட்டாள். நன்ருக எரிய ஆரம்பித்ததும், பாலத்தைத் தாங்கிநின்ற கட்டைகள் மீதும் நெருப்பு வைத்தாள். அவளுக்குத் துணையாய்க் காற்றும் வீசியது. தீ பரவிப் பிடித்துக் கொண்டது. சிறிது நேரத்தில் பாலம் முழுவதும் ஒரே ஜோதியாக விளங்கியது. அவள் திரும்பி வீடடைந்தாள். சிற்பி இன்னும் தூக்கத்திலேயே ஆழ்ந்திருந்தான். சில நிமிஷ நேரத்தில் வெளியே ஜனங்கள் ஓடுவது கேட்டது. கோவில் மணிகள் ஓலமிட்டன. இடிந்து விழுந்த பாலத்தின் பேரொலி பூமியை அதிரச் செய்தது. ஜுவான் திடுக்கிட்டெழுந்தான். பக்கத்தில் காதரைன் நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருந்தாள். அவளுடைய காரியம் வெற்றி யடைந்துவிட்ட தல்லவா? சிற்பி வெளியே எட்டிப் பார்த்தான். விஷயம் விளங்கி விட்டது. உள்ளுக்குள்ளே மகிழ்ச்சி பூத்தது. தன் மனைவியின் பிரார்த்தனையைக் கேட்டு ஏதோ தெய்வந்தான் மனமிரங்கியதாக எண்ணினன்.

டோலிடோ வாசிகள் அவ்வாறு கருத வில்லை. இடியும் மின்னலுமே இந்த அழிவு வேலையைப் பூர்த்தி செய்ததாக எண்ணினர்கள். வெற்றி மாலை சூடும் தருவாயில் சிற்பியின் வேலை பாழாய்ப் போய்விட்டதே என்று அவர்கள் அவனுக்கு அனுதாபப் பட்டார்கள். மன்னன் இம்முறை இதை ஒரு பெரிய நஷ்டமாகக் கருத வில்லை. ஆற்றல் மிக்க ஒரு சிற்பி அருகிலேயே இருக்கிருன் என்ற தைரியம் அவனுக்கு. அவனுடைய நம்பிக்கை வீண்போக வில்லை. அடுத்த வருஷம் அதே தினத்தன்று ஜுவான் கட்டிய புதுப் பாலத்தை அரசன் மிகுந்த ஆடம்பரத்துடன் திறந்து வைத்தான். அவன் அளித்த பெரிய விருந்தில் சிற்பிக்கு விசேஷ கௌரவங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டன. அவன் மனைவி — அவனுடைய உயிரையும் மானத்தையும் காப்பாற்றிய காதரைன்—மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினள்.

ஐந்நூறு வருஷங்களுக்கு மேல் கடந்துவிட்டன. அன்று ஜுவான் கட்டிய பாலம் இன்றும் டாகஸ் நதியின் மீது கம்பீரமாக நின்று கொண்டுதான் இருக்கிறது. ஜுவானை மக்கள் இன்னும் பாராட்டுகிருர்கள். ஆனல், அவனுக்கு ஒரு காதரைன் மட்டும் கிடைத் திராவிட்டால்..........? அந்தத் 'தேவ ரகஸ்யத்தை' யார் அறிவார்கள்?

---

**வைத்திய சாஸ்திரப் பிறப்பு**:—மனிதனின் மூதாதைகளான குரங்குகள் காட்டிலே திரிகையில், பேன் எடுக்கத் தொடங்கினவாம். அதிலிருந்தே வைத்திய சாஸ்திரம் பிறந்தது என்கிருர் இ. எ. ஹூட்டன் என்ற நிபுணர்.

---

# காந்தி வாக்கு

**ஸினிமாவும் ரேடியோவும்:** ஆஸ்திரேலிய யுத்த நிருபர் ஒருவரிடம் காந்திஜி கூறியதாவது: "நான் ரேடியோ கேட்டதே யில்லை; ஸினிமாவுக்கும் போனதில்லை. இது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்."

**நிருபர்** (ஆச்சர்யத்துடன்): "இவை கெடுதல் என்று உங்கள் கருத்தா?"

**காந்திஜி:** "நான் அப்படிச் சொல்லமாட்டேன். ஸினிமாக்கள் பெரும்பாலும் கெடுதலாய்த்தான் இருக்கின்றன. ரேடியோவைப்பற்றி எனக்குத் தெரியாது. உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் சகல செய்திகளையும் அரைமணி நேரத்துக்குள் கேட்டுவிட எனக்கு இஷ்டமில்லை. அப்படிக் கேட்டால், யோசனைசெய்ய எனக்குச் சிறிதும் சாவகாசம் இல்லாமல் போய்விடும். அரைமணி நேரத்துக்கொருதரம் உலகின் சகல மூலைகளிலிருந்தும் எதற்காக ஒருவர் செய்திகள் கேட்கவேண்டும்? எனக்கு மிக அருகே என்னைச் சுற்றியுள்ள நிலைமைகளுக்கும் நிகழும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்றபடி நடந்துகொள்வதே எனக்குப் போதும்"

* *

**யுத்தக் கொலை:** அதே நிருபரிடம் யுத்தத்தைப்பற்றி மகாத்மா கூறியதாவது:

"மனிதனிடம் மனிதன் குரோதம் கொண்டு, ரத்தவெறி கொள்வது எனக்குப் புரியவேயில்லை. இதோ நடந்துவருகிறதே உலகத்தையே சூழ்ந்து வரும் யுத்தம், இதற்கு நியாயமே கிடையாது. பகைமையையும் பழியையும் ஆதாரமாகக் கொண்டது இது; இதன் முடிவில் பின்னும் பகைமையும் பழியுமே விளையப் போகின்றன. மனித உயிரும் பொருளும் நாசமாவது பயங்கரமாய், வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. அவை வேறு வகையில் ஈடுபட்டால், உலகுக்கு மிக்க உபயோகமாயிருக்கும்.......இந்தச் சண்டையெல்லாம் என் நடக்கிறது, யார் நன்மைக்காக, என்ன பெரிய நோக்கத்தைச் சாதிக்க? எனக்குப் புரியவேயில்லை."

* *

**மதமாற்றம்:** ஒரு நிருபரின் கேள்வி: "மனமாற்றமில்லாத மதமாற்றங்களை யெல்லாம் நீங்கள் எதிர்க்கிறீர்கள். ஆனால், ஒரு முரண்பாடு உங்களிடம் இல்லையா? சகல மதங்களிடமும் உங்களுக்குச் சம மதிப்பு இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். அப்படியானால், மதமாற்றம் எவ்விதம் நடந்தாலென்ன? உங்களுக்கேன் கவலை?"

**காத்திஜி:** "மனமாற்றமில்லாத மதமாற்றம் வெறும் மாறுதலேயாகும். ஒருவரது வாழ்விலே ஏற்படும் புரட்சியே உண்மையான மதமாற்றம். சகல மதங்களிலும் எனக்குச் சம மதிப்பு என்றால், உங்கள் மதத்திலும் பிற யார் மதத்திலும் உள்ள அதே மதிப்பு என் மதத்திலும் எனக்குண்டு என்பதை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். என் குழந்தைகள் மனமாற்றமின்றித் தங்கள் பெற்றோரின் மதத்தைக் கைவிட்டால், அதை அலட்சியம் செய்ய என் மத மதிப்பு எனக்கு இடங்கொடாது. ஆத்மாவுக்குச் சம்பந்தமற்ற பற்பல இலௌகிக ஆசைகளையும் காட்டி என் குழந்தைகளை நீங்கள் இழுத்துச் சென்றால், உங்களிடம் எனக்குத் துளியும் மதிப்பிராது."

* *

**தமிழில் கையெழுத்து:** "கையெழுத்துப் போடும்படி கேட்டால், காந்தி அதற்கு ஒரு விலை வாங்கிவிடுகிறார். இந்தியாவிலோ, உலகத்திலோ வேறு எந்தத் தலைவரும் இப்படிச் செய்வதில்லை. கையெழுத்து வேண்டுமென்று கேட்பதே பெரிய கௌரவமாகும்" என்று ஓர் அயல்நாட்டுக்காரர் சொன்னார். கையெழுத்தொன்றுக்கு ரூ. 5 விகிதம் ஹரிஜன நிதிக்கு மகாத்மா வசூலிப்பதையே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

ஒருநாள் காந்திஜீ ஹரிஜனநிதி வசூலித்துக் கொண்டிருக்கையில், ஒரு தமிழ் வாலிபன் அவரிடம் கையெழுத்து வேண்டுமென்று கேட்டான். வழக்கம்போல் அவர் ஹிந்தியில் கையெழுத்திட்டார். "தமிழிலும் கையெழுத்திடுங்கள்" என்று அவன் வேண்டினான். "முயன்று பார்க்கிறேன். ஆனால் நீ இன்னுமோர் ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டும்" என்றார் காந்திஜி.

"பத்து ரூபாய் கொடுத்திருக்கிறேன், மகாத்மாஜி!" என்று, நகைத்துக் கொண்டே சொன்னான் வாலிபன். காந்திஜி எழுத்து எழுத்தாகத் தமிழ்க் கையெழுத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு, எழுதி முடித்தார். "பிசகே யில்லை, மகாத்மாஜி! உங்கள் ஞாபக சக்தி ரொம்ப அற்புதமாயிருக்கிறது" என்று சொல்லி, இன்னொரு பத்து ரூபாயை நீட்டினான். "என் ஞாபக சக்திக்கு ஒன்றும் சன்மானம் கிடையாதா?" என்றார் மகாத்மா. உடனே மூன்றாவது பத்து ரூபாய் நோட்டொன்று அவனது ஜேபியிலிருந்து வெளி வந்தது. காந்திஜி பரம சந்தோஷத்தோடு, "சில விநாடியில் ஹரிஜன நிதிக்கு முப்பது ரூபாய்! அவர்கள் உன்னை வாழ்த்துவார்கள்" என்று பாராட்டினார்.

* *

**ஆங்கிலேயர் அகன்றால்:** "பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை விட்டுப் போகவேண்டுமென்று சொல்லுகிறீர்களே? இது ஜப்பானை இந்தியா மீது படை எடு என்று அழைப்பது போலில்லையா?" என்று கேட்டார் ஒரு நிருபர்.

**கார்திஜி பதில்:** "இல்லவே யில்லை. பிரிட்டிஷார் இங்கே யிருப்பதால் தான், ஜப்பானியர் இந்தியாவைத் தாக்க வருவார்கள். பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு விலகினால், ஜப்பானியர் தங்கள் திட்டத்தைப் புனராலோசனை செய்யவேண்டிவரும். பிரிட்டிஷாரின் செயல் அதிசயமாயிருக்கக் கண்டு, ஜப்பானியர் பிரமிப்படைந்து பிரிட்டிஷாரிடமுள்ள குரோதமும் தணிவார்கள்."

விசேஷ பேட்டி

# ருக்மிணி தேவி

— தி. ஜ. ர.

காலமோ தூரமோ, பிரித்துவைத்த சிலரைப்பற்றிப் பல சமயம் நமக்கு ஏதேனும் விசித்திர எண்ணங்கள் உண்டாகின்றன. நேரிலே அவர்களைக் கண்டறியும்போது, அவை யெல்லாம் சிதறி, நாம் ஆச்சரிய மடைகிறோம். ருக்மிணி தேவியைச் சந்திக்கும்போதும், நமக்கு இதே அனுபவம்தான் ஏற்படுகிறது.

ருக்மிணி தேவியும் மான் குட்டியும்

"ருக்மிணி தேவி, ஆங்கில மாதான பெஸண்ட் அம்மையால் நிர்வகிக்கப்பட்ட தியஸாபிகல் சொஸைட்டியைச் சேர்ந்தவர். ஆங்கில அறிஞர் டாக்டர் அருண்டேலை வாழ்க்கைத் துணைவராய்ப் பெற்றவர். பழக்க வழக்கங்கள் ஆங்கில மாய்த்தான் இருக்கும். பாஷையும் அதுவேயாக விருக்கும். தமிழை எவ்வளவு மறந்திருப்பாரோ?" என்று நம்மில் பலர் சந்தேகிப்பது சகஜம். என் கேள்விகளை நானும் ஆங்கிலத்தில்தான் குறித்துக்கொண்டு சென்றிருந்தேன்.

ஸ்ரீமதி ருக்மிணி தேவியோ, வந்து உட்கார்ந்தவுடனே, என் குறிப்புகளைப் பார்த்துவிட்டு "என்ன? இங்கிலீஷிலா கேட்கப் போகிறீர்கள்? உங்கள் பத்திரிகை தமிழ் தானே? தமிழில் சொன்னால் போதாதா?—ஆனால், உங்கள் சௌகரியம்போல் கேளுங்கள். எனக்கு இரண்டும் ஒன்றுதான்" என்று சொன்னார்.

வியப்பும் களிப்பும் அடைந்த நான், "இல்லை ......தமிழிலேயே கேட்கிறேன். அதுதான் எனக்கும் இரட்டிப்பு ஸௌகர்யம்" என்று தளுக்காய்க் கூறினேன்.

தமிழ் பேசுவது மட்டிலுமல்ல; தமிழில் நன்றாய் எழுதப் படிக்கவும் அவருக்குத் தெரியும். தமிழ் நாட்டு நடையுடை பாவனைகளையே பூர்ணமாய் அவர் அனுஷ்டிக்கிறார்.

"இதென்ன விநோதம்? எனக்குத் தமிழ் தெரியாம லிருக்கும் என்று ஜனங்கள் ஏன் நினைக்கிறார்கள்? தாயுமானார் பாடல்கள், இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா இவைகளி லெல்லாம் எனக்கு மிகுந்த பற்றுதல். இவைகளை நான் நிறையப் படிக்கிறேன். தேச பாஷையான ஹிந்தியில் சாதாரணமாகப் பேச என்னால் முடியும். ஏற்கனவே தெலுங்கு நன்றாய்த் தெரியும். இப்போது கொஞ்சம் பழக்கம் விட்டிருக்கிறது. என்றாலும், இன்றும் தெலுங்கைப் புரிந்து கொள்ளுவேன். புரியாவிட்டால் அர்த்தபாவத்தோடு தெலுங்குப் பாடல்களுக்கு நான் எப்படி அபிநயம் பிடிக்க முடியும்?" என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறுகிறார்.

கலா க்ஷேத்திரம்

1904-ஆம் வருஷம் பிப்ரவரிமீ 29உ— அன்று மதுரையில் மகாமக விழா. மீனாட்சியம்மன் உலாப் புறப்பட்டு விட்டாள். கோவில் மணிகள் முழங்கின. நாதசுரம் இன்பகீதம் பொழிந்தது. இந்தப் புண்ணிய தினத்தில், ஒரு ஸம்ஸ்கிருத பண்டிதரின் வீட்டுக்கு முன் பல ஜனங்கள் கூடினார்கள். எதற்கு? அந்தப் பண்

டிதரின் மனைவிக்குக் குழந்தை பிறந்த சந்தோஷத்தை விசாரிப்பதற்காகத் தான். அன்று அங்கே ஜனனமான அந்தக் குழந்தையே ஸ்ரீமதி ருக்மிணி தேவி. ஸ்ரீமதி ருக்மிணியின் தந்தை பிரபல வடமொழி வித்வானன திரு. எ. நீலகண்ட சாஸ்திரிகள். அவருடைய பூர்விகம் திருவிச நல்லூர். தாய் சேஷம்மாள், தியாகையர்வாள் அவதரித்த திருவையாற்றைச் சேர்ந்தவர். இரண்டு ஊர்களுமே நம்முடைய புராதனக் கலைகளுக்குப் பேர்போனவை. இப்பேர்ப்பட்ட ஐதீகமுள்ள குடும்பத்தில், கலையொலி நிறைந்த வேளையில் ஜனித்த ஸ்ரீமதி ருக்மிணி, அவைகளுக் கிசையத் தாமும் ஒரு கலைச் செல்வியாய் வளர்ந்தது ஆச்சரிய மல்ல.

கலா க்ஷேத்திரத்தில் பெண்களின் கும்மி விளையாட்டு

மிகச் சிறு பிராயத்திலேயே அவருக்குப் பற்பல கலைகளிலும் பற்றுதல் உண்டு. சங்கீதம் பயின்று, சிறந்த பாடகியாகிவிட வேண்டுமென்று அவருக்கு ஆசை. பள்ளிக் கூடத்தில் அவர் படித்த தில்லை; வீட்டுப் படிப்புத் தான். அவருடைய தந்தைக்கு அடையார் தியஸாபிகல் ஸொஸைட்டியில் தொடர்புண்டு. ஆகையால், ஆறு வயது முதலே ஸ்ரீமதி ருக்மணி, அடையாருக்குஅடிக்கடி வந்து செல்வார். ஏழாவது வயதில், முதன் முதலாக, காலஞ் சென்ற பிஷப் லெட் பீட்டரை அவர் சந்தித்தார். குழந்தை ருக்மணியைப் பற்றிக் கேள்விப்பட்ட லெட்பீட்டரே, அவளைப் பார்க்க விரும்பினார். அதன்மேல்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

டாக்டர் அருண்டேலின் அத்தையான மிஸ். அருண்டேல், 1918-ஆம் ஆண்டு அடையாரில் ஒரு தேநீர் விருந்து நடத்தினர். டாக்டர் அருண்டேலை முதல் தடவையாக அப்போதுதான் ஸ்ரீமதி ருக்மிணி சந்தித்தார். அதிலிருந்து இருவருக்கும் நட்பு முதிர்ந்தது. 1920-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் மணமும் செய்துகொண்டார்கள். எப்படி ஒரு பார்ஸிக்கு ஒரு ஹிந்துப் பெண்ணைக் கொடுக்கலாம் என்று இப்போதுகூட இந்திரா நேருவின் விவாகம் குறித்துச் சிலர் சீறினர்கள் அல்லவா? அப்படியிருக்க, அந்தக் காலத்தைப் பற்றிக் கேட்பானேன்? பலர் பல விதமாய்த் தூற்றினர்கள்; அவதூறுகளும் கிளப்பினர்கள். ஆனல், அந்த அற்புத ஸ்திரீ (டாக்டர் பெஸண்ட்) அதையெல்லாம் லட்சியம் செய்யாமல், 'நியூ இந்தியா'வில் சமாதானம் எழுதினர்.

டாக்டர் பெஸண்டை முதலாவதாக ஸ்ரீமதி ருக்மிணி நேருக்கு நேரே சந்தித்துப் பேசியது 1920-ஆம் வருஷத்தில்தான். அதிலிருந்து பெஸண்டை ஸ்ரீமதி ருக்மிணி ஆர்வத்தோடு பின்பற்றி அவருக்கு உதவியும் புரிந்து வந்தார்.

"டாக்டர் பெஸண்ட்தான் எனக்குக் கல்வி போதித்தார். அவர் எனக்குப் பேருதவி புரிந்திருக்கிறர். நாட்டியம் கற்குமாறு எனக்குத் தைரிய மூட்டியவரும் அவர்தான்" என்று, ஸ்ரீமதி ருக்மிணி நன்றி கனியச் சொல்கிறர்.

சிறுமிகள் நாட்டியம் பயில்கிறர்கள்

அகில இந்திய வாலிப தியாஸபிஸ்டுகள் பெடரேஷனின் தலைவராக 1923-ஆம் ஆண்டு ஸ்ரீமதி ருக்மிணி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1925-ஆம் ஆண்டு உலக வாலிப தியாஸபிஸ்டுகள் பெடரேஷன் ஆரம்பமானபோது, அதற்கும் அவரே தலைவரானர். 1924-ஆம் ஆண்டு முதன் முதலாக ஸ்ரீமதி ருக்மிணி தேவி, மேல் நாட்டுக்கு, டாக்டர் அருண்டேலுடன் பிரயாணம் செய்தார். அதிலிருந்து, 1935-ஆம் ஆண்டு வரையில், அநேகமாக வருஷந்தோறும் இருவரும் பிரசங்கங்கள் புரிந்துகொண்டு, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய பல நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கிறர்கள். ஸ்ரீமதி ருக்மிணி மிக

நேர்த்தியாய் ஆங்கிலம் பேசுவார். இந்தியாவைப் பற்றியும் இந்தியரின் கலைச் செல்வத்தைப்பற்றியும் அமெரிக்காவிலும் ஐரோப்பா முதலிய பிற நாடுகளிலும் பல பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார். "எனக்குப் பிறகு, நான் செய்த வேலையைப் புரிய மிகவும் தகுதிவாய்ந்தவள் ஸ்ரீமதி ருக்மிணிதான்" என்று கவி ரவீந்திரநாத தாகூர் சொல்வது வழக்கமாம்.

"1924-ஆம் வருஷம் ஆஸ்திரேலியாவில், பிரபல ருஷிய நாட்டியக்காரியான மாடம் பாவ்லோவா என்பவளின் பாலட் டான்ஸுகளைப் பார்த்தேன். அவளுடைய நாட்டியம் மகா பரிசுத்தமானது; ஆத்மீக ஒளி வீசியது. அதிலே நான் என் மனதைப் பறி கொடுத்தேன். இதிலே ஒரு வேடிக்கை, பாருங்கள். இதற்குப் பிறகு, நான் செய்த பல பிரயாணங்களில், என் கப்பலிலேயே பல தடவை அகஸ்மாத்தாக மாடம் பாவ்லோவாவும் வந்து பிரயாணம் செய்வாள். இப்படி அடிக்கடி நாங்கள் சந்தித்துத் துணை சேர நேர்ந்தது ஏதோ பூர்வஜன்ம வாசனையாய்த்தான் இருக்கவேண்டும் என்றுகூட எனக்குத் தோன்றுகிறது" என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறுகிறார்.

சின்ன வயதுமுதலே கர்நாடக சங்கீதப் பயிற்சியும் பிற கலைகளில் ஆர்வமும் உடைய ருக்மிணி தேவிக்கு, மாடம் பாவ்லோவாவின் பரிசுத்த நாட்டியத்தைக் கண்டதும், அந்தக் கலையில் ஒரு பிரேமை ஏற்பட்டது. தாமும் அதைக் கற்றார். 1932-ஆம் வருஷமோ அல்லது 1933-ஆம் வருஷமோ, முதன்முதலாக, சென்னை மியூஸிக் அக்காடமியில் பந்தநல்லூர் சகோதரிகளின் பரதநாட்டியத்தை ஸ்ரீமதி ருக்மிணி பார்த்தார். அதையும் தாம் கற்கவேண்டுமென்ற வேட்கை அவருக்கு உதித்தது. ஆனால், பரதநாட்டியத்தில் சில ஆபாச அம்சங்கள் இருப்பதை அப்போதே அவர் கண்டார். என்றாலும், பரதநாட்டியத்தைத் தாம் பயின்று, அதன் ஆபாச அம்சங்களை ஒழித்து, உன்னதமாகச் செய்வது என்று சங்கல்பம் செய்து கொண்டார். கொஞ்சம் பயின்ற பிறகு, 1935-ஆம் வருஷம் பந்தநல்லூர் பரதநாட்டிய வித்வான் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மேலும் பயிற்சி பெற்றார். பின்னால், சாஹித்ய வித்வான் திரு. பாபநாசம் சிவனைச் சந்தித்து, அவருடைய பாடல்களைப் பிரபலப்படுத்த வேண்டுமென்ற ஆவல் கொண்டார். 1936-ஆம் வருஷம் அடையாறில் தியாஸாபிகல் ஸொஸைட்டியின் டயமண்ட் ஜூபிலி விழா நடந்தபோது, சர்வதேசக் கலை அக்காடமி என்ற ஸ்தாபனம் ஸ்ரீமதி ருக்மிணியின் முயற்சியால் அமைந்தது. அதுவே பின்னால் கலாக்ஷேத்திரம் என்ற நாமம் பெற்றது. அதன் ஸ்தாபக அக்கிராசனர் ஸ்ரீமதி ருக்மிணிதேவிதான்.

ருக்மிணி தேவியின் பகிரங்கமான முதல் பரதநாட்டியக் கச்சேரி 1936-ஆம் வருஷம் மார்ச்சுமீ நடந்தது. அது தொடங்கி இந்தியாவெங்கும் சுற்றி, தமது கலைச் செல்வத்தால் ராஜாக்கள், கீர்த்திமான்கள், தலைவர்கள், பண்டிதர்கள், பொதுமக்கள் ஆகிய ஆயிரக்கணக்கான பல்வேறு ஜனங்களுக்கும் அவர் மகிழ்ச்சியூட்டியிருக்கிறார். அவருடைய சுற்றுப் பிரயாணம் யாவும் மிகவும் வெற்றிகரமாய் நடந்தன.

1941-ஆம் வருஷம் தாகூரின் விசுவபாரதி ஆசிரமத்தில் நடந்த சம்பவம் ஒன்றை மட்டிலும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். ஸ்ரீமதி ருக்மிணியின் நாட்டியத்தைக் கண்டு உள்ளம் கனிந்த கவி திலகர் தாகூர் "மாளவிகாக்னி மித்ரத்தில் காளிதாஸன் எதற்காக நாட்டியத்தைப் புகுத்தியிருக்கிறான் என்று இதுவரையில் எனக்குப் புரியவேயில்லை; இப்போது தான் அது புரிந்தது" என்றார். ஸ்ரீமதி ருக்மிணியின் நடனத்துக்கு இதைவிடப் பெரிய புகழுரை வேறு ஏது?

"கையில் உள்ள பத்து விரல்களுக்குள்ளே நூற்றுக்கணக்கான—இல்லை, ஆயிரக்கணக்கான சொற்சித்திரங்கள் அடங்கிக் கிடக்கின்றன" என்று ஸ்ரீமதி ருக்மிணி ஒரு முறை கூறினார். இந்தச் சித்திரங்களைத் தீட்டுவதில் மிக வல்லவர் அவர். படமெடுத்த ஸர்ப்பமும், சிறகு விரித்த கருடனும், அலர்ந்து சிரிக்கும் தாமரையும், மருண்டோடும் மானும், இன்னும் பல்வேறு ஜீவன்களும் பொருள்களும் அவருடைய விரல் முத்திரைகளிலே நினைத்தபோது வந்து நிற்கும். மற்றும் அவருடைய முகபாவம், நயன வின்யாஸம், நிருத்தியம் முதலிய சகல நாட்டிய அம்சங்களையும் பல பத்திரிகைகள் அவ்வப்போது புகழ்ந்தெழுதியிருக்கின்றன.

"நீங்கள் மேல் நாட்டில் நாட்டியம் செய்ததுண்டா?" என்று யாரோ ஸ்ரீமதி ருக்மிணியைக் கேட்டார்களாம்.

"இதுவரையில் செய்ததில்லை. ஏனெனில், மேல் நாட்டாரின் பாராட்டுதலைப் பெறு முன்னால், என் சொந்தத் தாய் நாட்டின் பாராட்டுதலையே முதலில் பெற வேண்டும் என்று என் ஆசை" என்கிறார் அவர். ருக்மிணி தேவியின் தேசபக்தி அவ்வளவு தீவிரமானது.

1940-ஆம் வருஷம் தென்னிந்திய ஜீவரட்சணை லீக்குக்கும் அவர் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜீவப் பிராணிகளிடத்தில் அவருக்கு மிகுந்த அன்பு. இது வெளியிலுள்ளோருக்கு அவ்வளவு தெரியாது.

கலை, அரசியல் முதலிய பல்வேறு பொருள்கள் குறித்தும், சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக அவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். அடையார் வாசிகளில் பெரும்பாலோருடைய சம்பாஷணைகளிலும் கலையழகைப் பொதுவாகக் காணலாம். ஒரு முறை 'லோக குரு' கிருஷ்ணமூர்த்தியை நானும் வேறிரு நண்பர்களும் நேரில் சந்தித்துப் பேசும் பாக்கியம் கிடைத்தது. அவர் அப்போது எவ்வளவு அழகாய் நடந்து கொண்டார்! அது இன்னும் பச்சைப் பசுமையாய் எனக்கு ஞாபகமிருக்கிறது. அவ்விதமிருக்க, கலையையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்ட அடையார்த் தலைவி ஸ்ரீமதி ருக்மிணியின் சம்பாஷணை நயத்தைப் பற்றி வர்ணிக்கவும் வேண்டுமா? மிகுந்த அடக்கம், அன்பு இவற்றோடு, வெகு சரளமாக அவர் பேசினார்.

"நம்முடைய தினசரி வாழ்க்கையில், கலைக்கு ஏதாவது பயனுண்டா? அது அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று நான் கேட்டேன்.

"கலையில்லாமல் வாழ்வே முடியாதே" என்று ஒரே அடியாய் மறுத்த அவர், சற்றுத் தணிந்த குரலில், "சிலர் கலையின்றி வாழத் தான் வாழ்கிறார்கள். ஆனால், அது கூடாது. மனிதனுக்குக் கல்சர் ரொம்ப அவசியம்—கல்

சர் என்பதைத் தமிழில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அதை நீங்கள் எப்படி மொழி பெயர்ப்பீர்கள் ?" என்று கேட்டார்.

"எங்களுக்கும் அந்த வார்த்தை கொஞ்சம் தகராறுதான். தனித் தமிழில் பேரன்பு கொண்டவரான காலம் சென்ற திரு. டி. என். சேஷாசலம் அவர்கள் கூட, கல்சர் என்ற அற்புதமான வார்த்தைக்குத் தமிழ் அகப்படவில்லையே என்று சொல்லி, கல்சர் என்றே தமிழில் வழங்கினர். என்றாலும், இப்பொழுது நாங்கள் (அதாவது தமிழ்ப் பத்திரிகைக்காரர்கள்) எல்லாரும் 'கல்சர்' என்பதைக் 'கலாச் சாரம்' என்று மொழி பெயர்க்கிறோம்" என நான் சொன்னேன்.

இந்த வார்த்தை விவகாரத்தை இதோடு விட்டு விட்டு, தினசரி வாழ்க்கையில் கலை யழகின் தேவையை ஸ்ரீமதி ருக்மிணி, மேலும் விளக்கலானார்: "நம் வீடுகளைக் கோலம் முதலியவைகளால் அழகு படுத்துகிறோம். அது கலை யில்லையா? நமது பழைய காலத்துச் சாமான்களில் ஒரு கலைச் சுவை இருக்கிறது. அவைகளையே நான் உபயோகப்படுத்துகிறேன். இதற்காக என்னைச் சிலர் பரிகாசம் கூடச் செய்கிறார்கள். ஸோபா, நாற்காலிகள் முதலியவை என் வீட்டில் கிடையாது. வெள்ளைக்காரர்கள் தங்களுடைய சம்பிரதாயப்படி தங்கள் வீடுகளை வைத்துக் கொள்ளுவதும் ஓரழகாய்த்தான் இருக்கிறது. ஆனால், அந்த முறை அவர்களுக்குத் தான் பொருத்தம்; நமக்குப் பொருத்தமில்லை."

**கேள்வி:** "கலைகளின் தத்துவம் என்ன? கலைகளைப் பற்றி உங்கள் சித்தாந்தம் யாது? சில வார்த்தைகளில் அதை விளக்க முடியுமா?"

**பதில்:** "தென்னிந்திய நாட்டியம் இரண்டு தீமைகளுக்குள் மூழ்கி யிருக்கிறது. ஒன்று, ஆபாசம்; இரண்டாவது, குரூரம். நடனம் ஆனந்த மூட்டவேண்டும். நடனத்தை ஆனந்த நடனம் என்று கூடச் சொல்வதுண் டல்லவா? கலாக்ஷேத்திரத்தில் குரூரமாய்ச் சொல்லித் தரும் வழக்கம் கிடையாது. குழந்தைகள் மிக ஆசையுடன் இங்கே நடனம் கற்றுக் கொள்கின்றன. நடனக் கலையில் சம்பந்தப் பட்டவர்களுக்குக் கல்வியில்லா திருப்பதுதான் மேலே சொன்ன குறைகளுக்கு ஒரு காரணம். நல்லது, கெடுதல் அவர்களுக்குத் தெரியவில்லை. சீர்திருத்தம் எப்படி அவர்களால் ஏற்படும்? கெடுதலை வைத்துக்கொண்டு, நல்லதை அவர்கள் தள்ளி விடுகிறார்கள். கலை ஒரு தொழிலாகவும் தான் இருக்கிறது. இருந்தாலும் அதைத் தொழிலுக்காக மட்டில் கையாளலாகாது. கலையைப் பயில்கையில், மனத்தூய்மையும் தெய்வ பக்தியும் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், கலை ஒரு தொழில் அல்ல; ஓர் உத்தம கைங்கர்யமாகும். ஆத்மீக வளர்ச்சியும் ஆனந்தமும் அளிப்பதே கலையின் நோக்கம்."

**கேள்வி:** "பல் வேறு நாடுகளின் கலைகளையும் ஒன்றுகூட்டி இசைப்பது சாத்திய மென்று நீங்கள் கருதுகிறீர்களா? இல்லை, அவை வெவ்வேறாய்த்தான் இருக்குமா?"

**பதில்:** "எந்தத் தேசத்துக் கலையாயிருந்தாலும் சரி; அது மிக உன்னதமானதா யிருந்தால், உலக முழுவதையும் வசியம் செய்துவிடும். ஜீவனுள்ள கலைக்கு, தேசத்துக்குத் தேசம் வித்யாசம் கிடையாது. சர்வதேச பாஷை ஒன்று வேண்டு மென்றால், அது கலைதான். ஆனால், சுதேசத்துக் கலையையும் பிற நாட்டுக் கலையையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல், சிலர் குரூபமான கலப்படம் செய்து விடுகிறார்கள். அது தவறு. இதை நீக்கவே, எங்கள் கலாக்ஷேத்திரத்தில் நல்ல ரசனையையும் அர்த்தத்தையும் நான் வற்புறுத்துகிறேன். தம் ஐதீகமான முறைப்படிதான் நட்டுவனர் இங்கே நாட்டியம் பயில்விக்கிறார். என்றாலும், அந்த ஐதிகமான முத்திரைகளையும் சங்கேதங்களையும் பாணிகளையும் மீறாமல், நமது மனோதர்மத்தைக் கொண்டு புதிய புதிய தீர்மானங்களை நாம் சிருஷ்டித்து வளர்க்கிறோம். குழந்தைகளுக்கு வெறும் நாட்டியம் கற்பிப்பது மட்டில் எங்கள் நோக்கமல்ல. கல்வி, ஒழுக்கம் முதலியவற்றிலும் கவனம் செலுத்துகிறோம். இதைப் பார்த்து, 'எங்கள் ஊர் நாட்டியம் வேறே; அடையார் டான்ஸ் வேறே' என்று சில சமயம் நட்டுவனர் வேடிக்கையாகச் சொல்வதுமுண்டு!"

கலா க்ஷேத்திரத்தைப் பற்றி இங்கே சில வார்த்தைகள் கூறுவது அவசியமாகும். அது வெறும் நாட்டியச் சாலை மட்டிலும் அல்ல. உலகப் பிரசித்தி பெற்ற மாண்டிஸோரி அம்மை அங்கே குழந்தைகளின் கல்வியைச் சிலகாலம் நேரேயிருந்து கவனித்து வந்திருக்கிறார். பற்பல நுட்பமான கைத்தொழில்கள் நேர்த்தியான கலையழகுடன் அங்கே பயிற்றுவிக்கப் படுகின்றன. அற்புதக் கலை நகரம் ஒன்றைச் சிருஷ்டித்து விட வேண்டுமென்பதே, கலா க்ஷேத்திர ஸ்தாபகரான ருக்மிணிதேவியின் கனவு. பற்பல விதமான இந்தியக் கலைகளும் அங்கே செழிக்க வேண்டு மென்பது அவர் ஆவல்.

"கலையும் சயின்ஸும் ஒன்றுக் கொன்று உதவியானவையா? விரோதமானவையா? உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று ஸ்ரீமதி ருக்மிணியைக் கேட்டேன்.

**அவர் சொன்னார்:** "கலையே ஒரு வித சயின்ஸ்தான். இதுதான் வித்யாசம்: அறிவுக்குமட்டில் திருப்தியளிப்பது சயின்ஸ்; அறிவுக்கும் உள்ளத்துக்கும் இன்பமூட்டுவது கலை. கலையைமட்டிலும் வைத்துக் கொண்டு ஒரு தேசம் வாழ்ந்துவிட முடியும்; சயின்ஸைமட்டிலும் வைத்துக்கொண்டு வாழமுடியாது. ஆனால், சயின்ஸ் ரீதியாக அல்லாமல் கலையை வேறு எப்படிக் கற்கமுடியும்?"

பிறகு, அரசியலைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை அறிய விரும்பினேன். "உங்களுக்கு அரசியலில் சிரத்தையுண்டா? காங்கிரஸ் கொள்கையையும் காந்திஜியின் வழியையும்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"கலையில் அரசியல் கலக்கவே கூடாது" என்று அழுத்தமாகச் சொன்ன ருக்மிணி தேவி, "அதாவது, நான் சொல்வது இதுதான்: தமிழ், தெலுங்கு என்றெல்லாம், கலைகளில் விவகாரம் கிளப்பக் கூடாது" என்று முடித்தார். சற்று நின்று மேலும் சொன்னதாவது: "காங்கிரஸ் கொஞ்சம் தீவிரமான கொள்கையுடையது. ஒவ்வொரு கட்சியும் தான் சொல்வதே சரி யென்று பிடிவாதம் செய்து கொண்டிருந்தால், போகும் வழி யென்ன? எல்லாக் கட்சிகளும் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒற்றுமைப் படவேண்டும்" என்றார்.

மீண்டும் தொடர்ந்து "பாக்கிஸ்தான் மட்டில் கூடவேகூடாது. ஏனெனில், உலகத்துக்கே இந்தியர் போதிக்க வேண்டிய படிப்பினை ஒன்று உண்டு. பல்வேறு சமூகத்தினரும் மதத்தினரும் ஜாதியினரும் நிறத்தினரும் ஐக்கியப்பட்டு இசையோடு வாழும் மார்க்கத்தை உலகத்துக்குக் காட்டுவது இந்தியாவின் கடமையாகும்" என்று ஸ்ரீமதி ருக்மிணி கூறினர்.

இன்று உலக முழுவதையும் நிலைகுலையச் செய்துகொண்டிருக்கும் யுத்தத்தைப் பற்றிக் கேட்டதற்கு, ஸ்ரீமதி ருக்மிணி சொன்ன பதிலாவது: "இதைப் பிரளயம், கர்ம பலன் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நாட்டுக்கும் இது ஒரு பாடமாகும். நமக்கு ஒற்றுமை வேண்டும்; இந்த யுத்தத்தினல் அது உண்டாகலாம். கீழ்நாட்டை மதிக்கவேண்டும், நிறத்திமிரைக் கைவிடவேண்டும் என்ற பாடத்தை, இது பிரிட்டனுக்குப் போதிக்கிறது."

"நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்தப் பேரிருளுக்கு நடுவே உங்களுக்கு ஏதேனும் ஒளிக்கிரணம் தென்படுகிறதா? இந்தக் கோர நாசத்தின் முடிவிலே, எதிர்காலத்தில் மனித வர்க்கம் மேன்மையடையுமென்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று பின்னும் கேட்டேன்.

"அதென்னவோ, நானறியேன். ஆனல், இந்தியா சுதந்தரமடைந்துவிடும். நான் ஜோஸ்யக்காரியல்ல; என்றாலும், இந்தியா சுதந்தரமடைவது நிச்சயம் என்றுமட்டில் திடமாய் நம்புகிறேன் — சென்ற யுத்தத்தின் படிப்பினையை நாம் அறிந்து கொள்ளாததால் தான், இந்த யுத்தம் வந்திருக்கிறது" என்று அவர் கூறினர்.

கேள்வி: "இந்தமாதிரி நெருக்கடியான வேளையில், கலைகள் முதலிய தமாஷாக்கள் எல்லாம் கூடாது; அவைகளைக் கைவிட்டு, நைஷ்டிகமாய் நடந்தால் தான், தேசத்தின் பலத்தைத் திரட்டி வளர்க்க முடியும் என்று சிலர் நினைக்கிறார்களே? அதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா?"

பதில்: "கலைகளையும் நாகரிக வாழ்க்கையையும் கைவிட்டால், காட்டுமிராண்டித் தனத்துக்கு நாம் திரும்பவேண்டியது தான். நமக்கும் யுத்தவெறி, பேராசை ஆகியவையே உண்டாகும். நாகரிகமடைந்த மனிதனுக்கும் காட்டுமிராண்டிக்கும் உள்ள ஒரே ஒரு வித்யாசம் கலாச்சாரம் தான். என்ன யுத்தம் நடந்தாலும், குழந்தைகள் இல்லையா? ஸ்திரீகள் இல்லையா? குடும்பம் இல்லையா? குழந்தைகள் தானே வருங்காலத்தைச் சமைக்கப்போகிறவர்கள்? அவர்களுக்குச் சரியான கல்வி வேண்டாமா? அவர்களையும் யுத்த வெறியர்களாகச் செய்துவிடலாமோ? 1938-ஆம் வருஷத்தில் நான் ஜெர்மனிக்குச் சென்றிருந்தபோது, ஆறு வயதுக் குழந்தையெல்லாம் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு, 'இதோ பார், துப்பாக்கி. உன்னைச் சுட்டுவிடுவேன்' என்று சொல்லும். குழந்தைகளின் கூட்டமொன்றில் ஒரு குழந்தை என்னை அமெரிக்கச் சிவப்பிந்திய ஜாதியினள் என்று நினைத்துக் கொண்டது: 'நீ எத்தனை பேரைக் கொன்றிருக்கிறாய்?' என்று என்னைக் கேட்டது! அவ்வளவு யுத்த வெறி குழந்தைகளுக்கும் அங்கே உண்டாகிவிட்டது!"

இதோடு நிறுத்திக்கொண்டு, "வெகுநேரம் சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்" என்று சொல்ல வாயெடுத்தேன். இதற்குள் அவர் முந்திக்கொண்டு, "ஏது! ஏராளமாய்ச் சொல்லிவிட்டேன் போலிருக்கிறது. இவ்வளவையும் எழுதுவது சிரமமாயிருக்குமே" என்றார்.

"அதெல்லாமில்லை. இன்னும் சொன்னலும் எழுதிவிடுவேன்" என்று கூறி விடை பெற்றேன்.

## திருடனின் கடிதம்

ஆஸ்திரேலியாவிலே ஒரு சிறிய திருட்டு நடந்தது. "என் வீட்டில் 18 பவுன் 10 ஷில்லிங் களவு போயிற்று" என்று, ஒருவன் போலீஸில் எழுதி வைத்தான். விஷயம் பத்திரிகைகளில் வெளி வந்தது.

மூன்று நாளைக் கெல்லாம் போலீஸ் அதிகாரிக்கு ஓர் ஆச்சரியமான அநாமதேயக் கடிதம் கிடைத்தது: "இன்ன வீட்டுக்காரன், 18 பவுன் 10 ஷில்லிங் களவுபோனதாய்ச் சொல்லுகிறனும். அது பொய். அவனுக்கு 10 பவுன் 1 ஷில்லிங் 6 பென்ஸ் தான் களவு போயிற்று என்று நான் சொல்லுகிறேன். அதை நம்பாமல், மிச்சமுள்ள தொகையையும் எங்களுக்குப் பங்கிட்டுக் கொடு என்று என் பிள்ளைகள் என்னிடம் சண்டைக்கு வருகிறார்கள். அவர்கள் கேட்கும் பணத்தை நான் கொடுப்பதானல், எனக்கு மிக நஷ்டமாகும். ஆகையால், அந்த வீட்டுக்காரனைப் பத்திரிகைகளில் ஒரு திருத்தம் போடச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் என்ன நடக்குமோ. எச்சரிக்கவில்லையென்று பின்னல் என் மேல் அவன் குற்றம் சொல்லக்கூடாது."

## யோசனை சரிதான்

ஐக்கிய அமெரிக்காவின் மாஜி பிரஸிடெண்டுகளில் ஒருவரான தியடோர் ரூஸ்வெல்ட், ஒரு சமயம் ஒரு சிவப்பிந்தியச் சிற்றரசனிடம் சென்று, பின்வரும் ஹிதோபதேசத்தைச் செய்தார்: "நீ ஐந்து ஸ்திரீகளை மணந்து கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் எட்டுகிறது. இப்படிப் பல தார மணம் செய்து கொள்வது, நம்முடைய சட்டங்களுக்கும் தர்மத்துக்கும் விரோதமாகும். ஆகையால், நாலு பேரை விலக்கிவிட்டு, ஒரே ஒரு மனைவியோடு நீ வாழவேண்டும்."

இந்த யோசனையை அந்தச் சிற்றரசன் வெகு சுவாரஸ்யமாய்க் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "மாட்சிமிக்க வெள்ளைக்காரப் பிதாவே! நீங்கள் சொல்கிறபடி நான் செய்யத் தயார்; ஆனல், எனக்கு நீங்கள் ஓர் உபகாரம் செய்யவேண்டும்" என்றான்.

ரூஸ்வெல்ட்: "அதென்ன? சொல்."

சிவப்பிந்தியச் சிற்றரசன்: "அந்த ஐந்து பேரில் ஒருத்தியை நீங்களே எனக்குப் பொறுக்கித் தரவேண்டும்; பிறகு, மற்ற நால்வரிடமும் போய் அந்தச் செய்தியைச் சொல்லி, அவர்களை வெளியே அனுப்பிவிடவேண்டும்—இவ்வளவுதான் நீங்கள் புரிய வேண்டிய உதவி."

சரித்திரக் கதை

# இரஞ்சிதன் தேவி

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

> ஒரு சந்திரமதி கணவனது சத்தியங் காப்பாற்றப் படாத துன்ப மெல்லாம் பட்டாள். மற்றொரு சந்திரமதி, கணவனின் வீரத்தை அவனுக்குப் பின்னும் கடைசிவரை காத்து உயிர் துறந்தாள். பாஞ்சாலத்தின் அவ்வீரமாதின் புனிதமான சரித்திரம் மிக்க உருக்கமானது.

பாரத பூமியின் பழம் பதிகளில் ஒன்று பஞ்சநதப் பிரதேசம். இப்போது அதைப் பஞ்சாப் என்பர். அஃது ஆரியரின் ஆதி உறைவிடம். வேத, வேதாங்கங்கள் அங்குத்தான் உதித்தன. தரைமார்க்கமாக நம் தேசத்தின் மேலைத் தலைவாயில் அதுவே. இன்றும் இந்தியாவின் கோட்டைவாயில் அதுதான்.

அப்பிரதேசத்தின் வீர மரபினர் சீக்கியர். சிங் அல்லது சிம்மம் என்பது அம்மரபினரின் பட்டப்பெயர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலே அன்னாரின் தலைவனாக விளங்கியவன் இரஞ்சித சிம்மன். பஞ்சாப் சிங்கம் என்று அவனுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அவன் பெருவீரன்; வெகு சூரன்; மிக்க தீரன்; பரம சுதந்திரப்பிரியன்; விழுமிய தேசபக்தன்.

இரஞ்சித சிம்மன் சிம்மாசனம் ஏறிய சமயம், தேச நிலையைக் கூர்ந்து நோக்கினான். ஆங்கில வர்த்தகக் கூட்டத்தார் சிறிது சிறிதாக இங்கே மண் சேர்த்து வந்தனர். சுதேச அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்து வந்தன. அவை அன்னிய வர்த்தகரின் வசமாயின. மறையாதன உரிமையிழந்தன. எங்கும் வர்த்தகர் ஆதிக்கங் கொள்ளலாயினர்.

பஞ்சாப் சிங்கத்திற்கு மனம் பொங்கியது; தேசாபிமானம் ஓங்கியது; சுதந்திர தாகம் மேலிட்டது. போர்க்குணம் வாய்ந்த சீக்கியரை அவ்வேந்தன் திரட்டினான்; வீறு ஊட்டினான்; மேற்கே காந்தாரம் முதல் கிழக்கே டில்லி வரையில் வீரக்கொடி தூக்கினான்.

புதிய வரசு—போட்டி யரசு—பொங்கி நின்றது. வர்த்தகக் கூட்டத்தார் பார்த்தனர்; அச்சமும் திகிலும் கொண்டனர்; அறிவும் இழந்தனர்; ஆண்மை காட்டவும் கருதினர்; பகீரதப் பிரயத்தனமும் செய்தனர். சிங்கத்தின் முன்னே சீறி நிற்பது எப்படி? சமர் முயற்சி சிதறுண்டது. என் செய்வர் வர்த்தகக் கூட்டத்தார்!

சமர்முனை சிதறினால் என்ன? சூதுமுனை — சூழ்ச்சிமுனை — வஞ்சனைமுனை—இல்லையா? தற்கால அரசியலிலே அம்முனையை ராஜதந்திர முனை என்பர். அம்முனையில் இறங்கினர்; அரும்பலனும் கண்டனர். மன்னவன் இரஞ்சித சிம்மன் மாயமாக மாண்டு போயினான். பகைவரின் சதியே காரணம் என்று பலரும் கொதித்தனர்; பழிவாங்கவும் சமயம் பார்த்தனர்.

இரஞ்சிதனுக்கு மைந்தர் மூவர். மூவரும் காரக சிம்மன், சேர சிம்மன், திலீப சிம்மன் எனப்படுவர். மூத்தவன் முடி மன்னவன் ஆனான். வான வீதியிலே வானவன் மறைந்த பின்னர், பற்பல உடுக்கள் தோன்றும்; மினுக், மினுக் என்று மிளிரும். இரஞ்சிதன் மறைந்ததும், சதிகார அமைச்சரில் சிலர் கிளம்பினர்; படுமோசக்காரரான படைத் தலைவரிலும் சிலர் எழுந்தனர்; தேங்காய்க் கீற்றுக்கு ஆசைப்படும் நாயைப் போல், அரசியலை நச்சினர்; அடாத செயலும் புரிந்தனர். அன்னியரோ பக்க பலமாக நின்று, வேடிக்கை பார்த்தனர்.

மூத்த மைந்தன் காரக சிம்மன் கொலையுண்டான்; பின்பு மகுடந் தரித்த சேர சிம்மனும் அக்கதி யடைந்தான். இரஞ்சிதன் மறைந்த நாலாண்டினுக்குள் இருவர் அரசர் உயிர் பறியுண்டனர். பிரதேசம் படாதபாடு படலாயிற்று. கலகம் கிளம்பியது; குழப்பம் நிரம்பியது. சதிகாரரின் கோலாகலமும் விஞ்சியது. கிளம்பிய அமைச்சரும் எழுந்த தளகர்த்தரும் மாறிமாறி அரியணையில் அமர முயன்றனர்; முடிவில் படுகொலையுண்டனர்; அந்தகன் உலகும் சேர்ந்தனர்.

இரஞ்சிதன் தேவி—மகாராணி சந்திரமதி—மனம் புழுங்கினாள்; கடையவன் திலீபனைச் சிம்மாசனத்தில் இருத்தினாள்; தானே அரசியலை நடத்தத் தொடங்கினாள். திலீபனுக்கு அப்போது வயது ஐந்தே! சந்திரமதி பெருமதி படைத்தவள்; பெருவீரம் வாய்ந்தவள்; ஆற்றல் மிகக் கொண்டவள்; ஊக்கத்தின் ஊற்றுப் போன்றவள்!

பரநலம் துறந்து, சுயநலம் மிகுந்து திரிந்து நின்ற அமைச்சரை வரவழைத்தாள்; பரிபவம் இழைத்து நின்ற படைத் தலைவருக்கு ஆணை விடுத்தாள்; சொல்வன்மை கொண்டும் சதுர்வித உபாயங் கொண்டும் அன்னாரை நல்வழிப்படுத்தினாள்; சிதறுண்டு கிடந்த சீக்கியரைத் திரட்டினாள்; வலி மிகப் படைத்த வாள் வீரரைக் கூட்டினாள்; பெருஞ்சேனை சமைத்தாள். அம்மாதரசி இத்துடன் நிற்கவில்லை.

அரசியலின் அங்கங்களில் ஆண்மையாளரை அமர்த்தினாள்; பொறுப்பான பதவிகளிலே தக்காரை நியமித்தாள். சத்தியசந்தரைப் படைத் தலைமையில் பொருத்தினாள். உடனே சீர்கேடுகள் மறைந்தன. ஒழுங்கும் கட்டுப்பாடும் உயர்ந்தன; எங்கும் நலமும் பலமும் நிரம்பின; வளமும் வாழ்வும் பெருகின. பஞ்சநதப் பிரதேசம் பரிபவம் அகன்று, பரமானந்தம் கொண்டது.

வர்த்தகரை வாட்டவேண்டும், அன்னியரை விரட்டவேண்டும், பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று பலரும் துடித்தனர். காலங் கருதி வாளா விருப்போம் என்றாள் சந்திரமதி. வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிப் பார்த்தே காரியஞ் செய்யவேண்டும் என்பது அக்காரிகையின் கருத்து.

மன்னவனை மரிக்க வைத்தும், மைந்தரை உயிர் பறித்தும் என்ன? மாதொருத்தி தோன்றி, வைரங் கொண்டு நிற்கின்றனளே என்று வர்த்தகர் வயிறு பிசைந்து நின்றனர்; பஞ்சநதப் பிரதேசத்தின் கிழக்கெல்லே நெடுக வீரரை நிறுத்தி வைத்தனர்; சண்டை தொடங்கவும் சமயம் பார்த்திருந்தனர். சந்திரமதியும் சும்மா இருக்கவில்லை. முன்னெச்சரிக்கையாகத் தன் வீரரையும் எல்லை நெடுகக் காவலுக்கு நிறுத்திவைத்தாள்.

சண்டைக்கு ஒரு சாக்கு வேண்டுமே! துரியோதனனே மாடு பிடி என்றான். வர்த்தகக் கூட்டத்தாரோ சீக்கியர்மீது பழி சுமத்தினர். பல சொல்லி என்ன? ஆங்கிலப் படைகள் போரில் இறங்கி விட்டன. சீக்கியரும் சிம்ம கர்ஜனையுடன் சமரபூமியில் குதித்தனர். சந்திரமதி சேனைத் தலைமை பூண்டாள்; பெண் சிங்கமேபோல் சமரும் புரிந்தாள்! வர்த்தகரின் வீரர் வெட்டுண்டு வீழ்ந்தனர்.

போர் முனையில் வீரமாதை வெற்றி கொள்ள வர்த்தகரால் இயலவில்லை; இயற்கையான—பிறவிப் பெருங்குணமான—வஞ்சனை வழியில் முனையலானார்கள்; காசை வாரி வீசினர்கள்; பஞ்சாப் மண்ணையும் பங்கிட்டுத் தருவதாக ஆசை காட்டினர்கள். மண்ணும் பொன்னும் கூடிக் கொண்டு, மயக்கம் எழுப்பின; மாயம் விளைத்தன. சீக்கிய அமைச்சரிலும் தளகர்த்தரிலும் பலர் சிந்தை திரிந்தனர்; மானபிமானமும் தேசாபிமானமும் துறந்தனர்; மாற்றானுக்குக் கையாள் ஆயினர்; மறைவாக உளவு கூறவும் முற்பட்டனர்.

எல்லா மறிந்த சந்திரமதி இம்மியும் மனம் சலிக்கவில்லை. ஒரு சமயம் ரணரங்கத்திலே, தளகர்த்தர் பலரும் அரசியைக் கைவிட்டகன்றனர். சந்திரமதி மட்டும் தன்னந்தனியே நிற்க நேர்ந்தது. அப்போதும், முன்னணியில் நின்றே போரை நடத்தினாள்; வீரருக்கு உற்சாகம் ஊட்டினாள்; வர்த்தகரின் வீரரை வாட்டி வதைத்தாள். பகைவரின் சிரங்கள் உடலைவிட்டு மாங்காய் போல் உதிர்ந்தன. வீரலட்சுமியே வடிவுதாங்கி வந்துளாளென ஒன்னலரும் அதிசயித்தனர்.

ஓரிடமன்று; ஐந்திடங்களிலே வர்த்தகருடன் பெரும்போர் நடந்தது. சீக்கியர் சிங்கம்போல் சமர் முறுக்கினர்; வைரியை மடக்கி மடக்கியடித்தனர். ரஜபுத்திரரைப் போல் சீக்கியரும் சமர் வெறி பிடித்தவர்கள். போரில் புகுந்து விட்டால், ஒன்று வெற்றிமாலை; இன்றேல் வீர சுவர்க்கம்! வேறெதனையும் சிந்தியார்.

சீக்கியரின் வீராவேசம் செப்புந்தரமன்று. கறையானைபோல் சிறிது சிறிதாக மண் சேர்த்துவந்த வர்த்தகக் கூட்டத்தார் அது கண்டு கதி கலங்கினர்; வாழ்வெல்லாம் வீழ்ந்து விடுமோ என்றஞ்சினர்; தப்பிப் பிழைக்கும் வகை யாதோ என்றும் இடிந்து போயினர். பேராபத்திலே அவர்களைக் காப்பது பெருமோசம் ஒன்றுதான்; பிரித்தாளும் தந்திரந்தான்; பசப்பு மொழி பகர்ந்து, யாரையும் வசஞ் செய்யும் பான்மைதான். சுருங்கச் சொல்லின், சந்திரமதியின் சேனையிலே பிளவு நேர்ந்துவிட்டது.

மகாராணி அது கண்டு மனமொடிய வில்லை. தளகர்த்தரின் துரோகம் ஒரு புறம், சீக்கியரின் வீர சுவர்க்கம் ஒரு புறம், பகைப் படையின் பெருக்கம் ஒரு புறம்—இவை காணக்காண, அவள் வீரம் வானேங்கி நின்றது. "சேனை சிதறுகிறதே, என் செய்வது?" என்று தளகர்த்த னொருவன் விரைந்து வந்து விளம்பினன். "நல்லது. ராணி இருக்கிறாள், நீயும் இருக்கிறாய்; இருவரும் சேர்ந்து போரை நடத்துவோம்" என்றாள் அத்தேவி.

மற்றொரு சமயம் அமைச்சனொருவன் அரசியை யணுகி, "அன்னாய்! விதியில்லை. போரை நிறுத்துவோம். கொக்கொக்க கூம்பும் பருவத்து என்றனர் ஆன்றோர். சீர்த்த இடத்து அதன் குத்தே போல் பூரிப்போம்" என்றான் மெதுவாக. அத்தேவி யாது சொன்னாள்?

"மதி மந்திரி! மகாராஜர் இருந்திருப்பின், இச்சமயத்தில் என்ன செய்வார்? அறியாயோ நீ! முடிவு வரையில் போரை நடத்தியே தீருவார்? முதுகு காட்டியோட, மன மொப்புவாரோ? யானே அவர் தேவி. அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதே என் கடமை. அச்சப் பேய்க்கு நீ ஆளாகி விட்டனையோ? அங்ஙனமாயின், உன் வீடு செல்லலாம். நின் மனையாள் உன்னை வரவேற்க மாட்டாள். வாயில் கதவைத் தாளிட்டு, உன்னைப் புறங்கடையில் நிறுத்தி வைப்பாள். சீக்கிய மாதரின் தன்மை இது, சிந்தித்துப் பார். சிறுமையுரை ஏன்? அமைச்சன் உயிருக் கஞ்சி ஓடின், அரசி மட்டும் தனிமையில் நின்று, தணியாச் சமர் செய்வாள். இந்த உடலில் உயிர் உலவி நிற்கும்வரையில், பஞ்சநதப் பிரதேசத்திலே காலடி வைக்கவும் பகைவருக்கு இடங் கொடேன். திண்ணம் இது!"

அது கேட்ட அமைச்சன் மதியிழந்து, வாயிழந்து, வந்த வழியே நோக்கிப் போனான். சண்டை ஓயவில்லை. நீண்டகாலம் தொடர்ந்து நடந்தது. சந்திரமதி சிறிதும் சளைக்கவில்லை; சிங்க நாதஞ் செய்தே நின்றாள்.

மீண்டுமொரு சூழ்ச்சியில் இறங்கினர் அவ்வர்த்தகர். திலீப சிம்மனை வசஞ் செய்து கொண்டனர். "அரசன் ஆணை. போரை நிறுத்த வேண்டும்" என்று தூதுவன் சென்று, சந்திரமதிக்குச் செப்பினன்.

பெருஞ் சூழ்ச்சிக்கு முன்னே அவள் தலையெடுக்க முடியவில்லை. "பிள்ளைக்காகத் தானே இவ்வளவு போரும் வீறும்! பிள்ளையே போரை நிறுத்து என்கிறான். என் செய்வோம்?" என்று போரை நிறுத்தினாள்.

லாரன்ஸ் என்பான் பஞ்சாபின் மேலதிகாரியானான். திலீபனே அவன் சொற்படி நடந்துவந்தான். சந்திரமதியும் விதியின்றி வாய் மூடிக் கிடந்தாள். குடிமக்களும் வீரரும் அவ்வரசியை அன்னை போல் நினைத்து நடந்து வந்தனர்.

நீறுபூத்த நெருப்பேபோல் அரசியும் வீரரும் துலங்கி நின்றனர். வர்த்தகக் கூட்டத்தாருக்கு அது கண்டு மனம் பொறுக்க வில்லை. சந்திரமதியை அகற்றி விடவேண்டும் என்று முடிவு கட்டினர். அப்போதும் சூழ்ச்சியே அவர்களுக்குத் துணை புரியலாயிற்று. ஈதிங்ஙனமிருக்க,

ஒரு நாள் அரசி தன் நாட்டை நினைந்து நெக்குருகிக் கிடந்தாள். தூவதுவ னொருவன் கடுகி வந்து தூர நின்று "அரசியே! அரசன் தந்த நிருபம் இது" என்று ஓர்

ஓலையை நீட்டினன். சந்திரமதி அதைப் பிரித்துப் பார்த்தாள்; பன்முறை படித்தாள். "சந்திரமதி தேவி இக்கணமே நாட்டை விட்டு ஏக வேண்டும். இஃது மகாராஜா திலீபசிம்மன் ஆணை" என்று பொறித்திருந்தது.

அது பார்த்த அரசி, "ஆம். திலீப சிம்மன் மகாராஜன்! நான் அவன் அன்னைதான். ஆயினும் என்ன? அரசனுக்குக் கட்டுப்பட்ட பிரஜைதானே. எனவே அரசன் ஆணைக்கு அடங்கி நடத்தல் என் கடமை. மீறி நடத்தல் ஒண்ணாது. இதோ செல்லுகிறேன். மைந்தனுக்கு எதிராக எதுவும் செய்ய இசையேன். இசைதலும் ஈனம்; பாவமுமாம். நல்லது. இனி என்னால் ஆவது யாதொன்றுமில்லை. தெய்வமே! எல்லாம் உன் செயல். சரி, பஞ்சநதப் பிரதேசம் பகைவர்வசமாகப் போகிறது. தடுக்க வல்லார் ஒருவரும் இலர்!" என்று புலம்பினள்; வாயிலிலே காத்து நின்ற ஆங்கிலப் படைகள் புடைசூழ்ந்து வர, சேகரபுரம் போயினள்.

அந்நகரோ வாசத்துக்கு வாசியற்றது. பஞ்சாப் சிங்கம்—இரஞ்சித சிம்மன்—தேவி, இணையாருமிலா வீரவரசி, எழில்நலம் வாய்ந்த வயோதிக மாது—எளிய சிறையாளைப்போல் காவல் கூடத்திலே வாடி வதங்க நேரிட்டது. கேட்டனர் சீக்கியர்; எழுந்தனர் கோபத்துடன்; பாய்ந்தனர் அன்னியர்மீது.

மக்களின் கொந்தளிப்பைக் கண்டதும் வர்த்தகர் விழித்தனர்; சந்திரமதிக்குச் சிறை மீட்சி கிட்டுமோ என்றஞ்சினர். உடனே பஞ்சாபை விடுத்து, காசிமா நகரில் அத்தேவியைக் கொண்டு வைத்தனர். புண்ணிய வாரணசிக்கு இட்டுச் செல்லுகிறோம் என்று, காவல் வீரனொருவன் கழறினன்.

அது கேட்ட சந்திரமதி, "காசியில் கட்டுண்டு கிடந்தால் என்ன? சேகர புரத்தில் சிக்குண்டு கிடந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். எரிகிற கொள்ளியிலே எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?" என்றே இயம்பினள்.

காசிமா நகரம் சேர்ந்ததும், அவ்வரசி துடி துடிக்கலானாள். தன் நிலையை நினைந்தா? அன்று! தன் மகன் நிலையைக் கேட்டா? அன்று! அன்று!! அரசுரிமை கை தவறியதே என்றா? அதுவுமன்று! பின், எதற்கு? பஞ்சநதப் பிரதேசத்தின் நிலை கண்டு!

"அந்தோ! பஞ்சநதப் பிரதேசமே! பாங்கான பழம் பதியே! ஆரியரின் அருந்தலமே! வேதங்களின் பிறப்பிடமே! வேள்விகளின் விளைநிலமே! வீரரின் வாழ்விடமே! உபநிஷதங்களின் உயர் தலமே! ஒன்னலரை ஓட்டும் வீரத் தாயகமே! மாபாரதந் தொட்டு மகிமை வாய்ந்த மகிதலமே! அன்னியரை மறித்து நின்ற மாண்பிடமே! இரத்த ஆறு ஓடும் பஞ்சநதமே! சீக்கியரின் சீரிய இடமே! பதின்மர் குருமாரின் இன்னிலமே!

"அன்னியரின் கையில் சிக்குண்டனையே! உன் கீர்த்தியும் நேர்த்தியும் இனி என்னுமோ? வர்த்தகரின் கையில் நீ அலக்கண் உறுவதோ? காரிகையே, நம் பழம் பதியைக் கை விட்டனையே என்று கனவில் தோன்றி என் காந்தன் வினவின், யாது விளம்புவேன்? ஏதுரைப்பேன்? என்ன சொல்லுவேன்? சிங்கத்தின் வயிற்றில் சுண்டெலி வந்து பிறந்ததெனச் சாற்றுவதோ? சதிகாரரின் சூழ்ச்சி விஞ்சியதென வாய் கொண்டுரைப்பதோ? ஆபத்தில் அமைச்சர் கைவிட்டனரெனக் கழறுவதோ?

"மைந்தன் திலீபன் மாசுண்டான், மயங்கி வீழ்ந்தான், மகுடந் துறந்தான், உபகாரச் சம்பளம் பெற்றான், இங்கிலாந்து சென்றான், ஈனமே கொண்டான், இழிவே தேடினன் என்று நான் நாவால் உரைப்பதோ? திலீபனைப் பெற்ற வயிறு என்ன வயிறு! பேடியைப் பெற்றெடுத்தேன், பேதுறுகின்றேன் என்று புலம்பிப் புகல்வதா? அந்தோ! அந்தோ! என் தாயகமே! என் நாதன் இருந்த இடமே! என்னே உன் வீழ்வு! வீழ்வினுக்கும் ஒரு வரையறை கிடையாதோ? போர் முனையில் வீழ்ச்சி கொண்டால், உலகம் ஒருவகையில் ஒவ்வும். வஞ்சனை முனையில் வாழ் விழத்தல் விதி போலும்!" என்று அம்மங்கை நல்லாள் புலம்பலானாள். மனநோயுடன் உடல் நோயும் கூடிக் கொண்டது.

சீக்கிய சமூகம் அத் தேவியைத் தாயும் தெய்வமுமாகக் கொண்டிருந்தது. தேவியின் நோய் கேட்டதும், அச்சமூகம் கொண்ட துயரும் தாபமும் கூறுந்தரமன்று. வர்த்தகரின் வஞ்சனையும், சீக்கியச் சுயநலமிகளின் துரோகமும் அத் துயரையோ தாபத்தையோ அடக்க முடியவில்லை. கொதிப்பு கோர யுத்தமாக வடிவுகொண்டது.

சீக்கியர் மீண்டும் படுகளத்தில் பாய்ந்தனர். வர்த்தகரின் சேனையும் சீறி எழுந்தது. போரின் கொடுமையை — கோரத்தை — மிடுக்கை—விரித்துரைத்து என்ன பயன்? அடைபட்டு விடுபட்ட அரியேறுகளேபோல் சீக்கிய வீரர் ஆவேசமாகச் சமர் செய்தனர்; பகைவரை நூற்றுக் கணக்காக வெட்டிச் சாய்த்து, வீறு காட்டினர்; இரத்தக் குளிப்புக் கொண்டு ஓரளவு ஆறுதல் அடைந்தனர்; வெற்றி விழாவும் கொண்டாடினர்.

ஓயாமல் ஒழியாமல் நெடுங் காலம் போர் புரிந்து சீக்கியர் களைத்து நின்ற சமயம், வர்த்தகரின் சேனை திரண்டெழுந்து, வஞ்சனையாகச் சமர் செய்தது. சீக்கியர் அனைவரும் வீரசுவர்க்கம் புகுந்தனர். எஞ்சி நின்ற சீக்கியரை நிராயுதபாணிகளாக ஆக்கி விட்டனர். நகமும் பல்லும் இழந்த சிங்கம்போல் கிடந்தது அச் சமூகம். பின்னரே வர்த்தகக் கூட்டத்தாருக்கு நிம்மதி பிறந்தது.

வாரணசி நகரிலே தன்னந் தனியே மகாராணி சந்திரமதி நோய் கொண்டு வாடிக்கிடந்ததை வள்ளலே அறிவான். நாளடைவில் சந்திரமதிக்கு ஜன்னிபாத ஜுரம் கண்டது. அப்போது யாரும் பிதற்றுவர். சந்திரமதி யாது பிதற்றினள்?

"என் செல்வக் குழந்தைகாள்! சீக்கியச் சிங்கங்காள்! சீக்கிரம் சீறி எழுங்கள். போர் முனையில் பாயுங்கள். பகையைப் பிளந்து எறியுங்கள்; பஞ்சநதத்தின் மானத்தைக் காப்பாற்றுங்கள். குரு கோவிந்தரின் சீடர்கள் அல்லவோ நீங்கள்? முன்னம் பாலரும் பெண்டிரும் நம் மரபின் மானங் காத்தனர்; மகிமை பூண்டனர். கிளம்புங்கள், கிளம்புங்கள். விஜய லட்சுமி உங்களைக் கடைக்கணிப்பாள்."

மகாராணியின் நிலை கண்ட ஆங்கில அதிகாரியொருவன் கழிவிரக்கங் கொண்டான்; கடை

நாளிலே மைந்தனது அருகிலிருப்பின், தேவிக்கு ஆறுதலாயிருக்கும் என்று எண்ணினான்; கண்மூடுங் காலையில் வஞ்சினங்கூறிச் சாபவுரை பகர்ந்து செல்லாதிருத்தல் மேலென நினைத்தான். அத்தேவியை இங்கிலாந்துக்கு அனுப்ப, கல்கத்தா நகர் கொண்டு சேர்த்தான்.

சந்திரமதி சிறையுண்ட பின், திலீபனிடமிருந்தும் அரசைப் பறித்தனர். அப்புதல்வன் மதி மோசங்கொண்டு, ஏசுநாதரின் மார்க்கத்தில் புகுந்தான்; அரசை விட்டுக்கொடுத்தான்; ஆயிரக்கணக்கில் ஜீவனாம்சம் பெற்றான்; இங்கிலாந்துக்கு ஏகினான்; ஆங்கில மாதொருத்தியையும் மணந்துகொண்டு மையலில் மூழ்கினான்.

கண்ணிரண்டையும் விற்று, மின்மினி கொண்டதுபோல் அரசைக் கைவிட்டு, ஆடம்பரச் செலவுக்கு அருந்தனம் பெற்று, ஆடலிலும் பாடலிலும் ஆழ்ந்து கிடக்கலானான். அதுவேளை சந்திரமதியை இங்கிலாந்துக்கு அனுப்ப, ஒரு கப்பலில் ஏற்றினர்.

பரம்பரை யரசையும் புராதன மதத்தையும் இழந்து, பேடிபோல் கிடக்கும் புதல்வனைப் பார்க்கவும் அத் தேவி விரும்பவில்லை. ஆண்டவனும் அதுவே சரியென்றான் போலும்! வழியிலே அத் தேவியின் உயிர் பிரிந்தோடிவிட்டது.

வீரமாதின் சடலத்தைப் பூமியில் புதைப்பின், அம்மண்ணும் வீறுகொள்ளுமென வர்த்தகர் கருதினர் போலும்! கடலகத்தே அச்சவம் அடக்கமாயிற்று. உடனே கருங்கடலும் கொதிப்புக்கொண்டு பேரலைகள் கொண்டு கப்பலை மோதிக் கோபங்கொண்டதென்னலாம்.

---

“ஒரு மனிதனைப் படிக்க வைத்தால், ஒரே ஒரு நபரைத்தான் படிக்க வைத்ததாகும். ஒரு பெண்ணைப் படிக்க வைத்தாலோ, ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததற்குச் சமமாகும்” என்கிறார் டாக்டர் சார்லஸ் டி. மிக் லிவர் என்ற அறிஞர்.

* * *

“ஐரோப்பா ஒரு பைத்திய ஆஸ்பத்திரியல்ல. ஏனென்னில், பைத்திய ஆஸ்பத்திரியில் பைத்தியங்களைச் சுயேச்சையாய் விடாமல், கண்காணித்து வைத்திருப்பார்கள்”

—டப்ளின் ஒப்பினியன்.

---

சிறு கதை:

# ஆமையும் மகாராஜாவும்

முல்க்ராஜ் ஆனந்த்

> மோட்ச சாம்ராஜ்யத்துக்குச் செல்ல முஸ்தீப்புச் செய்கிறார் ஒரு மகாராஜா. அதைப் பற்றிய இந்த விசித்திரக் கதையை, லண்டன் ‘பார்ட் நைட்லி’யில் நண்பர் ஆனந்து எழுதியுள்ளார். ஆங்கில இலக்கியத்தில் ஒரு புதிய மோஸ்தர் என்று இது கொண்டாடப்படுகிறது.

உதாம்பூர் சமஸ்தானத்தை ஆண்டு வரும் சுராஜ் பன்ஸி ராஜ வம்சத்தார் நேரே சூரிய குலத்தில் ஸ்ரீ ராமபிரானுடைய பரம்பரையில் வந்தவர்களாம். மகா புராதனமான வம்சம். இந்திய சர்க்காரே ஒரு விசேஷ உத்திரவு பிறப்பித்து, அதன் மூலம் ‘ரவிகுலோத்தமன்’ என்ற பட்டத்தை மகாராஜா கங்காசிங் பகதூருக்குச் சூட்டியுள்ளார்கள். மேலும், மன்னர் பிரானின் டில்லி தர்பாரில் அவர் ஆர்டர்லி கைங்கர்யம் செய்ததைப் பாராட்டி ‘நைட் கமாண்டர்’ (இரண்டாம் வகுப்பு) பட்டமும் அவருக்குக் கிடைத்துள்ளது. இருபத்தொரு குண்டு மரியாதையும் அவருக்குண்டு.

கங்காசிங் பகதூருக்கு வயதாக ஆக, இவ்வுலக விஷயங்களில் பற்றுதல் வரவரக் குறைந்து, மறுமைப் பேரின்பத்தில் நாட்டம் அதிகமாயிற்று. நாற்பது வயது ஆனதும், தம்முடைய பிரதம மந்திரியும் ஆஸ்தான குருவுமான பண்டித ராமய் பிரஸாதை நோக்கி, தாம் மோட்ச சாம்ராஜ்யம் செல்ல எளிய மார்க்கமொன்றை ஸித்தம் செய்யும்படி, மகாராஜா கேட்டுக்கொண்டார்.

பண்டித ராமப் பிரஸாதர் ஒரு கெட்டிக்கார வக்கீல்; தந்திரசாலி. தர்மசாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்து அவற்றின்படி மகாராஜாவுக்கு ஒரு யுக்தி சொன்னார்: அதாவது, ஒவ்வொரு பௌர்ணமியன்றும் மகாராஜா ஒரு தராசில் உட்கார்ந்து தம் எடை எவ்வளவோ அவ்வளவு பொன்னைப் பிராம்மணோத்தமர்களுக்குத் தானம் செய்யவேண்டும் என்றும், பிராம்மண சமாராதனை எழுநூறு பேருக்கு நடத்தவேண்டும் என்றும், துளஸி மாலையைக் கைப்பிடித்து முந்நூற்று எழுபத்தைந்து தடவை பகவந்நாம ஜபம் செய்யவேண்டும் என்றும். ஒவ்வொரு நாள் காலையிலும் கங்கைக்கரையில் தாமரை மலராசனத்தில் அமர்ந்து தம் வம்ச மூல புருஷனை சூரியனுக்கு அர்க்கியம் விடவேண்டும் என்றும் பண்டிதர் அருளினார். இந்தக் கர்மாக்களைச் செய்யாவிட்டால், மகாராஜாவுக்குப் பேராபத்து வருமென்று கூறினார். சனியும் புதனும் தினசரி மகாராஜாவின் ஜாதகத்தில் கைகலந்துகொண்டேயிருப்பதால், தீரா நோய் வருத்துமென்று புகன்றார்.

உதாம்பூர் அரண்மனை கங்கைக்கு நூற்றைம்பது மைலுக்கு அப்பால், ராஜ புதனப் பாலைவன ஓரத்தில் இருப்பதால், தாம் எப்படித் தினந்தோறும் கங்கைக் கரையில் அமர்ந்து சூரியனுக்கு அர்க்கியம் விடுவது என்று புரியாமல், மகாராஜா சஞ்சலப்பட்டார். ஆனால், ராமப்பிரஸாத் அதி புத்திசாலியல்லவா? கமிஷன் கொடுப்பதில் தலைசிறந்த கண்டிராக்டர் ஸர்தார் பகதூர் சிங்கை உடனே தருவித்து, ஹரித்துவாரிலிருந்து உதாம்பூருக்குக் கங்காஜலம் வரும்படி ஒரு குழாய் போடச் சொன்னார். அற்பமான நூற்றெண்பது லட்ச ரூபாய்தான் இதற்குச் செலவாயிற்று.

சில மாதங்களுக்குள் வேலை முடிந்து குழாய் வந்து, அரண்மனையருகே அழகாய்க் கட்டப்பெற்ற சதுரக் குளத்தில் கங்காஜலத்தைக் கொணர்ந்து பாய்ச்சியது.

மகாராஜா அர்க்கியம் விட, நாளும் முகூர்த்தமும் குறிப்பிடப்பெற்றன. அன்று அதிகாலையிலே பேரிகை அதிர, சங்கு முழங்க,

ஜால்ராக்கள் ஒலிக்க, மணி யோசை செவிடுபட, மகாராஜா தம்முடைய பட்டத்து ராணி யோடு வீற்றிருந்த அரியாசனத்தை விட்டெழுந்து, குளத்தின் படிகளிலே இறங்கினர். அவரது காலிலே வெடித்திருந்த சிலந்திப் புண்ணைச் சுற்றித் துணியால் ஒரு கட்டுக் கட்டப்பட்டிருந்தது. ராமப்பிரஸாதும் பிற மந்திரி பிரதானி புரோகிதர்களும் புடைசூழ, நொண்டி நொண்டி, மகாராஜா நீர்க்கரையை அடைந்தார்.

கீழ்வானம், மகாராஜாவின் மூதாதையான சூரியனது வருகையைகயால் செக்கச் செவேலென்று செவந்து, தூரத்துக் குன்றுகளின் உருவவெளிக் கோடுகளைத் தீட்டி நின்றது.

மந்திரோச்சாடனங்கள் முடிந்தன. கடைசிப் படியில் தாமரை ஆசனத்தில் மகாராஜாவும் பிறரும் சாஸ்திரப்படி தியானபரமாய்க் கண்களை மூடியமர்ந்ததும், பகவத்கீதையை ஆதிமுதல் அந்தம் வரையில் ஓதி முடிக்கப் பாராயணம் தொடங்கியது.

தாம் கண்ணை இறுக மூடினல் எங்கே அப்படியே உறங்கி விழுந்து நீரில் உருண்டு விடுவோமோ என்ற அச்சம் மகாராஜாவுக்கு உதித்தது. ஆகையால், அவர் கண்களை அரைகுறையாய் மூடிமூடித் திறந்துகொண்டார். அப்போது, நீரில் புரோகிதர் பொழிந்த மலரிதழ்களுக்கும் அட்சதைக்கும் நடுவிலே பச்சைப் பந்துபோல் ஒரு பொருள் அரசர் கண்களுக்குத் தென்பட்டது.

தம்மை யாராவது கண்டுவிடப் போகிறர்களே என்ற பயத்தால், ராஜா கீழே தம் பாதத்தை நோக்கிக் கண்களைத் திருப்பிக்கொண்டார். அந்த விசித்திரப் 'பச்சைப் பந்து' இச் சமயம் ராஜாவின் காலருகே வந்துவிட்டது. இவரது கால் கட்டிலே துணியிடுக்கால் தெரிந்த பச்சைக் களிம்பு அதனை இழுத்ததோ என்னவோ! கைகளைத் தாமரை மலர்போல் வைத்துக் கொண்டிருக்கவேண்டுமெனச் சாஸ்திரம் சொன்னபடியால், அவ்விதம் வைத்துக்கொண்டிருந்த தம் கரங்களை அரசர் அசைக்க முடியவில்லை. ஆகையால், அந்தச் சனியன் பிடித்த 'பச்சைப்பந்'தைத் தள்ள முடியவில்லை.

இருந்தாலும், காலை யாரும் பாரா வண்ணம் ஓர் அசைப்பு அசைத்துக் கண்ணைக் குவித்தார்.

திடீரென்று ராஜா 'வீல்' என்று ஓலமிட்டார். கால் கட்டைவிரல் பிரதேசத்தில் தாங்க முடியாத வலியொன்று ஏற்பட்டது. கண்ணைத் திறந்தார். அவருடைய விழிகளிலே திக்பிரமைகொண்ட பயமொன்று பிரகாசித்தது. நீரில் அவர் கண்ணெதிரே பழுப்பு ஊன் துண்டொன்று மிதந்தது. துணிக் கட்டிலிருந்து ரத்தம் பீறிட்டது.

"ஆமை! ஆமை!!" என்று கத்திக்கொண்டு, கைகளை உயர்த்தி, கால்களைப் பின்னே தள்ளி, புரோகிதர்கள் ஓட்டமெடுத்தார்கள்.

"மகாராஜாவின் கட்டை விரலை ஆமை கடித்துவிட்டது" என்று ஒரு பிரதானி கத்தினர்.

"கொலை! கொலை!!" என்று கூச்சலிட்டார் இன்னெரு பிரதானி.

"ரத்தம்!" என்று கதறினர் மூன்றுவது ஆசாமி.

பயங்கொள்ளிப் புரோகிதர்களும் கோழைப் பிரதானிகளும் படிகளில் தாவி, அரண்மனை வாயிலில் போய் நின்றார்கள். மறு கரையில் நின்ற மகாஜனங்கள் "ராம்! ராம்!! ஹரி! ஹரி!!" என்று ராம ஸ்மரணை செய்தார்கள். மகாராஜாவுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்பது அவர்கள் பயம்.

சுளித்த முகத்துடன் வலியைப் பொறுத்துக்கொண்ட மகாராஜா மட்டில், தம் மனேவுறுதியைக் காட்டுவதற்காக அசையாமல் நின்று, ஜனங்களைக் கையமர்த்தினர். பிறகு, பிரதம மந்திரியான பண்டித ராமப்பிரசாதை நோக்கி, "என் கால் கட்டைவிரலைக் கொண்டோடிய திருடனைப் பிடியும்! சனியன்பிடித்த உம்முடைய யோசனையால்தான் இந்தக் கதி வந்தது. குற்றவாளியை நீர் பிடிக்காவிட்டால், உமது மண்டையை உடைத்துவிடுவேன்" என்றார்.

மன்னருக்கு மோட்ச சாம்ராஜ்ய மார்க்கத்தைக் கைகாட்டிவிட்டு, இம்மண்ணுலக ராஜ்யாதிகாரச் சுமையைத் தாமே தாங்கிக் கொள்ளத் தாம் செய்த முயற்சி இப்படிப் போனதைப் பண்டிதர் எண்ணி மனம் நைந்தார். என்ன செய்வது! ஊரில் உள்ள செம்படவரெல்லாம் உடனே தத்தம் வலைகளுடன் வந்து, அந்த ஆமையைப் பிடித்துவரக் கட்டளையிட்டார். மன்னரின் கட்டை விரலைக் கடித்துச் சென்ற அந்தப் பொல்லாத பிராணியைப் பிடித்து வருவோருக்கு, உயிரோடு கொணர்ந்தால் ரூபாய் ஐந்தும், செத்துக் கொணர்ந்தால் ரூபாய் ஒன்றும் பரிசளிப்பதாகவும் முரசறைவித்தார்.

அடுத்த சில மணி நேரத்துக்குள்ளே பண்டிதரின் மாளிகை வாசலில் கூடை கூடையாய் உயிர் ஆமைகளையும் செத்த ஆமைகளையும் தூக்கிக்கொண்டு, ஏராளமான செம்படவர் வந்து நின்றார்கள். ஆனல், அரசரின் வலது கால் கட்டைவிரலைக் கடித்துக்கொண்டு போன ஆமை எது என்று கண்டு பிடிக்க முடியாமல் பண்டிதர் தவித்தார். ஆயினும், அவர் ராஜதந்திர நிபுணர் அல்லவா? ஒரேயோர் ஆமையை வைத்துக் கொண்டு, மற்றவைகளையெல்லாம் திரும்பவும் குளத்திலே எறிந்துவிடச் செய்தார். ராஜாவிடம் சென்று வணங்கி, "மகாராஜா! தங்கள் ஆக்ஞைப்படி, ஆமையைப் பிடித்தாயிற்று. மேலே என்ன கட்டளையோ" என்று கேட்டார்.

மகாராஜா கம்பீரமாக, "மந்திரி! நமது தர்பாருக்கு அதைக் கொண்டுவாரும். விசாரணை புரிந்து, சரியான தண்டனை விதிக்கிறோம்" என்றார்.

ஆமையை மகாராஜா விசாரிக்கவாவது என்று மந்திரி அதிசயிக்கவில்லை. ஏனெனில், இதைவிட விசித்திரமெல்லாம் ராஜாவிடம் அவர் பார்த்திருக்கிறார். ஆகையால், கட்டளைப்படி நடந்தார்.

தர்பாரில் கூடைக்குள்ளிருந்து ஆமை தலையை நீட்டியதைக் கண்ட மகாராஜா, 'நற நற' வென்று பல்லைக் கடித்து, ஆத்திரத்தோடு, "இந்த மூர்க்கப் பிசாசை இப்படியே, அது கடித்த இந்தக் காலாலேயே நசுக்குகிறேன், பார்" என்று உறுமி எழுந்தார்.

"பிரபுவே! கத்திபோல் கூர்மையான பற்களை ஆமை படைத்திருக்கிறதே; தங்கள் ராஜாங்கப் பாத கமலம் பூராவையுமே அது கடித்-

துப்போட்டால் என்ன செய்வது?'' என்று பண்டிதர் இரங்கினார்.

ராஜா சாந்தமடைந்து, "சுராஜ் பன்ஸி குலத்தோன்றலான உதாம்பூர் மகாராஜா கங்காசிங் பகதூராகிய நாம், இந்தக் கோர்ட்டின் உயர்தர நீதிபதியாகவும், இந்த வழக்கில் வாதியாகவும், வாதி தரப்பு வக்கீலாகவும் அமைகிறோம். யாருக்காவது தைரியமிருந்தால், இந்த ஆமையின் சார்பாக எதிர்வாதம் புரியலாம். ஆனால், அவர் தோற்றால், அக்கணமே அவரையும் இந்த ஆமையோடு சிரச்சேதம் செய்துவிடுவோம். ஜாக்கிரதை!'' என்று திருவாய் மலர்ந்தார்.

பிரதம மந்திரியே முன்வந்து, ''நான் எதிர்வாதம் புரியத் தயார்'' என்றார்.

''அடே பார்ப்பனப் பதரே! அச்சா! நடத்துப் பார்க்கலாம்'' என்று உறுமி, ஆத்திரத்தோடு காலைப் பூமியிலே உதைத்தார் மகாராஜா.

''பிரபுவே! முதலில் ஒரு விண்ணப்பம்'' என்று ஆரம்பித்த மந்திரி, பிராமணனைக் கொல்வது வத பாவம் என்றும், பிராம்மண ஹத்தி செய்தவனுக்கு ரௌரவாதி நரகம் பிராப்தி என்றும் நம்முடைய தர்ம சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால், நம் நாட்டு அரசர் முதல் ஆண்டி வரையில் யாரும் என்னைத் தாக்க முடியாது'' என்று, சாஸ்திரோக்தமாய்த் தமது தற்காப்பை முதலில் நிலைநாட்டிக்கொண்டார். பிறகு, அதே சாஸ்திரப்படி, ஆமையின் சார்பாக வாதிக்கலானார்: ''மகாவிஷ்ணுவே ஆமை ரூபமாக அவதரிப்பாரென்றும், ரவிவம்ச ராஜா ஒருவரால் பூமிக்குள் அமைக்கப்பட்ட குழாய் வழியாய் அவராலேயே வெட்டப்பட்ட ஒரு குளத்துக்குப் போய்ச் சேர்ந்து, அதே ராஜாவின் கால் கட்டை விரல் ஒன்றைப் பலி வாங்கிக் கொள்வதன் மூலம் பகவான் தமது அவதார உண்மையை உலகுக்கு நிரூபிப்பாரென்றும், அதன் பின்பு ராம ராஜ்யம் ஸ்தாபிதமாகுமென்றும் புராதன ரிஷீசுவரர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.''

இந்த அடையாளத்தை அங்கீகரித்து குற்றவாளிகளை மகாராஜா மன்னித்துவிட்டால், அதன் பிரதி பலனாக அவருக்கு அவருடைய இளைய ராணியிடம் பட்டத் திளவரசன் ஒருவன் பிறப்பானென்றும், அதனால் ராஜா கரையேற்றப்பட்டுப் பத்திரமாய் மோட்சம் போய்ச் சேர்வாரென்றும், ராஜா இப்படிச் செய்யத் தவறினால் மீளாப் பாதகம் ராஜாவைச் சூழ்ந்து சுராஜ் பன்ஸி வம்சமே பூண்டற்றுப் போகுமென்றும், மந்திரி மேலும் விளக்கினார்.

மந்திரி ஓதிய நியாயங்களால் மனம் மாறிய மகாராஜா, ''பண்டிதஜீ! அப்படியானால், நான் என்ன தீர்ப்புச் செய்வது?'' என்று, வணக்கமாய்க் கேட்டார்.

''ஆமை எங்கேயிருந்து வந்ததோ அந்தக் கங்கையிலேயே அதைக் கொண்டுபோய் விடும்படி உத்திரவிடுங்கள். அது விஷ்ணுவின் அவதாரமாயிருந்தால், திரும்பவும் இங்கே வந்து பிரத்யட்சமாகும்'' என்று மந்திரி யோசனை சொன்னார்.

அப்படியே தீர்ப்பளித்தார் மகாராஜா.

அந்த வருஷத்திலே, துணி தோய்த்த ஒரு வண்ணானின் ஐந்து விரல்களை ஓர் ஆமை கடித்து விழுங்கியதோடு, இளைய ராணிக்கும் ஒரு புத்திரன் ஜனித்தான்.

பிரதம மந்திரி கூறிய யோசனையின் பேரில், இளவரசன் பிறந்த தினத்தை நாடெங்கும் விழாக் கொண்டாடப் பட்டது. பெரிய ராஜாவின் மீது விஷ்ணுவே ஆவிர்ப்பவித்து விட்டாரென்றும், உதாம்பூருக்கு ராமராஜ்யம் வந்துவிட்ட தென்றும் மக்களெல்லாம் மகிழ்ந்து பரவசமானார்கள்.

## இரண்டு சர்ச்சில்கள்

அமெரிக்காவிலே ஒரு வின்ஸ்டன் சர்ச்சில் இருக்கிறார். அவர் ஏராளமாய்க் கதைகள் எழுதிப் பிரசித்தி பெற்றவர். பிரிட்டனில் இன்று பிரதம மந்திரியாயிருக்கிறாரே இந்த வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு முறை, அமெரிக்க வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு ஒரு கடிதம் எழுதினார்: ''நாம் இருவரும் எழுத்தாளர்கள். இருவருக்கும் ஒரே பெயராய் இருப்பதால் சில சமயம் குழப்பம் வந்து விடுகிறது. இருவரில் ஒருவர் பெயரை மாற்றிக் கொண்டால் நலம்'' என்பதுதான் கடிதம்.

''யோசனை அருமையானதே. நானே மூத்தவன். பெயரை மாற்றிக் கொள்வது உங்கள் கையிலிருக்கிறது'' என்று அமெரிக்கச் சர்ச்சில் நறுக்காய்ப் பதில் எழுதினார்.

இது நியாயம் என்று ஒப்புக்கொண்ட பிரிட்டிஷ் சர்ச்சில், வின்ஸ்டன் எஸ். சர்ச்சில் என்று அதுமுதல் கையெழுத்திடத் தொடங்கினார். 'எஸ்' என்பது 'ஸ்பென்ஸர்' என்பதன் முதல் எழுத்தாகும்.

1903-ஆம் ௵ பிரிட்டிஷ் சர்ச்சிலுக்கு அமெரிக்கச் சர்ச்சில், போஸ்டன் என்னுமிடத்தில் ஒரு விருந்தளித்தார். இவர் அவருக்கு, ஏழு வருஷத்துக்குப் பின், பதில் விருந்தொன்று காமன்ஸ் சபையில் நடத்தினார்.

## நீங்கள் ஒரு நிமிஷ நேரத்தில்

| | |
|---|---|
| 8 மைல் | விமானத்தில் பறக்கலாம். |
| 6 ,, | மோட்டார் சவாரி செய்யலாம். |
| 1,153 கஜம் | உயரத்திலிருந்து விழலாம். |
| 948 ,, | ஸைக்கிள் விடலாம். |
| 1,650 அடி | ஓடலாம் |
| 830 ,, | நடக்கலாம். |
| 309 ,, | நீஞ்சலாம். |
| 410 சதுர அங்குலம் | காற்றைச் சுவாஸிக்கலாம். |
| 150 வார்த்தைகள் | தெளிவாய்ப் பேசலாம். |
| 30.40 வார்த்தைகள் | எழுதலாம். |
| 6 தடவை | குஸ்தியில் உருண்டு விழலாம். |

சிறு கதை

*கோப தாபம்.......பின்னால் தலைவல்—எல்லாம் அந்தப் பச்சைப் புடவையால்தான்.*

# பச்சைப் புடவை

ஸி. ஆர். ஸரோஜா

கதவைத் திறந்துவிட்டுக் கடைசி முறையாகத் தன் புடவையையும் ரவிக்கையையும் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள் கமலா. இதற்கு முன் பல தடவைகள் பார்த்துக்கொண்டும் திருப்தி அடையவில்லை அவள். விசுவநாதன் பிரமித்து நின்றுகொண் டிருந்தான். சுருண்டு நெளிந்திருந்த பின்னலை ஒரு கையால் முறுக்கிக் கொண்டே, "ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? 'டிரஸ்' ஸைக் கழற்ற மனம் வரவில்லையா?" என்றாள் ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டு.

'உஸ்ஸ்' என்ற பெருமூச்சுடன் ஈஸிச்சேரில் தொப்பென்று சாய்ந்தான் விசுவநாதன். கண்ணாடி முன் நின்று கொண்டிருந்த கமலாவுக்கு, தான் நிமிஷத்துக்கு நிமிஷம் புது ஸௌந்தர்யம் பெற்று வருவதாகவே தோன்றியது. நெற்றியிலே படிந்து வளைந்த கூந்தல், முதுகில் நெளிந்து கிடந்தது. அதன்மேல் மல்லிகையும் ரோஜாவும் கலந்த பூச் செண்டு. காதில் ஜிமிக்கி. புருவ நடுவில் அழகான சிறு குங்குமப் பொட்டு. அவள் பூசியிருந்த வாசனை, அறை பூராவும் கம்மென்று மணத்தது. சிறிது திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு, அவன் அருகில் வந்து, "ஏன் இப்படிச் சிடுசிடு என்கிறீர்கள்?" என்றாள் கமலா.

"எப்பொழுது தொலைந்து போவான் என்று காத்திருந்தாயாக்கும்" என்றான் விசுவநாதன். அவளுக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை.

"யார்?" என்றாள் தழ தழத்த குரலில். முகம் சிவந்துவிட்டது. கண்கள் அழுவோம் என்று பயமுறுத்தின. விசுவநாதன் மட்டும் அசைந்து கொடுக்கவில்லை.

* * *

பத்து தினங்களுக்கு முன் தன் மாமியாருடன் கடைக்குப் போனாள் கமலா. பட்டப்பகலில் கண்ணைக் கட்டுவதற்காகப் பளிச் சென்று விளக்கைப் போட்டான் கடைக்காரன். பிறகு, ஆறு கஜத்தில் ரகவாரியாகப் புடவைகளைக் குவித்தான். கட்டம் போட்டது, ஊசி வாணம், 'பிரிண்டட்' வகையறா.

"எது பிடிக்கிறதோ பாரேன்" என்றாள் மாமியார். கமலா புதிதாகக் குடித்தனத்துக்கு வந்தவள். மனதை விட்டுப்பேச இன்னும் தைர்யம் வரவில்லை.

"இந்தப் புடவையை எடுத்துக் கொள். உனக்கு நன்றாக இருக்கும்" என்றாள் மாமியார். புடவை கரு நீலத்தில் ஜரிகைக்கோடு போட்டது. ரொம்ப நன்றாய்த்தான் இருந்தது. ஆனால், நீலம், ஆளை அடிக்கிறமாதிரி, யார் கட்டுகிறார்கள்? கமலாவின் கையில் கடல் பச்சையில் 'ஈவினிங் பார்டர்' போட்ட புடவை இருந்தது.

"அது ஒன்றும் நன்றாய் இல்லை. முன் காலத்தில் முழுக்கரை போட்ட புடவை மாதிரிதானே இதுவும்? உன் சிவப்புக்கு நீலம் நன்றாய் இருக்கும்" என்று தன் வார்த்தையை மாமியார் ஸ்திரப் படுத்தவே, கமலா மௌனமாய் இருந்துவிட்டாள். நீலப்புடவையுடன் கடையைவிட்டு வெளியே வந்தாள். வரும்போதுகூட அந்தப் பச்சைப் புடவையின்மேல்தான் கண். ஆனால், பாழும் லஜ்ஜையும் மரியாதையும் அவளைத் தடுத்துவிட்டன. அவள் மாமியார் மட்டும் என்ன அப்படிப் பொல்லாதவளா? இல்லை. மாட்டுப் பெண் என்றால் பெண்ணை விட ஒரு பங்கு அதிகமாகவே நினைப்பாள். கமலா நீலப் புடவை கட்டிக்கொண்டபோது, விசுவநாதன் மனம் பூரித்து நின்றான்.

"ரொம்பப் பொருத்தமான செலக்ஷன்" என்று தன் அம்மாவைப் பாராட்டினான். கமலாவுக்கு வெட்கம். புருஷர்களுக்குக் குஷி பிறந்துவிட்டால், காலம் இடமெல்லாம் தெரியாது போலிருக்கிறது!

"இரு, இரு, கமலா! இந்தப் புடவைக்குத் தகுந்தமாதிரி ரவிக்கை வேண்டாமா?" என்று கூறி, கடைக்கு ஓடிப்போய் ரவிக்கை வாங்கிக்கொண்டு வந்தான்.

இன்று மாத்திரம் என்ன? முகத்தைக் கடு கடு வென்று வைத்துக் கொண்டு எறிட்டுக்கூடப் பார்க்காமல் இருப்பதற்குக் கமலா என்ன குற்றம் செய்துவிட்டாள்? அதுதான் அவளுக்குப் புரியவில்லை. போதாக்குறைக்கு அவன் ஆத்திரத்தைக் கிளப்புகிறமாதிரி, "உங்கள் பணத்துக்கு நான் ஒன்றும் வாங்கவில்லை. அப்பா கனுவுக்கு அனுப்பிய பணத்துக்குத்தான்..." என்று முடிப்பதற்குள், அவன் கை மேலெழும்பிக் கமலாவின் கன்னத்தில் சிவந்த தழும்பை உண்டாக்கிவிட்டது. தினம் மாலையில் சிரிப்பும் கேலியும் நிரம்பியிருந்த வீட்டில் இன்று மனஸ்தாபம் நிறைந்திருந்தது.

எல்லாம் அந்தப் பச்சைப் புடவையால்தான்.

* * *

கொளுத்துகிற வெயிலில் 'ஸ்டவ்'வில் டிபன் பண்ணிக் கொண்டிருந்தவளைத் தெருப் பக்கம் இழுத்தது பங்கஜத்தின் குரல். பங்கஜம் பக்கத்து 'பிளாக்கில்' குடித்தனம் இருப்பவள். நாகரீகம் அவளால்தான் அபிவிருத்தி யடைகிறது என்று சொல்லலாம். 'கப்டா வாலா' என்று கத்திக்கொண்டு போனான் ஒருவன். பின்னால் வியர்வை சொட்ட, தலையில் பெரிய மூட்டையுடன் கூலியாள் போய்க் கொண்டிருந்தான். எந்த மகராஜியாவது பேரம் செய்தால் மூட்டையின் பளுவு குறையாதா என்ற ஏக்கம் அவனுக்கு.

'கப்டா வாலா' உள்ளே வந்தான். மூட்டையை அவிழ்த்தவுடன் கடையில் பார்த்த அதே பச்சைப்புடவை தென்பட்டது.

"பங்கஜம் இந்தமாதிரிதாண்டி நான் வாங்க நினைத்தது. அம்மா ஏதாவது சொல்லப் போகிறாரே என்று நீலப்புடவையை வாங்கிக் கொண்டேன்" என்றாள் கமலா.

"வேண்டுமானால் இப்பொழுது தான் வாங்கிக் கொள்ளேன். என்ன பிரமாதம்?" என்றாள் பங்கஜம்.

"அவர் 'பர்ஸை' ஆத்தில்தான் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். ஆனால், கோபம் வருமோ என்னவோ?"

"அப்பா கனுவுக்குப் பணம் ஒன்றும் அனுப்ப வில்லையா?" என்று கேட்டாள் பங்கஜம்.

"ஆமாம், மறந்துபோய் விட்டேன். நேற்றுத்தான் பத்து ரூபாய் வந்தது. என் பணம் தானே. ஒன்றும் சொல்லமாட்டார். விலை பேசேன்."

'கப்டா வாலா' கமலாவுக்குப் புரியாத ஹிந்தியில் தன் துணியின் பிரதாபத்தை அளந்து கொண்டிருந்தான்.

"விலை எட்டு ரூபாய் சொல்லுகிறான்" என்றாள் பங்கஜம்.

"அப்பாடா!" என்று முகத்தை ஆட்டினாள் கமலா. "கடைக்காரனே தேவலை போலிருக்கிறதே!" என்றாள்.

தமிழிலே அவனை நாசமாய்ப் போகும்படி சபித்தால்கூட அவனுக்குப் புரியவா போகிறது?

"இரு, இரு, யானை விலை சொல்லிக் கடைசியில் மசிந்து வருவான்கள். உனக்கு இந்த ஊர் விஷயமெல்லாம் தெரியாது" என்றாள் பங்கஜம்.

'கப்டா வாலா' அவசரப் படுத்தினான்.

"ஒரு விலை கேளேன்" என்றாள் கமலா.

"ஐந்து ரூபாய்" என்றாள் பங்கஜம்.

"அரே!" என்று திகைத்துப் போனான் வியாபாரி: "மதராஸிகள் பலே பேர்வழிகள். யாரை ஏமாற்றினாலும் இவர்களை ஏமாற்ற முடியாது; முடியவே முடியாது" என்று கூறிச் சிரித்தான்.

"ஐந்து ரூபாய்க்குக் கொடுத்தால் கொடு; இல்லாவிட்டால் நட" என்று தன் தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்தினாள் பங்கஜம்.

அவன் கொடுக்காமல் எங்கே போகப் போகிறான்? இவர்களை நம்பித்தானே அவன் தெருத் தெருவாய் அலைவது? "இல்லை, பாயி! ஒரே விலை—$6\frac{1}{2}$ ரூபாய்" என்றான் அவன்.

கமலாவும் பங்கஜமும் உதட்டை மடித்துத் தலையை ஆட்டிவிட்டார்கள். இவர்களின் தீர்மானத்தைக் கண்டு மூட்டையைக் கட்ட ஆரம்பித்தான் வியாபாரி. கமலாவுக்குப் பதைப்பு, பச்சைப் புடவை போய்விடப் போகிறதே யென்று. சரசர வென்று பர்ஸை திறந்து ஆறரை ரூபாயை அவனிடம் கொடுத்துவிட்டாள். வியாபாரி ஒரு சலாம் போட்டுவிட்டு நடந்தான்.

கமலா புடவையை வைத்துக் கொண்டு தட்டாமாலை சுற்றினாள். அதை மேலே போர்த்திக்கொண்டு பார்த்தாள். ரொம்ப ஜோராய் இருந்தது.

* * *

சமையல் உள்ளில் 'ஸ்டவ்'வின் ஓசை தாழ்ந்து கொண்டே வந்தது. புடவையை வைத்துவிட்டு வேலையைச் சுருக்காக முடித்துவிட்டாள். அவளுக்குச் சமையல் உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. நாலடிப்பதற்கு முன்பே தலையைப் பின்னித் தொங்கவிட்டுக்கொண்டாள். 'அவர் வரமாட்டாரா?' என்று மனம் தவித்துக்கொண்டிருந்தது. வந்ததும் தன் சௌந்தர்யத்தில் பிரமித்துப்போய்......

உலகத்தில் அதைவிட ஆனந்தம் பெண்களுக்கு இருக்கிறதா? திருப்தியும் அன்பும் நிறைந்த சொல் கணவனிடமிருந்து வருவதில் அலாதி அழகு இருக்கிறது. கமலாவின் அம்மாவும் அவள் புதுப் புடவை கட்டிக்கொள்ளும் போதெல்லாம் பூரித்துப்போவாள். விசுவநாதனின் பார்வை ஒன்றே இவை எல்லாவற்றையும் மிஞ்சிப் போய்விடுமே. கடியாரத்துக்கு இவள் துடிப்புத் தெரியுமா? ஆறு மணிக்கு எவ்வளவு நாழி காத்துக் கிடக்கவேண்டி யிருக்கிறது? ஜன்னலுக்கும் உள்ளுக்குமாக அலைந்தாள். தெருக்கோடியில் அவன் தலையைக் கண்டவுடன், கண்ணாடி முன் நின்றுகொண்டு தன் அழகு கலையாமல் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டாள்.

கடைசிமுறையாகக் கதவையும் திறந்துவிட்டுக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். அவள் எதிர் பார்த்த கேள்வி இதுதான்:

"கமலா! புடவை வாங்கிக் கொண்டாயா என்ன? ரொம்ப ஜோராய் இருக்கிறதே" என்று. அதற்கு மாறாக "எப்பொழுது தொலைந்து போவாள் என்று காத்திருந்தாயாக்கும்" என்ற சொல் வெளி வந்தது. அதோடு இவள் பேசாமல் இருந்திருக்கலாம்.

"உங்கள் பணமில்லை" என்று தன் பிறந்தகத்தின் பெருமையை ஆரம்பிக்கவே, கோபம் உச்ச நிலையை அடைந்து அவனை மிருகத்தனமாக நடக்கத் தூண்டியது.

* * *

அழுது அழுது முகம் சிவந்து விட்டது. விசுவநாதன் கண்ணைத் திறந்து பார்த்தபோது, மணி பத்தடித்துவிட்டது. ஆபீஸிலிருந்து வரும்போது, 'டிபன் சாப்பிட்டு விட்டுச் சினிமாவுக்குக் கமலாவையும் அழைத்துக்கொண்டு போகலாம். அப்படியே நாழி இருந்தால், கடைக்குப்போய் நல்ல புடவையாக வாங்கிக் கொடுக்கலாம்'என்று அவன் தீர்மானித்திருந்தான். வீட்டுக்கு வந்ததும், புதுப் புடவையோடு மனைவி சிங்காரமாய் நிற்பதைப் பார்த்ததும், அவனது தீர்மானம் சிதறிப்போய்விட்டது.வேறே காரணம் ஒன்றுமில்லை. கோபம் பிரமாதமாக வந்து விட்டது. கடியாரத்தில் முள் நகர்ந்துகொண்டேயிருந்தது.

கமலாவின் அழுகையை அவனால் பொறுக்க முடியவில்லை.

கமலா படுக்கையில் முகத்தைக் குப்புற வைத்துக்கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

"என்னவோ அறியாத்தனம். நமக்குத்தான் என்ன கோபம்?" என்று நினைத்துக்கொண்டான். மெதுவாக எழுந்து அவள் அருகில் சென்றான்.

விளக்கு வெளிச்சத்தில் பச்சைப் புடவையின் சாயல் அவள் கன்னங்களில் பளிச்சென்று விழுந்து கொண்டிருந்தது. கமலா நிமிர்ந்து பார்த்தாள்.

"அசடு மாதிரி பட்டினியா கிடப்பது? எழுந்திரு. சாப்பிடலாம்" என்றான்.

"நீங்கள் மாத்திரம் என்ன? டிபன்கூடச் சாப்பிடவில்லையே" என்றாள் புன்னகையுடன்.

திரும்பவும், கேலியும் கொஞ்சலும்.

எல்லாம் அந்தப் பச்சைப் புடவையால்தானே?

# எங்களிடம் கிடைக்கும்

## புத்தகங்கள்

---

**தாமரைக் குளம் முதலிய கதைகள்**

ரூ. 1-12-0

சுவாமி சுத்தானந்த பாரதியாரால் எழுதப்பட்ட இப்புத்தகத்தில் அடங்கியுள்ள அத்தனை கதைகளும் தமிழரைப் பற்றியவை ; தமிழருக்கே உரியவை ; தமிழரின் பெருமையை நிலை நாட்டுபவை ; தேசப் பற்றுதலும், வீர சௌந்தரியமும், சுதந்திர தாகமும் ஊட்டக்கூடியவை.

**திருக் காட்சி** 0-4-0

சுவாமி சுத்தானந்த பாரதியார் கன்யா குமரிக்குச் சென்றிருக்கையில் அவரது கனவில் உதித்த பாரததேவியின் திருக் காட்சியைப் பாடியிருக்கிறார்.

**முல்லை மணம்** 0-4-0

சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதிய ஓர் அரிய பழந் தமிழ் நாடகம். கூளப்பநாயக்கன் காதலை வர்ணிப்பது.

**ஸ்ரீ ராம தூதன்** 1-0-0

இதுவும் சுவாமிகள் எழுதிய மற்றொரு நாடகம். கம்பனுடைய சொற்களையே கொண்டு எழுதப்பட்ட ஹனுமான் தூது பற்றியது.

**சூரிய நமஸ்காரம்** 1-0-0

தேகப்பயிற்சிக்குச் சிறந்ததொரு வழி காட்டும் நூல். டி. வி. திரிவேதி எழுதியது.

**செல்வம்** 1-0-0

அறிஞர் க. சந்தானம் எழுதிய அருமையான பொருளாதார நூல். அபேதவாத நோக்கமுடன் எழுதியது.

**அபேதவாதம்** 0-6-0

ராஜாஜியின் இந்த அரிய பிரசங்கத்தை, தி. ஜ. ர. எளிய தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

**சக்தி காரியாலயம்**

மதுரை - காரைக்குடி




ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது. கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின் சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உறுப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தியுடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை' பையோரியா, ஸ்கார்புலா, கேடராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சங்களான (1) தைராய்ட் (2) அயோடா (3) லிவர் (4) வயிறு (5) மெம்ப்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

# Idocol

AVAILABLE EVERYWHERE

*Trade Enquiries to:*—**EZRA BROS.**, Mustafa Bldg., Sir P. Mehta Road, Bombay 1.

***FAMOUS IN INDIA AND ON THE CONTINENT***

Madras Stockists :—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS

---

# FREE

## அழகிய போட்டோ ஆல்பம்

அழகிய பெண்களை வசிகரமான நிலைகளில் எடுத்த பிரஞ்சு ஆர்ட் போட்டோக்கள், 5-அணா தபால்தலை அனுப்புவோருக்கு அனுப்பப்படும். அவைகளோடு ஒரு ஆல்பமும் இனமாய் அனுப்புவோம். கொஞ்சம் ஆல்பங்களே மிஞ்சி இருக்கின்றன. ஏமாற்றம் ஏற்படாதிருக்க வேண்டுமானால், உடனே ஆர்டர் செய்யுங்கள்.

**LONDON COMMERCIAL CO.** P. B. 165 (S. M.) LAHORE (INDIA)

CHROMECO AGENCY

NEXT TO GOKHALE HALL

எழுதுவதில் இணையற்றது
பார்க்கர் பேனா

கனி & சன்ஸ்

ராட்டன் பஜார், மதராஸ்

சிற்பியின்
கனவு !

★

மாசிலாத ஒரு மணி மண்டபம் கட்ட அன்று ஒரு சிற்பி கனவு கண்டான். கனவு நனவாகி தாஜ்மஹால் எழுந்தது.




மாசிலாத ஒரு மசியைத் தயாரிக்க விஞ்ஞானிகள் கனவு கண்டனர். கனவு இன்று நனவாகி அதன் பலன்தான்

ஜப்கோ பௌண்டிங்க்

Jaya Bharatham Co., Sowrashtrapet Road,
BANGALORE CITY

# அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் பம்பாய் கல்கத்தா

# இளவேனிற் காலம்

ராய. சொ.

> 'ஊழியன்' ஆசிரியர் ராய. சொ. வைத் தனவணிக நாட்டினர்கள் அறிவர்; தமிழ் நாடெங்குமுள்ள தமிழிலக்கிய ரஸிகர் அனைவரும் அறிவர். துளியும் விருப்புவெறுப் பின்றி இலக்கிய ஆராய்ச்சி புரிவதில் தலை சிறந்தவர். அவருடைய இந்த இனிய கட்டுரை, திருச்சி ரேடியோவில் மார்ச்சுமீ 13உ செய்யப்பட்ட பிரசங்கமாகும்.

இளவேனிற் காலம், ஆறு காலங்களுள்ளும் சிறப்பாகக் கொள்ளப் பெறுகிறது. இது, புராணக் காரரைப்போல, எடுத்துக் கொண்ட பொருளே உயர்ந்தது எனச் சொல்லவேண்டும் என்னும் கருத்தாற் கூறுவதன்று. கவிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வல்லது இளவேனிற் காலம். புலவர் பாடும் புகழ் அமைந்தது இளவேனிற் காலம். கடவுளர்க்கு விழா எடுக்கப் பொருந்தி நிற்பது இளவேனிற் காலம். மயிர்க்கால்தோறும் உயிர் உறும் அமுதத்தை ஊட்டும் கொழும் தென்றலைக் கொணர்வது இளவேனிற் காலம். செழுமதி தவழ் நிலவின் முழுத் தன்மையையும் மக்கள் நுகர உதவுவது இளவேனிற் காலம். காதலரை இன்பக் கடலாட்டும் ஆற்றல் சான்றது இளவேனிற் காலம். 'காதலற் புணர்ந்தோர்க்கு' இளவேனிற் காலம் களிமகிழ்வு ஊட்டும்; ஆனால் 'தாழ்துணை துறந்தோர்க்கு' அக்காலம் தனித் துயரே நல்கும். இளவேனிற் காலத்துக்கு அரசன் யார்? மன்மதன். அவனுக்கு 'வேனில் வேள்' என்பது சிறப்புப் பெயர்.

**'மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய**
**இன்இள வேனில் வந்தனன்'**

என்றார் சிலப்பதிகார ஆசிரியர்.

**'மாரனை மகுடஞ் சூட்ட**
**வந்தது வசந்த காலம்'**

என்று இயம்பினர் பாரதம் பாடியவர். வசந்த காலந்தான் இளவேனிற் காலம் என்பது. அக்காலம் சித்திரை, வைகாசி மாதங்கள். இன்று மாசி முடிகிறது. இடையில் ஒரே ஒரு மாதம் கிடக்கிறது. அது போனால் வசந்தம்—இளவேனில் தொடங்கி விடும். தமிழர்க்குப் புதிய ஆண்டு பிறக்கும்போது, மன்னன் மாரன் மகிழ் துணையாகிய இன் இளவேனிலும் பிறக்கின்றது.

அது எப்படிப் பிறக்கின்றது?

**'செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக**
**மைந்தார் அசோக மடல் அவிழக்- கொந்தார்**
**இளவேனில் வந்தது.'**

இளவேனிலில், உருவிலான் என்றும் வடிவழகன் எனவும் பாராட்டப்படும் காமனின் ஆட்சியே யாண்டும். அவ்வேனிலான் தனக்கு உறுதுணையாக இன்பப் பொருள் பலவற்றைப் பிடித்து வைத்துக்கொண் டிருக்கிறான்.

மாரன் ஊரும் தேர், பிள்ளைத் தென்றல்; அவன் ஊதுங்குழல், குயில்; அவன் அரசு வீற்றிருக்க ஆய்ந்தெடுத்த இடம், நறுமலர்ச் சோலை; அதற்குப் பெரிதும் பொருந்திய நேரம், அந்தி மாலை. அன்னான் ஆட்சியை எடுத்து உலகம் முழுதும் விளக்கும் பொறுப்பை மேற்கொண்டவன், தண்ணமுதமாகிய நிலவருளும் திங்களஞ் செல்வன்.

இன்ன பெருமை வாய்ந்த மாரனை மகுடஞ்சூட்ட வந்தது எது? அதுதான் வசந்த காலம் — இளவேனிற் காலம். இவ் இளவேனிற் காலம் பற்றிப் புலவர் பாடிய பாக்கள் எண்ணிறந்தன. கால அளவின் குறுகலுக் கேற்பச் சில கூறுவேன்:

**'மலர்ச்சூழல் அமர்ந்துஇனிய**
**வண்டுஆர்க்கும் காலம்**
**வரிக்குயில்கள் மாவில்இளந்**
**தளிர்கோதும் காலம்**
**சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல்**
**அமுதுஅளிக்கும் காலம்**
**தீவினையேற்கு அத்தென்றல்**
**தீவீசுங் காலம்.'**

'இறகுகளை விரித்துக்கொண்டு, மலர்களை நன்றாக உழக்கி, பெடையொடும் அமர்ந்து, தேனைக் குடித்துக்கொண்டு, வண்டுகள் ரீங்காரம் செய்யும் காலம் இளவேனில். வரிக்குயில்கள், மாமரத்தின் மெல்லிய தளிர்களைக் கோதி விளையாடுங் காலம் இளவேனில். செழுமையான தென்றலைக் கொண்டு, சிலர்க்கு — காதலனோடு உடனிருந்து களியாட்டயரும் சிலர்க்கு, அமுதத்தைக் கொடுக்கும் இளவேனில் காலம். ஆனால், காதலனைப் பிரிந்து வாடும் தீவினையுடைய எனக்கு, அத்தென்றல்—வேறு சிலர்க்கு அமிழ்தம் அளித்த அதே தென்றல். நெருப்பைக் கக்கும் காலம் அவ் இளவேனில்' என்று பிரிவுத்துயரால் வாடும் ஓர் இளங்கொடி புலம்புகின்றாள்.

'குழல் இனிது' என்று புலவர் பாடிய புல்லாங்குழல், இனிய தேனைப் பொழிகின்றது. பயன் என்ன? அம்மெல்லோசையின் குளிர்ச்சியைப் பிரிவு என்னும் நெருப்பால் வெந்துகொண்டிருப்போர் நுகர்வது எங்ஙனம்? குழலினின்றும் எழும் இளந் தமிழ் இன்னிசை, அந்நங்கையர் காதுகளில் பெருந் தீயை உருக்கிக் கொட்டுவதுபோல் இருக்கின்றது. 'ஈர நெடுங்குழலிசையில் பேரழலும் புகுந்தது.' அதில் மட்டுமா? பனிநீர் தெளித்த வெஞ்சாமரக் காற்றிலும் அன்னார் அந்நெருப்பையே காண்கின்றனர். இளவேனிற் காலத்தில் தண்ணளியை அள்ளி யெறியும் இளநிலாவிற் கூட அவர்கள் காண்பது அவ் அழலையே. ஆம். அப்பிணிவாய்ப் பட்டோர் இயற்கை அதுவே அன்றோ?

**'ஈரநெடுங் குழல்இசையில்**
**இயங்கியசா மரக்காற்றில்**
**இளநிலாவில்,**
**பேரழலும் புகுந்ததுஎனப்**
**பிணங்கினர், தங்கேள்வர்ப்**
**பிரிந்தமாதர்.'**

பிரிந்தோரை இளவேனில் வருத்தத்தான் செய்யும். ஆனால், சேர்ந்தோர் பெறும் இன்பம் கணக்கிலது. "மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும் இன்னிள வேனில் இளவரசன்" எனச் சிறப்பித்துக் கூறப்படுதல் காண்க. அப்பிணிக்கு மருந்து எது? நாயகன் கூடுதலே. உருவிலான் புரியும் கலகத்தை அகற்ற வல்லவர் காதலரே.

**'இரதி கேள்வன்,**
**கலகம்இடும் பரிதாபம் அகற்றினர்,**
**இனிமையுடன் கலந்த கேள்வர்.'**

பிரிவுத்துயரை மாற்ற மருந்துண்டு. அது காதலர் சேர்க்கை. ஆனால், தகாத வழியில் - கிட்டாத

இடத்தில், இன்பம் துய்க்க விரும்புவார் அல்லல் தீர்க்க மருந்து இல்லை. "'மந்திரம் இல்லை, வேறோர் மருந்து இல்லை.' எனினும் ஒரு மருந்துண்டு; அதுதான் நுமது 'சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுது'" என்று, 'உலகினுக்கே அன்னை' யான சீதையைப் பார்த்து, இராவணன் கூறுகின்றான். அது இராவணனின் விரக தாபமிஞ்சிய அறியாமைக் கூற்று. அது அமுதாக இருக்கலாம். அதை அப்பேதை பெறுவது எங்ஙனம்? எனவே, அவன் கொண்ட பிணி தீர வழியே இல்லை. இளவேனிலும் அதன் துணைகளும் அன்னநீர்மை யாளரை வாள் கொண்டு அறுக்கத்தான் செய்யும். அன்னார்க்கு மதிக்கு மேனி சுடத்தான் செய்யும்; தூற்றும் தென்றல் வியர்வையைத்தான் எழுப்பும்; வயிரத் தோள் துரும்பாகவே மெலியும்; வேனில் வேள் ஆரவாரம் பெரிதாகத்தான் இருக்கும். இராவணன் நோய் அவன் முடிவோடு தான் முடிந்தது. இளவேனிலின் நலத்தைப் பெற விழைவோர் ஒழுங்கு முறையில் பிழைத்தல் தகாது.

இளவேனில் கலகம் எழுகின்றது. எங்கே? அது எங்கே எழுமோ அங்கேதான். பசுமையான குளிர்ந்த சோலையில்; கலக்கமுற இளவேனில் கலகம் எழுந்திடும் பசுந்தண் காவுதோறும். அக் காவிலே என்ன நடக்கிறது? தென்றற் காற்று வீசுகின்றது. அக்காற்றின் பின்னே, அத்தென்றலைத் தொடர்ந்து, சங்கிலிப் பின்னல்போல் வண்டுக் கூட்டங்கள் சேர்ந்து ஓடுகின்றன. அவ்வண்டுத் தொடர் எப்படி இருக்கின்றது? மன்மத மன்னன் தன் கரும்பு வில்லில் பூட்டுவதற்கு நாண் என்று சொல்லப்படும் கயிறு திரிப்பதுபோல் இருக்கின்றது. 'சிலைக்கு அணிநாண் முறுக்குவ போல் தென்றலின்பின் சுழல் அளிகள் சேர ஓட.'

'காலையும் மாலைதானும் இல்லதோர் கனகக் கற்பச் சோலை' யிலே, காமராஜன் கொலுவீற்றிருக்கின்றான். காலம் இளவேனில் என்பது சொல்லாமலே அமையும். கையில் கரும்புவில் பிடித்திருக்கிறான். அதில் பூட்டுதற்கு நாணை முறுக்கிவிட்டான். இனி வேண்டுவது என்ன? வில்லில் பொருத்தி விடுதற்குரிய அம்புகளே யன்றோ? அவைகள் விரைவாகச் செய்யப் பெறுகின்றன. எங்கே? அச்சோலையிலேயே. உலைக்கூடம் அமைக்கப்படுகின்றது. பாணங்கள் செய்வதற்கு எடுக்கப்பட்ட பொருள்கள் எவை? அழகிய நிறங்கிளர் பல வகையான இளந்தளிர்களே, மாரன் கொலைக்கணைகள் சமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரும்புத் துண்டுகள். கணை செய்யும் கருங்கொல்லன் யார்? குயில் என்ற பெயரிய கறு நிறமுடையவன். சரம் செய்ய அக்குயிலோன் ஆண்ட கருவிப் படையெது? அவன்தன் அலகு என்னும் சிறு பற்றுக் குறடு. இத்துணை விமரிசையாக மாரனுக்குக் கணை செய்யப்படுகிறது சோலைத் தொழிற்சாலையில். 'உலைக்கனலில் கருங்கொல்லன் சிறுகுறட்டால் தகடுபுரிந்து ஒதுக்கி மாரன், கொலைக்கணைகள் சமைப்பனபோல் குயில்அலகால் பல்லவங்கள் கோதும்.' செய்யப்பட்டது இலைகளாலேயே. எனினும், கணை பொல்லாதது; கொலைக் கணை! இளவேனிலைப்பற்றிய ஓர் அழகான சித்திரமிது. முழுப்பாட்டையும் கேளுங்கள் :

'கலக்கமுற இளவேனில் கலகமெழுந்
திடும்பசுந்தண் காவு தோறும்
சிலைக்கணிநாண் முறுக்குவபோல் தென்
றலின்பின்
சுழல்அளிகள் சேர ஓட
உலைக்கனலில் கருங்கொல்லன் சிறுகுறட்
டால்
தகடுபுரிந்து ஒதுக்கி மாரன்
கொலைக் கணைகள் சமைப்பனபோல்
குயில்அலகால்
பல்லவங்கள் கோது மாலோ.'

இனி இன்னொரு கற்பனை. காலம் இளவேனில்தான். அதைக் கார்காலம் என மயங்கி மகிழ்கின்றன மயில்கள். மயில்கள் மகிழும் காலம் மழைக்காலம். இளவேனிலைச் சாயல் தோகை கார்காலமெனக் கொண்டு களிக்கின்றது. ஏன்?

கார் காலத் தோற்றங்களை யெல்லாம் மயில் இளவேனிலில் காண்கின்றது. வசந்த காலத்தில் மெல்லியலார் கூட்டங் கூட்டமாக உலாவுகின்றனர். அவர்களின் கரிய நெறித்த கூந்தல், மழைக்காலத்து அணி அணியாகச் செல்லும் நீருண்ட கரிய முகிற் கூட்டம் போன்றிருக்கிறது. அம் மாதரார் அசைவு, மேகத்தினின்றும் புறப்படும் மழை மின்வெட்டுப்போல், பளீர் பளீர் என்று அடிக்கின்றது. அம்மங்கையர் வளைந்த புருவம், மழைக் காலத்து வானத்தே தோன்றும் பல நிற வானவில்லைப்போன்றிருக்கின்றது. அவ் அமுதனார் செவ்விதழ், கார்காலத்தே உதிக்கும் மிருதுவான செந்நிறமுடைய பட்டுப் பூச்சியை நினைவூட்டுகின்றது. அவ் இன்சொலார் பற்களும் மூக்கும் கைகளும் பிறவும், மழை நாளில் பூக்கும் இனிய பூக்கள் போல் விளங்கித் தோன்றுகின்றன. அப்பொன்னனையார் மார்பில் அணிந்திருக்கும் வெள்ளிய முத்து மாலைகள், மழைக்காலத்து மலையினின்றும் வீழும் அருவிகளை நிகர்க்கின்றன. தையலார் வடிவு தொறும் இன்னபொருள்களைக் கண்டதும், இவ் இளவேனில், நாம் மகிழ்தற்குரிய கார் காலமாக வன்றோ இருக்கின்றது எனச் சாயல்தோகை கருதிக் களித்தது.

'கொண்டல்எழ, மின்னுடங்கக் கொடுஞ்
சாபம்
வளைவுறச்,செங் கோபம் தோன்ற,
வண்தளவும் நறுங்குமிழும் வண்டணிகாந்
தளும்மலர, மலைகள் தோறும்
தண்தரள அருவிவிழத், தையலர்
வடிவுதொறும் சாயல் தோகை
கண்டு,நமக்கு இளவேனில் கார்காலம்
ஆனது,எனக் களிக்கும் ஆலோ.'

இஃது ஒரு மயக்க அணி. இளவேனிலை, கார்காலமாக மயில் மயங்கியது. மயில் மழைக்காலங் கண்டால் மகிழும். ஆனால், மந்தி இதற்கு மாறுபட்ட இயல்புடையது. அது மழையைக் கண்டு வருந்துகின்றது. நல்ல இளவேனிலைக் கார்காலமென நினைந்துவிட்டது குரங்கு. காரணம் என்ன? வசந்த விழா நடக்கின்றது கோவிலில். பெண்கள் பக்தி மேலிட்டுச் சந்நிதிமுன் நடம் பயில்கின்றார். மத்தளம் முழங்குகின்றது. அத்தோற்றம் அணித்தே நின்ற குரங்குகட்கு, மயில்கள் ஆடுவதுபோலவும், மேகங்கள் குமுறுவதுபோலவும் காட்சியளித்தது. மடவார் ஆடுவதை மயில் ஆடுவதாகவும் முழவு அதிர்வதை மேக முழக்கமாகவும் கருதி விட்டன மந்திகள். மழை என்ற அச்சம் அவற்றிற்கு வந்துவிட்டது. விரைவாகத் தாவிக்குதித்து மரத்தின்மீது ஏறின, அக்குரங்குகள். ஏறி என்ன செய்தன; அவை? வானை உற்று நோக்கின. முகில் திரண்டு நிற்கின்றனவா என்று ஆராய்ந்தன.

'வலம்வந்த மடவார்கள் நடமாட, முழவதிர, மழை

யென்று அஞ்சிச், சிலமந்தி அலமந்து, மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே' என்பது பாட்டு. நிற்க, இளவேனிலைச் சிறப்பிப்பதில் முதன்மை வாய்ந்தது எது? அதுதான் தென்றல் என்பது. தென்றல் இளவேனிற் காலத்தேதான் உலவும். தென்றல் மன்மதனுக்கு ஊர்தியாக அமைந்ததும் அன்றி, இளவேனில் என்பானுக்கு அது தூதாகவும் பொருந்தி நிற்கின்றது.

‘இன்னிளவேனில் வந்தனன் இவண்என
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்கால் தூதன் இசைத்தனன்.’

இளவேனில் வந்துவிட்டான் இங்கு என்று வளம் மிகுந்த பொதிகை மலைவாழும் மாமுனிவனால் பெறப்பட்ட இளங்காற்றாகிய தூதன் சொற்றனன் :

‘பொங்கு தமிழ்ப் பொதிகை மலைப்பிறந்து,
பூஞ்சந்தனத்தின்,
கொங்கு அணைந்து கொழுஞ்சாரல் இடை
வளர்ந்த கொழுந் தென்றல்,
அங்கணையத் திருவாரூர் அணிவீதி அழக
ரவர்,
மங்கல நாள் வசந்தம் எதிர் கொண்டணை
யும் வகை நினைந்தார்.’

என்ற பாட்டு இதே கருத்தைத் தழுவியது. இளவேனில் சிற்றின்பம் என்று செப்பப்படும் ஒன்றை விரும்புவார்க்குத்தான் இன்பம் தரும் என எண்ணுதற்கு இல்லை. பேரின்பத்தில் திளைக்கும் பெரியார்க்கும் இளவேனில் இன்பம் ஈகின்றது. இறைவனுடைய திருவடி நீழலை, குற்றமற்ற வீணையின் இனிய ஒலியாகவும், மாலைக் காலத்து மதியாகவும், வீசுகின்ற தென்றலாகவும், மொய்த்து வண்டுகள் ஒலமிடுகின்ற தேன்பிலுற்றும் மலர்ப்பொய்கையாகவும் கண்ட அடிகள், அத் திருவடி நீழலை, இளவேனிலாகவும் காண்கின்றார். வெறும் இள வேனிலாக அவ் அறிஞர் காணவில்லை. ‘வீங்கு இளவேனிலாக'க் கண்டார் :

‘மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்குஇள வேனிலும்
மூசு வண்டுஅறை பொய்கையும்
போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.’

ஈசன் எந்தையின் இணையடி நீழலை, இறைவன் அடியாருள் தலை சிறந்த அடியார், கார்காலமாகக் கண்டாரல்லவர்; பிறகாலங்களாகக் கண்டாரல்லர். அவர் கண்ட காலம் இளவேனில்.

# மூக்கிழந்த வாழ்வு

‘மாயா’

மனிதன் வரவர மூக்கை இழந்து வருகிறான். நமது நாகரிகம் வலுக்க வலுக்க, மூக்கும் குறைந்து வருகிறது. மனித ஜாதி முழுவதையும் ‘சூர்ப்பனகை'களாக்க, இயற்கையன்னை ஏன் இப்படி அக்கரை எடுத்துக் கொள்ளுகிறாளோ தெரியவில்லை.

தற்காலத்தில் நம்முடைய மூக்கு, முகத்தின் அலங்காரப் பொம்மையாக இருக்கிறதே தவிர, முன் மாதிரி உபயோகப்படவில்லை. அதைப்பற்றி நாம் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. கண் தெரியாதவனைக் குருடன் என்கிறோம். காது கேளாதவனைச் செவிடன் என்று அழைக்கிறோம். கால், கைகள் இல்லாதவர்களை நொண்டி, முடம் என்றெல்லாம் கூப்பிடுகிறோம். வாசனை தெரியாதவனுக்கு ஏதாவது இந்த மாதிரி நாமகரணம் இட்டிருக்கிறோமா? ஏன் இல்லை? மூக்கில் நமக்கு உண்மையான அக்கறையில்லாததுதான் காரணம்.

ஒளியின் வர்ணத்தை அளக்க நாம் கருவிகள் கண்டுபிடித்திருக்கிறோம். ஒலியலைகளை யெல்லாம் அலசிப் பிரித்து மதிப்பிடும் இயந்திரங்களும் ஆக்கி யிருக்கிறோம். ஆனால், வாசனை அளக்கும் கருவி மாத்திரம் கண்டுபிடிக்கவில்லை. வர்ணம், ஒலியை யெல்லாம் கணக்கிட்டு வர்ணித்து விடுவோம். வாசனையை மாத்திரம் அவ்வாறு மதித்து நிர்ணயிக்க நமக்கு வகையில்லை.

ஒன்றும் வேண்டாம்; ஒரு மலர்ச் செண்டை எடுத்து முகர்ந்துவிட்டு, “ஹா! ஹா! என்ன மணம்! என்ன குணம்!” என்று புகழ்ந்து விடுகிறோம். ஆனால், சமையல் உள்ளே போகாமல், கூடத்தில் இருந்தவாறே, சஹதர்மிணியின் சமையலில் இப்போது எந்தக் கட்டம் நடக்கிறது என்று மூக்கைக் கொண்டே நிர்ணயித்துவிடக் கூடியவர்கள் நம்மில் எத்தனை பேர் உண்டு?

தற்காலம் நம்முடைய விஞ்ஞான தீர்க்கதரிசிகள் பலர், என்னென்னவோ சோதிடம் சொல்லுகிறார்கள். மனித பரிணாமத்தின் பலனாக, நம்முடைய புலன்களெல்லாம் ஆச்சரியமாய் விரிவடையப் போவதா யெல்லாம் கூறுகிறார்கள். நமக்கு ‘ரேடியோ'க் காதும் ‘டெலிவிஷன்' கண்ணும் ஏற்பட்டால், உலகம் ஒரே பயங்கரமாய்த்தான் போகுமே யல்லாது, இன்பமயமாகுமென்று தோன்றவில்லை. ஆனால், நம்முடைய பழைய நேசனை மூக்குமட்டில், நல்ல அபிவிருத்தி யடைந்தால், எத்தனையோ நலமா யிருக்குமே.

சித்திரம், கண்ணின் கலை; சங்கீதம், காதின் கலை. ஆனால், மூக்கின் கலை எங்கே? பளபள வென்று சொர்ணம்போல் பிரகாசிக்கும் தாளில் ‘சம்பங்கி,’ ‘முல்லை’, ‘சந்தனம்’ என்றெல்லாம் சீட்டொட்டி, வரிசை வரிசையாய்ச் சீசாக்களில் ஊற்றி, அத்தரென்றும் ஸெண்டு என்றும் பரிமளத் தைலம் என்றும் விலை கூவப்படுகின்றனவே, அதுதான் மூக்கின் கலையோ? அல்லது அருமையான கலவை யென்று தூளைப் பிசைந்து பில்லையாய்த் தருகிறார்களே அந்தச் சந்தனபில்லை தானோ அந்தக் கலை? சேச்சே! அதில் நடக்கும் சூதுகளை நம் மூக்கு அறியுமா? நிலக்கரித் தாரிலிருந்தும் மெழுகிலிருந்தும் பாதிக்குமேல் அந்த ஸெண்டுகள் தயாராகி வருகின்றன. நுணுங் கட்டைகளை யரைத்து வாசனையூட்டும் சந்தனந்தான் நமக்குக் ‘கமாய்'த்து விடுகிறது. இப்படி ஏமாறும் மூக்குக்கு ஒரு கலையு முண்டா?

ஒரு காலத்தில் ஒரு காட்டில் ஒரு காட்டுமிராண்டி இருந்தானாம். தன்னைச் சுற்றிக் கால் மைல் தூரத்தில் உள்ள அத்தனை பொருள்களையும் வாசனை மூலமே அவன் அறிந்துவிடுவானாம். அடடா! அதுவல்லவா மூக்கு! எவ்வளவு அரிய தற்காப்புக் கருவி! அவனை நினைக்கையிலேயே எனக்கு ஸந்தோஷந்தான் ஏற்படுகிறது. ஆனால், ஆனால்......இன்று நகரவாசம் செய்யும் நம்முடைய மூக்குகள் இந்தச் சக்தியைப் பெற்றிராதது நமது பாக்கியமென்றே மறுபுறம் நினைக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், நகரம்......நரகம்......‘ந'கர ‘ர'கர பேதம்தான்.

# புத்தக உலகம்

**சூரிய நமஸ்காரம்:** ஆசிரியர்: டி. வி. திருவேதி. விலை ரூ. 1—0—0.

சூரிய நமஸ்காரத்தைப் போல் அவ்வளவு அபரிமிதமான பலன் தரத்தக்க தேகப்பயிற்சி வேறெதுவும் உலகத்திலேயே கிடையாது என்று ஆசிரியர் கூறுகிறார். இது அவருடைய அனுபவத்தில் கண்ட உண்மை. சூரிய நமஸ்கார முறைகளை மிக அருமையாகவும் தெளிவாகவும் அவர் விளக்கியிருக்கிறார். அன்றியும், அவர் சொல்லும் தேகாரோக்கிய விதிகளும் பெரிதும் உபயோகமானவை. பயன் மிகுந்த நூல்.

* *

**அபேதவாதம்:** ஆசிரியர்: சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். மொழி பெயர்த்தவர்: தி. ஜ. ர. விலை: அணா 6.

அபேதவாதம் என்றால் பூதமோ பிசாசோ என்று அஞ்சுவோர் இருக்கிறார்கள். அதைத் 'தெய்வ வரம்' என்று நினைப்போரும் இருக்கிறார்கள். அபேதவாதம் கொள்ளைக்கூட்டத் தர்மம் அல்ல. சோம்பேறி வாழ்க்கையு மல்ல. மனிதகுலம் ஒரே குடும்பமாக வாழும் முறை. ஆனால், அந்தக் குடும்பத்திலே கள்ளனுக்கு இடம் கிடையாது. இன்று அது ஒரு கற்பனை உலகம். இந்தக் கற்பனை உலகத்தை மிக எளிய முறையில், தெளிந்த சொற்களைக்கொண்டு சித்திரம் வரைந்து தருகிறார் ராஜாஜி.

* *

**செல்வம்:** ஆசிரியர்: க. சந்தானம். விலை: ரூ. 1—0—0.

இதன் ஆசிரியர் தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர்களில் ஒருவர். ஓரளவு அபேதவாத நோக்குடையவர். ஆகையால், வழக்கமான பொருளாதார நூல்களைப்போல் வளர்த்தி வளர்த்தி 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தது' தொடங்கி எழுதாமல், இன்று உலகில் செல்வம் எப்படி வழங்கி வருகிறது, அதன் வளர்ச்சியும் விநியோகமும் எவ்விதம் நடந்தால் நலம் என்பவைகளைத் தமது சிந்தனைக் கெட்டியவாறு தனித்ததொரு முறையில், சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியிருக்கிறார். பொருளாதார சாஸ்திரம் பற்றி அறிய விரும்பும் தமிழர் அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய நூல்.

* *

**அரசியல் ஞாபகங்கள்:** ஆசிரியர்: கி. சடகோபன். விலை: ரூ. 1—0—0

இந்திய சுதந்திர இயக்கம் ஆதியிலே 'சுதேசிக் கிளர்ச்சி' யாக இருந்தது. பிறகு, 'ஹோம் ரூல் கிளர்ச்சி'யாய் மாறியது. பின்பு தான் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கமாயிற்று. இந்த மூன்று காலத்திலும் நிகழ்ந்த பற்பல ரஸமான சம்பவங்களையும், தலைமை தாங்கிய பற்பல பெரியோர்களின் குணதியசங்களையும், ஹாஸ்யமும் உருக்கமும் மிகுந்த பல சித்திரங்களாக இந்நூலிலே திகழக் காணலாம். நமது நாட்டின் சுதந்திர சரித்திரத்தை ஆயாசமின்றிப் பொழுது போக்காகவும் அதே சமயத்தில் சிந்தனைக்கு விருந்தாகவும் படிப்பதற்கு ஒரு நூல் வேண்டும் என்றால், அது இதுதான் என்று தயக்கமின்றிச் சொல்லலாம். அவ்வளவு ருசிகரமாக இது எழுதப்பட்டிருக்கிறது.

[மேலே கண்ட நான்கு நூல்களையும் பிரசுரித்தோர்: சக்தி காரியாலயம், வடக்கு வெளிவீதி, மதுரை]

* *

**இருளில் ஒளி:** ஆசிரியர்: சரத் சந்திரர். மொழி பெயர்த்தவர்: வித்வான் ச. வி. ஸ்ரீனிவாஸசர்மா. வெளியிட்டோர்: சூடாமணிப் பிரசுராலயம், சென்னை. விலை: அணா 6.

சரத் சந்திரரின் ரஸமான கதைகளில் இது ஒன்று. தாஸி பிஜ்லி ஓர் அருமையான சிருஷ்டி. அவளுடைய துறவு மனமுருக்கும் சோகக் கதை. கதை சற்று அசம்பாவிதமாகத்தான் தோன்றுகிறது. ஆயினும் அசம்பாவிதத்தை ஸம்பாவிதமாக்கும் சக்தி கலைஞர்களுக்கு உண்டு என்பதற்கு இந்தக் கதையும் ஒரு சிறு உதாரணமாகும். மொழிபெயர்ப்பாளர், இவ்வளவு வடமொழிச்சொற்களை உபயோகியாமலிருந்திருக்கலாம். என்றாலும், பரவாயில்லை. நேர்த்தியாய், எளிய அழகிய நடையிலேயே, மொழிபெயர்த்திருக்கிறார்.

* *

**ஸ்ரீராமதூதன்:** ஆசிரியர்: சுவாமி சுத்தானந்த பாரதியார். விலை ரூ. 1—0—0.

நம்முடைய மகாகவியான கம்பருக்கு யோகம் வந்திருக்கிறது. அதன் பலன்களில் ஒன்று இந்த நாடகம். கம்ப ராமாயணத்தை மக்கள் விளங்கிக் கொள்ளுமாறு பரப்ப எழுந்த முயற்சிகளில் இதுவுமொன்று. கம்பருடைய பாடல்களையே பெரிதும் கையாண்டு, அவரது கதைப்போக்கையே முற்றிலும் தழுவி, கம்பராமாயணம் பூராவையும் பல நாடகங்களாக, சுவாமிகள் ஆக்கி வைத்திருக்கிறாராம். அவைகளில், ஹனும தூதுக் கதை இந்த நாடகம். சுவைநயமும் பொருட் செறிவும் தமிழ் அழகும் இதிலே நிரம்பியிருக்கின்றன. இதைப் படிக்கும் அன்பர்கள், மற்ற நாடகங்களும் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்பது திண்ணம்.

* *

**முன்னேற்றப் பாடல்கள்:** ஆசிரியர்: சுவாமி சுத்தானந்தர், விலை: ரூ. 1—0—0.

பெயர் குறிப்பிடும் தன்மை இந்த 69 பாடல்களிலும் பரிபூர்ணமாய் அமைந்திருக்கிறது. தற்காலம் நமக்கு வேண்டிய தேசபக்தி, சமூகச்சீர்திருத்தம், சமயத்தெளிவு ஆகிய ஏதாவதொன்று ஒவ்வொரு பாடலிலும் அழகுபட வற்புறுத்தப் படுகின்றது. மிக இனிய நடை. ராக, தாள அட்டவணை ஒன்றும் சேர்க்கப்பட்டிருப்பதால், தமிழிசை இயக்கத்தில் பற்றுள்ள அனைவர்க்கும் இந்நூல் பெரிதும் உதவியா யிருக்கும். இந்தப் பாடல்கள் நாடெங்கும் பரவிப் பாடத் தகுந்தவை யாகும்.

* *

**யோகசித்தி:** ஆசிரியர்: சுவாமி சுத்தானந்தர். விலை: (ராப்பர்) ரூ. 3—0—0.

சுவாமிகளின் ஆத்மானுபவத்தில் பிறந்த அருட்சுரங்கம் இந்த நூல். திருவள்ளுவரைப்போல், 405 குறட்பாக்களை, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் பற்றிச் சுவாமிகள் இயற்றியிருக்கிறார். அவைகளுக்குத் தாமே எழுதிய விரிவுரையையும் சேர்த்து, இவ்வரிய நூலை ஆக்கியிருக்கிறார். மனிதன் உத்தமவாழ்வு வாழ்ந்து, இறுதியிலே சித்தியடையும் மார்க்கம் இந்த நூலில் ரத்தினச் சுருக்கமாகப் போதிக்கப்படுகிறது. பூரண வாழ்க்கையை நடத்தவிரும்புபவர்களுக்கெல்லாம் பேருதவியா யிருக்கக் கூடியது இது.

* *

**கதைவிருந்து** : ஆசிரியர் : சுவாமி சுத்தானந்தர். விலை; ரூ. 1—12—0.

தாமரைக்குளம் முதலிய பதின்மூன்று செந்தமிழ்க் கதைகள், இதில் அடங்கி யிருக்கின்றன. முக்கால்வாசி வீரக்கதைகள். ஒன்றிரண்டு சமூகச் சீர்திருத்தக் கதைகள். பெரும்பாலான கதைகள், தமிழ்நாட்டுச் சரித்திர சம்பவங்களையும் சரித்திர புருஷர்களையும் சுற்றி எழுதப்பட்டுள்ளன. கடைசிக் கதை, தற்கால யுத்தத்துக்கே வந்துவிட்டது. பாத்திரங்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து, வீரமும் காதலும் நிறைந்து பொலிகின்றன. விறுவிறுப்பான நடை. தமிழ்மணம் பரிபூர்ணமாய் இந்தக் கதைகளில் வீசுவது ஒரு சிறப்பாகும்.

[மேலே கண்ட நான்கு நூல்களையும் வெளியிட்டோர்: அன்பு நிலையம், இராமச் சந்திர புரம், திருச்சிஜில்லா.]

* *

**ஜமீந்தாரிணி** : ஆசிரியர் : சரத் சந்திர சட்டர்ஜி. மொழிபெயர்த்தவர்: ஆர். ஷண்முக சுந்தரம். வெளியிட்டோர் : புதுமலர் நிலயம், கோயமுத்தூர். விலை : அணா 12.

ஒரு ஜமீந்தாரிணியை ஓர் ஏழை மணக்கிறான். ஆனால், அவன் அறிவும் கல்வியும் குணமும் நிறைந்தவன். அவளுடைய செல்வச் செருக்கு வந்து, அவளுடைய காதலுக்குத் திரை போடுகிறது. முடிவு என்ன? புருஷனை அவள் உதாசீனம் செய்து வெளியேற்றுகிறாள். ஆனால், அவள் சுகமடைந்தாளா? அதுதான் இல்லை. மீண்டும் அவனையே புகலடைகிறாள். சாந்தி பிறக்கிறது. சரத் பாபுவின் இந்த அற்புதக் கதையை, திரு. ஷண்முக சுந்தரம் அருமையாய் மொழி பெயர்த்திருக்கிறார்.

* *

**ஸ்ரீராமாவதாரம்** : ஆசிரியர் : வே. நாராயணன். கிடைக்குமிடம் : பி. ஜி. பால் அண்டு கோ, ஜி. டி., மதராஸ். விலை : அணா 2.

ஸ்ரீராமாவதார தத்துவத்தை வெகு சுகமாக வர்ணிக்கிறார் ஆசிரியர். மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் ஆகிய ஆறு புலன்களாலும் அனுபவிக்கத் தகுந்தவன் ராமன் என்பதை ஸ்ரீராம சரித பூர்வமாக, முத்திலே ரத்தினம் கலந்ததுபோல் வடசொற்களை ஆங்காங்கே ஏராளமாய்ப் பதித்த தமிழ் நடையில், அழகுபட வர்ணிக்கிறார். பக்தர்கள் படித்து மனமுருகலாம்.

* *

**அரும்பிய முல்லை** : ஆசிரியர் : தெ. சி. தீத்தாரப்பன், பி. ஏ. வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், கல்லுக்கட்டி, காரைக்குடி. விலை : ரூ. 2—0—0.

'பூ' என்ற புனைபெயருடன் போனவருஷம் 'சக்தி' யில் சில அருமையான பாடல்கள் வெளியாயின. அவைகளின் நயத்தைக் கண்டு, பல அன்பர்கள் பரவசமடைந்ததை நாம் அறிவோம். அந்தப் பாடல்களை எழுதியவர் காலஞ்சென்ற திரு. தெ. சி. தீத்தாரப்பன்தான். அந்தப் பாடல்களையும், வேறு பல கட்டுரைகள், கதைகள், கடிதங்களையும் திரட்டி ஒரு தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. பாட்டு, கதை, கட்டுரை, கடிதம் எதுவாகட்டும், திரு. தீத்தாரப்பன் எதை எழுதினாலும், அவருடைய கலையுள்ளம் பிரகாசமாய்ப் பிரதிபலிக்கிறது. இளந்தளிரைத் தொட்டால் என்ன இன்பம் உண்டாகுமோ அதை அவருடைய எழுத்துக்களிலும் கவிகளிலும் அடையலாம். ரஸிகர்களுக்குச் சிறந்ததொரு விருந்து இந்தப் பிரசுரம்.

* *

**பவழ மாலை** : ஆசிரியர் : பி. எம். கண்ணன், விலை ரூ. 1—2—0.

பதினைந்து சிறு கதைகள் அடங்கியதொரு கதைத் தொகுதி இது. வழக்கமான அக்கம் பக்கத்துக் காட்சிகளை மட்டில் எழுவாயாகக் கொள்ளாமல், எட்டியம்மன் கோயிலின் முன்னுள்ள கற்பாறையைக் கொண்டு ஒரு சரித்திரக் கற்பனை, காட்டிலே திரியுமொரு வில்லிப் பெண் வள்ளியைச் சுற்றி ஒரு கதை இப்படிப் பலவிதக் கதைகளை ஆசிரியர் சுவாரஸ்யமாய் எழுதியிருக்கிறார். இயற்கையும் இனிமையும் நிறைந்த சுகமான நடை. ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய கதைகள்.

* *

**வெண்தாமரை** ; ஆசிரியர் : வி. எஸ். ராமகிருஷ்ணன், பி. ஏ. விலை : ரூ. 1—2—0.

இதுவுமொரு சிறு கதைத் தொகுதியே ; 14 கதைகள் அடங்கியது. உணர்ச்சிகளை மிக அழகாகச் சித்தரிக்கிறார் ஆசிரியர். இந்தச் சிறு கதைகளில், பாத்திரங்கள் ஜீவனுடனிருக்கின்றன. சம்பாஷணைகள் இயற்கையா யிருக்கின்றன. சாமான்ய சம்பவத்தை வைத்துக்கொண்டு, கதா சுவாரஸ்யம் குறையாதபடி அதைச் சொல்லுவது ஒரு சாமர்த்தியம். அதை இக் கதைகளிலே காண முடிகிறது.

[மேலே குறிப்பிட்ட இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.]

## கம்பனும் டி. கே. ஸி. யும்

கம்பன் கவிதையில் ஊறித்திளைத்த பெரியார் டி. கே. ஸி. அவர்கள் உண்மைக் கவிதையின் உயரிய லட்சணங்களையும் லட்சியங்களையும், தமிழாராய்ச்சி முறையிலும் ஆங்கில ஆராய்ச்சி முறையை ஆழமாகப் பின்பற்றியும் பதித்துள்ள 'கம்பராமாயணம் — பாலகாண்டம், அயோத்தியா காண்டம்' என்ற புதுமைப்பதிப்பக வெளியீடு (586 பக்கங்கள்—விலை ரூ. 6.) மிக உயர்ந்த பதிப்பாக வெளிவந்திருக்கிறது. தமிழ் உலகத்தில் இத்தகைய நூலை இந்த முறையில் இந்தஅமைப்பில், காண்பது ஓர் இன்பம்தான். இப்பெரியாருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

உண்மைக்கவி, அருட்பொலிவில் பாடுபவன் : இதைக் கம்பனும் ஷெல்லியும், தாந்தேயும், வேர்ட்ஸ் வொர்த்தும் நுட்பமாக அனுபவித்து ஒப்புக்கொள்ளுகிறார்கள். கார்லைலும் உறுதியாக ஆமோதிக்

கிறார். சந்தச்சுடர்க் குன்றின் சிகரத்தில், மொழிமயில் தோகை விரித்தாடுவதுபோல், கம்பன் பாடி வைத்த பாமணிகளின் உயர்ந்த தன்மையை உணர்ந்த டி. கே. ஸி. அவர்கள், மத்தியில் காலப்போக்கில் உட்புகுந்த செருகல் பாடல்களை விலக்கி, உண்மைக் கம்பன் பாடிய உண்மைக் கவிகள் இவைதான் என்று தெளிவு படப் பொறுக்கி எடுத்து, தமிழுலகம் பெரும்பயன் அடைய உதவிசெய் திருப்பது ஒரு பெருந்தொண்டு ஆகும்.

**கா**வியத்தையும் ஓவியக்கலையைப் போல் உணரவேண்டும் என்பதை, ஆராய்ச்சித்துறையில் சிறப்புப்பெற்றுள்ள டி. கே. ஸி. அவர்கள் அடிக்கடி வற்புறுத்துவார்கள். காவியத்திலும் ரூபமுண்டு; ஓவியத்திலும் ரூபம் உண்டு. காவியத்தில், மொழியே ஓவியமாகக் காட்சி யளிக்கிறது. மொழி சிதறினால், ஓவியம் சிதறும்; கருத்து மங்கும்; ஓசை குன்றும்; சிந்தனை ஓடியும்; கவிஞனின் பேனாமுனையும் மழுங்கிவிடுமோ என்று நாம் ஐயுற நேரும். இந்தக் கஷ்டங்களை அனுபவத்தில் உணர்ந்த டி. கே. ஸி. அவர்கள், கம்பனின் தெளிந்த கற்பனையை, தெளிந்த கம்பசித்திரமாக விளக்கி யிருக்கிறார்கள். "கம்பராமாயணப் புஸ்தகம் செருகு கவி மயம் என்று சொன்னால் குற்றமில்லை" என்று இப்பெரியார் முகவுரையில் குறிப்பிடும் போது, உண்மைக் கம்பன் செருகு கவிகளில் சிக்குண்டு தத்தளிக்கும் நிலையை உணர்ந்தே, அவர் அவ்விதம் எழுதியிருக்கிறார்.

செருகல்களையும் பாடச் சிதைவுகளையும் சீர்செய்தால், பழம் பண்டிதர்களுக்கு மருட்சி ஏற்பட்டு விடுகிறது! வயலைப் பயிர் செய்ய, களையையும் வளர்ப்பது மூடத்தன மல்லவா? ஆங்கில மகா கவியான ஷேக்ஸ்பியர் நாடகங்களில், பின்னால் எத்தனையோ செருகல்களும் பாடச் சிதைவுகளும் புகுந்துவிட்டன. வார்பர்ட்டன், மேஸன், வாட்ஸீ, பெல்டன், மெலோன், ஹாஸ்லிட் முதலிய பல ஆராய்ச்சி நிபுணர்கள் செருகல் நீக்கி, சிதைந்த பாடங்களுக்குத் தாங்களாய் ஊகித்த பல அருமையான பாட பேதங்கள் தந்தார்கள். அவை இன்று உலகெல்லாம் போற்றி வழங்கப்படுகின்றன. அச்சியந்திரம் வந்த பிறகும் ஷேக்ஸ்பியருக்கு நேரிட்ட பாடச்சிதைவு ஆபத்துக்கள், ஏட்டுச்சுவடி நிலையில் கம்பனுக்கு எத்தனையோ நிகழ்ந்திருப்பதில் வியப்பில்லை. அவற்றைச் சீர்செய்து தூய்மைப்படுத்த, கம்பனிடம் உள்ளம் பறிகொடுத்து அவனுடைய காவியத்திலே ஊறித் திளைத்த திரு. டி. கே. ஸி. போன்றோர் முன் வந்தால், அதைக் களிப்புடன் வரவேற்பதே அறிவுடைமை யாகும்.

டி. கே. ஸி.

கம்பரது கவியைப்பற்றி அவர் உணர்ந்து பாடி அனுபவித்து எழுதியிருப்பதைக் கேளுங்கள்: "கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவை யுண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவைதான். ஆனால், இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது தனியான கதிநயங்களைக் காண்கிறோம். அவைகளின் பாவமும் வேகமும் எங்கேயோ இருந்து வந்தமாதிரி, புத்தப் புதியவையா யிருக்கும். ஒவ்வொருசெய்யுளிலும்ஒரு தனியான ரஸம். கவிக்கு ஏதோ நவரஸம் என்கிறார்கள். ஆனால், கம்பருடைய கவிகளைப்பார்க்கும் போது, ஆயிரக்கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படித் தனித்த ரஸம் வாய்ந்த, உயிர்த் தத்துவம் வாய்ந்த கவிகளாய் இருப்பதாலேயே, கம்பருடைய கவிகளை இனங் கண்டுகொள்ள முடிகிறது." இவ்வாறு கம்பனுடைய கவிதைப்பண்பை, உள்ளங் குளிர அனுபவித்த ஆராய்ச்சி நிபுணர் டி. கே. ஸி. ஒருவர்தான் இவ்விதம் எழுத முடியும்.

**த**மிழில் ஆராய்ச்சித் துறையில் எழுத்தாளர்கள் மிகக் குறைவு. ஆங்கில ஆராய்ச்சி விரிந்து விரிந்து வேகமாக வளர்ந்து வருகிறது. பிராட்லி, மரி, ராலி, ஆர்னால்ட் பென்னெட், குவிலர்கூச், ஹெர்போர்டு, ஆபெர்கிராம்பி முதலியவர்களின் ஆராய்ச்சி நூல்களை ஆழமாக அறிந்து, இவ்வுண்மைகளைத் தமிழ்க்கவிதைஆராய்ச்சியில் நுட்பமாக அனுபவத்துடன் டி. கே. ஸி. அவர்கள் வழங்கும் போது, பண்டிதர்கள் வியந்து வியந்து, வெறுக்கலாமா என்று நினைக்கவும் துணிந்துவிடுகிறார்கள். ஒரு மொழிப்புலமை, ஆராய்ச்சிக்கு உதவாது, இரண்டு வெவ்வேறு தேசமொழிகளில் புலமை வளரும்போது, ஒன்றுக்கொன்று உதவியாக ஆராய்ச்சிக் கண் திறக்கிறது; கண்ணில் கண்ணாடி திகழ்கிறது. அயோத்தியா காண்டத்தில், மந்தரை சூழ்ச்சிப்படலத்தில், ஒரு செய்யுளின் அழகைப் பாருங்கள்: ஜனங்கள் தங்கள் சந்தோஷத்தைக் காட்டுவதற்காக, எதையெல்லாமோ தூவுகிறார்கள்:—

"பூமழை, பொரிமழை,
புதுமென் சுண்ணத்தின்
தூமழை, தரளத்தின்
தோமில் வெண்மழை,
தாம் இழை நெரிதலில்
தகர்த்த பொன்மழை,
மாமழை நிகர்த்தன
மாட வீதியே."

இந்தச் செய்யுள், உணர்ச்சியில் சுழல்கிறது; சொற்கள், சந்தமழையில் சுழல்கின்றன; கண் நிறைந்த சித்திரம், கண்ணை மீறி இதயக்கரை தாண்டி இன்பமாகப் பறந்து மின்னி மின்னி வருகிறது. இது ஒரு மொழி மின்னல், ஓசை மின்னல், ஆனந்த மின்னல். இந்த நயத்தை உணர்ந்தே டி. கே. ஸி. இதைப் பொறுக்கி அமைத்திருக்கிறார். இதில் கம்பனின் உள்ளம் தவழ்கிறது.

ஆராச்சித்துறையில் சிருஷ்டிச் சிறப்புடன் எழுதும் வன்மை திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களுக்கு உரியது. அவர்கள் ஒரு பெரிய ஆராய்ச்சி நிபுணர். அவர்களது தெளிந்த தமிழ் வசனம், சிறந்த கூர்மையானதோர் ஆராய்ச்சிக்கருவியாய்த் திகழ்கிறது. —வி. ஆர். எம். செட்டியார்.

# பறித்த பூக்கள்

**காதல் :** "எவ்வளவு அழகான ரோஜா! இங்கே எப்படி வந்தது இது!" என்று ஆச்சரியப்பட்டான் காதலன். அதைக் கைக் குட்டையில் எடுத்துக்கொண்டு காதலியிடம் சென்றான். அவள் அவனைக் கண்டதும், முகத்தைத் திருப்பிக்கொண்டு, "இந்தப் பூ எனக்கு வேண்டாம். வைரக்கற்கள் பதித்த தங்க ரோஜா என் மாமா எனக்கு வாங்கிக் கொடுக்கப்போகிறார். அவரைத் தான் நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்றாள்.

காதலன் கோபத்துடன் ரோஜாவைத் தெருவில் எறிந்தான். ஒரு குப்பை வண்டி அதன்மேல் ஏறி நசுக்கிற்று. காற்று, பிய்ந்து போன இதழ்களைச் சாக்கடையில் கொண்டுபோய்ப் போட்டது. காதலன், சிலந்தி யடைந்திருந்த தன் அலமாரியில் இருந்த ஒரு மனோதத்துவ சாஸ்திரப் புஸ்தகத்தைப் படிக்கப் போய்விட்டான். பின்பு, தன் குறிப்புப் புஸ்தகத்தில் பின்வருமாறு அவன் எழுதியதாக வர்ணிக்கிறார் 'கலைமக'ளில் திரு. எஸ். சங்கரன் :

"காதல் என்பது பைத்தியங்களின் பிதற்றல்; தர்க்க சாஸ்திரத்தைவிட மட்டமானது. காதல் ஒன்றையும் நிரூபிப்பதில்லை. நடக்காததையும் உண்மை அல்லாததையும் மெய்ப்பிப்பதுபோல் நடிக்கிறது."

* * *

**சினிமா ஆள் மாறாட்டம் :** யாரோ ஒருவர் பாடியிருப்பார்; அதற்குச் சரியாக மற்றொருவர் வாயை அசைப்பார். திரையில் பார்ப்பதற்கு, வாயை அசைப்பவரே பாடுகிறாரென்று தோன்றும். இந்த வித்தைக்கு 'டப்பிங்' (Dubbing) என்று பெயர். ஆளுக்குப் பதிலாக நிழலைக் காட்டி ஏமாற்றுவதைப்போல், சினிமாப் பிரபஞ்சத்தில் இந்த வித்தையும் இப்பொழுது சகஜமா யிருக்கிறது.

சில சமயம் இம்மாதிரி நம்மை ஏமாற்றுபவரே ஏமாறுவ துண்டு! அம்மாதிரியொரு ரஸமான சம்பவத்தை 'ஹிந்துஸ்தான்' வெளியிட்டிருக்கிறது.

ஒரு சமயம் நகரசபை அங்கத்தினர் ஒருவர் ஒரு பிரபல நட்சத்திரத்துக்கு விருந்தளித்தார். குயிலினுமினிய குரலில் அவர் சினிமாவில் பாடியிருப்பதை எல்லோரும் கேட்டிருக்கிறார்கள். ஆகையால், அவரைப் பாடும்படி நண்பர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அந்த நட்சத்திரத்துக்கு இது தர்மசங்கட மாகிவிட்டது. வேறு வழியில்லாமல், தமக்குப் பாடத் தெரியா தென்று அவர் ஒப்புக் கொண்டார். இதை யாரும் நம்பவில்லை. அருமையான சாரீரத்துடன் அவர் பாடியிருக்கும் படம் நகரில் ஓடிக்கொண் டிருக்கும் பொழுது, பாடத் தெரியா தென்றால், அதை எப்படி நம்ப முடியும்? நட்சத்திரம் எசகேடாக மாட்டிக்கொண்டு விட்டார்! கடைசியில் ஜலதோஷத்தினால் தொண்டை கட்டிக்கொண் டிருக்கிறதென்று சொல்லிக் கெஞ்சும்படி யாகிவிட்டது!

இந்த நட்சத்திரம் யார் என்பதையறிய வாசகர்களுக்கு ரொம்ப ஆவலா யிருக்கும். வேறு யாருமில்லை—லீலா தேசாய்தான்! துஷ்மனின் வங்காளி பாஷைப் படமான ஜீவன் மரான், கல்கத்தாவில் பிரமாதமாக ஓடிக்கொண் டிருந்த போது நடந்த சம்பவம் இது.

* * *

**கும்பகோணத்தில் சென்னை :** "நான் கும்பகோணத்தில் ஒரு சிநேகிதியைப் பார்த்துவிட்டு வரலாமென்று போனேன். ஒரு தெருவுக்குப் போனபோது, நாம் கும்பகோணத்தி லிருக்கிறோமா, பட்டணத்தி லிருக்கிறோமா என்று சந்தேகம் வந்துவிட்டது" என்கிறார் 'ஆனந்த விகட'னில் 'துமில'னின் சிருஷ்டியான ராஜம். அவர் கூறும் காரணம் இதுதான் :

ஏனென்றால், நான் பட்டணத்தில் வழக்கமாக வாங்கும் புடவைக் கடைகள், நகைக் கடைகள் எல்லாம் இங்கே இருந்தன. போதாதற்கு என் பக்கத்து வீட்டுக்காரர், சென்னையிலிருந்த என் சிநேகிதர்கள் சிலர்—எல்லாரையும் இங்கே கடைகளில் கண்டேன். ஒவ்வொருவரையும் அவர்கள் எப்பொழுது வந்தார்கள் என்று விசாரித்தேன்.

"நான் வந்து இரண்டு நாள் தான் ஆச்சு."

"நான் அபாயச் சங்கு ஊதினதற்கு அப்புறந்தான் கிளம்பினேன்."

"நான் வரும்போது ஊரில் ஈ காக்கை இல்லை."

"இன்றையக் காலை ரயிலில் தான் வந்திறங்கினேன்."

இவ்விதமாக ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு, தாங்கள்தான் கடைசி கடைசியாக வந்ததாகச் சொல்வதில் பெருமை கொண்டார்கள்.

* * *

**அந்தமான் புராணம் :** ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமான் ஸ்ரீதேவியோடு உல்லாசமாக மந்தஹாஸத்துடன் பள்ளிகொண் டிருக்கும் திருக்கோலத்தைக் காண மகரிஷிகளும் தேவர்களும் எழுந்தருளினார்கள். எல்லோரும் எம்பெருமானை நமஸ்கரித்து, "பிரபோ! நாங்கள் இந்த வைகுண்டத்திலுள்ள ஸ்வர்க்கத்தை அனுபவித்துத் தெவிட்டல் அடைந்துவிட்டோம். பூலோகத்திலுள்ள ஸ்வர்க்க சுகத்தை அனுபவிக்க இச்சை கொண்டுள்ளோம். அருள் புரியவேண்டும்" என்னவே, பகவான்ஸ்ரீமன்நாராயணன், எல்லோரையும் பார்த்து, "ஸத்புருஷர்களே! பூலோகத்தில் ஸ்வர்க்கமென்பதே கிடையாது. பூலோகம் நரகத்துக்குத்தான் சமானம்" என்று சொல்லவே, திரிலோக சஞ்சாரியாகிய நாரத பகவான் தோன்றி, 'க்ரெய்க்' என்ற வெள்ளையன் ஒருவன் பூலோகத்தில் ஒரு ஸ்வர்க்கத்தைக் கண்டுபிடித்துள்ளா னென்றும் அதைப் பற்றிப் பூலோகத்தில் ஒரே பேச்சாய் இருக்கிற தென்றும் சொல்லவே, எம்பெருமான் நாரத பகவானையும் பிறரையும் அங்கே அனுப்பிவைத்தார். நாரதர் ஒரு மானுருவம் எடுத்து எல்லோருக்கும் வழிகாட்டி, பூலோகஸ்வர்க்கமென்று சொல்லப்பட்ட இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

சொல்ல முடியாத நரக வேதனையை அங்கே எல்லோரும்.

அனுபவித்து, எப்போது வைகுண்டத்துக்குத் திரும்பிப் போவோம் என்று துடித்தார்கள். அனைவரும் மறுபடியும் பிரார்த்திக்கவே, பகவான் பிரத்தியட்சமாகி, "ஸத்புருஷர்களே! நான் சொன்னதில் நம்பிக்கை கொள்ளாமல், க்ரெயிக் என்ற வெள்ளைக்காரன் சொன்ன கட்டுக் கதையை நம்பினீர்கள்! பார்த்தீர்களா பூலோக ஸ்வர்க்கத்தை! அடைந்தீர்களா சுகத்தை!" என்று பரிகாஸமாய்ச் சொல்லவே, நாரதர் இந்த மானுருவம் போய்ப் பழைய உருவம் வர அனுக்ரஹம் பண்ண வேணுமென்று பிரார்த்திக்க, பகவான் "அந்த மானாகவே இருந்து எல்லோரையும் வைகுண்டத்துக்கு அழைத்து வருவாய், உன் சுய ரூபத்தைப் பெறுவாய்?" என்று சொல்லி மறைந்தார். அன்று முதல் அந்தமான் என்று அந்த ஸ்தலத்துக்குப் பெயர்வழங்கலாயிற்று! இந்த அந்தமான் புராணம் 'காவேரி'யில் காணப்படுகிறது. ஆனால், மார்ச்மீ 23வுக்குப் பிறகு அந்த அந்தமானுக்கு ஜப்பானியக் குள்ளர்கள் என்ன புதுப் பெயர் வைத்து விட்டார்களோ, தெரியவில்லை.

* * *

**புலவர் சாதுர்யம்:** மதுரைக் கருகிலிருந்த வறுமைப் புலவர் ஒருவர் பாண்டிய மன்னரைக் கண்டபோது, அவரை மன்னர் "என்னென்ன தமிழ் நூல்கள் கற்றிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். புலவர், தாம் கற்றறிந்த தமிழ் நூல்களை யெல்லாம் விடாமல் சொல்லி முடித்தார். சொல்லி முடிந்ததும், அரசர், "அருணாசல புராணமும் சீகாளத்திப் புராணமும் தெரியுமா?" என்று கேட்டார். புலவர், அவற்றைக் கற்கவில்லை யென்றார். அரசர் வேடிக்கையாக, "புலவரென்றால், தமிழ் நூல்களில், தக்கவற்றை யெல்லாங் கற்றிருக்க வேண்டாமா? அதுவன்றோ சிறப்பு?" என்றார். அதற்குப் புலவர், "வேந்தே! எல்லாம் கற்றிருந்தால் சிறப்புத்தான். இத்தகைய நன்னோக்கமுடைய தங்கள் போன்றோரது ஆட்சி தமிழகம் முழுமையும் பரவவேண்டும்; தாங்கள் இத் தமிழ்நாடு முழுமைக்கும் அரசராயிருந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்" என்று அரசர் நலத்தைத் தாம் விரும்பும் முறையிலும், தம்மைக் கேட்ட கேள்விக்கு விடையிறுக்கும் முறையிலும் புலவர் திறமையாகக் கூறினார் என்று சேவு. சுப்பய்யா 'செந்தமிழ்ச் செல்வி'யில் எழுதுகிறார்.

மன்னர், புலவர் கூறியது கேட்டு வியந்து, 'ஓர் அரசன் எல்லா நாடுகளையும் ஆட்சி செலுத்தக்கூடுமானால், ஒரு புலவர் எல்லா நூல்களையுங் கற்றிருக்கக் கூடும்' என்று அவர் கூறிய சதுரப்பாட்டுக்கு மகிழ்ந்து, ஒரு வெள்ளித் தட்டு கொண்டுவரச் செய்து அது நிறைய வெண்பொற் காசுகளை வைத்துப் புலவரிடம் அளித்தார். புலவர், தமது கையில் தட்டினை வாங்கிக்கொண்டு, "தட்டு அவ்விடத்தைச் சேர்ந்ததா அடியேனைச் சேர்ந்ததா?" என்று கேட்க, மன்னர், புலவரின் எண்ணத்தை அறிந்துகொண்டு, "தட்டும் புலவரைச் சேர்ந்ததே?" என்று கூறினார். தாமும் அவரைச் சேர்ந்தவரே என்பது கருத்தாயிற்று!

* * *

**தேவி திருமணம்:** சாரதா தேவியின் இளமைப் பருவத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவம் அவரது திருமணம்தான். திருமண ஸமயத்தில் சாரதாவின் வயது ஐந்து; ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் திருமணம் செய்துவிட்டால், ஏனைய இளைஞரைப்போல அவரும் குடும்ப வாழ்வில் ஈடுபடுவார் என்பது அவருடைய உறவினரது எண்ணமாக விருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணரும் திருமணம் செய்துகொள்ள மறுத்தாரில்லை. தமக்கேற்ற பெண் இருக்குமிடத்தைத் தாமே தம் வீட்டாருக்குத் தெரிவித்தார். திருமண காலத்தில் நடைபெற்ற ஒரு விசேஷத்தை 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' வெளியிட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரது குடும்பம் ஏழைக் குடும்பமானதால், அவருடைய தாயார் வேறொரு வீட்டிலிருந்து சில நகைகளை இரவலாக வாங்கிவந்து மருமகளுக்கு இட்டிருந்தார். விவாகம் முடிந்த பிறகு, நகைகளை அக்குழந்தையிடமிருந்து எவ்வாறு திரும்பப் பெறுவது என்ற கேள்வி எழுந்தது. நகைகள் தனக்கே உரியன என்று குழந்தை கருதினாள். கடைசியில் சாரதா தூங்கும்பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணரே நகைகளைக் கழற்றிவிட்டார். தூங்கி எழுந்ததும், நகைகளைக் காணாது அழுத குழந்தைக்கு மாமியார் ஆறுதல் கூறினார். அவளுடைய நாதன் பிற்காலத்தில் நகைகள் செய்து போடுவானென்று உறுதி கூறினார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய மனைவிக்குப் பிற்காலத்தில் நகைகள் செய்து போட்டதுடன், ஞானப் பொக்கிஷத்தையே அவருக்கு அளித்தார்.

## தெய்விகக் கலைஞன்

தெய்விகக் கலைஞன், தனது மேதையையும் சாதனங்களையும் பற்றி நிச்சயமாக இராதது போலவே பெரும்பாலும் வேலை செய்வான். ஒன்றை எடுத்துச் சோதித்துப் பின்னர் விட்டுவிடுவான். அதைப் பொறுக்கி எடுத்து, எறிந்து விட்டு, பின்னர் அதை மீண்டும் எடுத்துத் தன் உழைப்பை யெல்லாம் அதில் செலுத்துவான். அதில் தவறி, பின்னும் அதை ஒட்டுப் போடுவான். அவன் செய்வதெல்லாம் இவ்வீதமாகவே காணப்படும். எல்லாப் பொருள்களும் ஆயத்தமாகு முன், அவனது பணியில் பல ஆச்சரியங்களும் ஆசாபங்கங்களும் இயற்கையாக ஏற்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள் நிஷித்தம் என்னும் படுகுழியில் எறியப்படும் தள்ளப்பட்ட பொருள் ஒரு மகத்தான கட்டிட அமைப்புக்கு மூலைக் கல்லாகும். ஆயினும், இவைகளுக் கெல்லாம் பின்னால், நமது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் அறிவின் பிசகாத பார்வையும், அளப்பரிய ஆற்றலின் குறுநகையும் உள்ளன.

—ஸ்ரீயுத அரவிந்தர்.

* * *

**காவியமா கடிகாரமா:** சிலப்பதிகாரம் என்றால் என்ன? "கோவலன் — கண்ணகி கதையைக் கூறும் பழந்தமிழ்க் காவியம்" என்றுதான் இத்தனை நாளும் எண்ணிக்கொண்டிருந்தேன். சமீபத்தில் ரேடியோ பாடகர் ஒருவர் இது விஷயமாகச் சிறிது சந்தேகத்தை உண்டுபண்ணிவிட்டார்" என்கிறார் 'கல்கி'யில் கர்நாடகம். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்னும் பாரதியாரின் பாட்டை அவர் பாடினார்.

"பல்விதமாய் இன்ப சாஸ்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு"

என்று அவர் வெளுத்து வாங்கிய போது, "இதென்ன கூத்து? தமிழ்நாட்டுக்கு இப்படி ஒரு பெருமையா?" என்று வியப்படைந்தேன். பிறகு அப் பாடகர்,

"—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகார மென்றோர் கடி-
காரம் படைத்த தமிழ் நாடு"

என்றதும், எனக்கு மூர்ச்சை போடும்போல் ஆகி விட்டது!

இந்த ரேடியோப் பாடகரின் அபிப்பிராயத்தின் படி சிலப்பதிகாரம் என்பது ஒரு வகைக் கடிகாரம் என்றல்லவா தெரிகிறது?

# FREE! FREE! FREE!

தானே சுழன்று ஒன்றன் பின் ஒன்றாக வெடிப்பதால் திருடர்கள் அஞ்சி ஓடும்படிச் செய்கிறது. உண்மையான ரிவால்வரைப் போல் வெடிக்கும்போது பொறி பறந்து அதிர்ச்சியுடன் வெடிக்கிறது. அதன் சப்தம் காட்டு மிருகங்களையும், பறவைகளையும் நடுங்கி ஓடச்செய்யும். ஆபத்துக்கு ஒவ்வொரு வீட்டிலும் இது ஒன்று அவசியம் இருக்க வேண்டும். லைசென்ஸ் வேண்டாம்.

விலை :—நெ. 7777 ரூ 4—8—0 (35 ரவைக் குண்டுகள் இனாம்.)

நெ. 8888 ரூ. 5-13—0 (45 ரவைக் குண்டுகள் இனாம்.)

நெ. 9999 ரூ. 6-12—0 (55 ரவைக் குண்டுகள் இனாம்.)

பிரத்தியேக 1000 ரவைக் குண்டுகளுக்கு ரூ. 3—0—0

பெல்டுடன் கூடிய கேஸ் 1-க்கு ரூ. 0-12—0

ரிவால்வர் எண்ணெய் 1-புட்டி ரூ. 1-12—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

ஒவ்வொரு பிஸ்டலுடன் ஒரு தோலா எடையுள்ள எங்களது "பாரிஸ் ந்யூ கோல்டு" என்னும் தங்கமும் ஓர் அழகிய ம்யூட் கைக் கடிகாரமும் பரிசளிக்கப்படும். ஒரே தடவையில் 2 பிஸ்டல்கள் வாங்குகிறவர்களுக்கு 3 தோலா எடை "பாரிஸ் ந்யூ கோல்ட்" தங்கமும் 3 அழகிய கைக் கடிகாரங்களும் தபால் செலவு உள்பட இனாமாகக் கொடுக்கப்படும்.

லைஸென்ஸ் இல்லை—ஆட்டோமாட்டிக் பிஸ்டல்

**LONDON COMMERCIAL COMPANY,**
Post Box No. 165, (S. M.) LAHORE, (India.)

---

## ரூ. 50,000 பெறுமானமுள்ள நகைகள் கொடுக்கப்படும்

"லண்டன் ந்யூ கோல்ட்" என்னும் தங்கம் எங்களால் புதிதாகக் கண்டுபிடித்த அழியாப் புகழுடையது. இதை உண்மையாக உலக அதிசயங்களில் எட்டாவதென்றே சொல்லலாம். ஆதலால், இதற்கு யாதொரு பீடிகையும் வேண்டுவதில்லை. இந்தியா முழுதும் ஏற்கனவே இதன் பிரஸித்தம் பரவி, ரஸாயனத் தங்கத்தில் இது ஒன்றுதான் யாதொரு குற்றமும் பழுதுமின்றி எப்பொழுதும் பளபளப்போடு இருக்கக்கூடியதென்றும், அதனால் அநேகவித நாகரீக நகைகள் செய்வதற்குத் தகுந்ததென்றும் பொதுஜனங்களாலும் பத்திரிகைகளாலும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

"லண்டன் ந்யூ கோல்ட்" என்னும் தங்கத்தை இன்னும் பிரஸித்தி யாக்குவதற்காக, தற்காலிகமாக ஒரு செட் மாதிரிக்கு "லண்டன் ந்யூ கோல்ட்" தங்கம் 3 தோலா எடையுள்ள 2 ஜதை அழகான வளையல்கள், 2 ஜதை காதணி தோடுகள், 2 மோதிரங்கள் அருமையான வேலைப்பாடுடன் கூடியவை படத்துடன் கூடிய காட்லாக்குடன், இப்பொழுது உடனே எழுதுகிறவர்க்கு அனுப்பப்படும். இந்த ஏற்பாடு ரத்தாகுமுன் இப்பொழுதே எழுதவும்.

**LONDON COMMERCIAL COMPANY,**
Post Box 165, (S. M.) LAHORE, (India.)

தந்தி : 'GOODWILL' | தபால் பெட்டி நெ. 113 | டெலிபோன் : நெ. 2724

## ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜி. டி. சென்னை

பிராஞ்சுகள் :

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த் தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும் எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

### BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதுர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக்

8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1-4-0

### ASCU WOOD PRESERVATIVE

ஆஸ்கூ

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப் படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம்.

ஜில்லா ஏஜண்டுகள் தேவை

**பிராடியூஸ் டிபார்ட்டுமெண்ட்**

நெ. 207 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்

டெலிபோன் நெ. 2991.

கிராம்பு, மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, சணல், சூடம் முதலிய மளிகை சாமான்கள் மொத்த வியாபாரம்

உங்களுக்குத் தேவையான எல்லா சாமான்களுக்கும் கடிதம் எழுதக் கோருகிறோம்

## லக்ஷ்மியின் முன்னேற்றம்

★

புதிய தொழில்

## 1941-ஆம் ஆண்டில்—101 லட்சம்

இந்தியாவிலும் பர்மாவிலும் சாதாரண ஜனங்களோ, ஸிவில் உத்தியோகஸ்தர்களோ நமது பாலிஸிதாராக விருப்பவர்களுக்கு, சகல யுத்த சேதங்களுக்கும் பூரணப் பாதுகாப்பு அவர்களுடைய பாலிஸிகளில் அளிக்கப்படும். சத்ருவின் தாக்குதலால் மரண மேற்பட்டுப் பாலிஸிதார் இறந்தால், நியாயமான பாத்தியதை உள்ளவர்களுக்குப் பூரண இன்ஷ்யூரன்ஸ் தொகையும் அளிக்கப்படும்.

## லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், லாகூர்

★

சென்னைக் கிளை :

**125, லாயிட்ஸ் ரோடு,**

**கதீட்ரல் போஸ்ட்,**

**சென்னை**

# சுதந்தர முயல்

கடற் கரையிலே ஒருநாள் 'சிகு, சிகு—சிகு, சிகு' என்று சிறிய முயல் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அப்போது, கரையில் ஒரு யானையும் தண்ணீரில் ஒரு திமிங்கிலமும் இருந்து பேசிக்கொண்டிருந்தன.

திமிங்கிலம் சொல்லிற்று: "யானைத் தம்பீ! தரையிலே மிகப் பெரியவன் நீ, தண்ணீரிலே நானே மிகப் பெரியவன். நாம் இருவரும் சிநேகமாகி ஒன்றாய்ச் சேர்ந்துவிட்டோமானால், இந்த உலகத்திலே உள்ள அத்தனை மிருகங்களையும் ஆட்சி புரியலாம். நீ என்ன சொல்லுகிறாய்?"

யானைக்குப் பரம சந்தோஷம் உண்டாயிற்று. 'ஆமாம்' அதுவே சரி; அதுவே சரி. அப்படியே செய்வோம், திமிங்கில அண்ணா!" என்றது.

பிறகு, யானை இரைதேடக் காட்டுக்குள் சென்றது; திமிங்கிலமும் நீருக்குள் திரும்பியது.

இந்தப் பேச்சைக் கேட்ட முயலுக்கு ரொம்பக் கோபம் வந்தது. "இந்த யானையும் திமிங்கிலமும் உலகத்தையே கட்டியாளுவதா? என்ன அநியாயம்! என் சுதந்தரத்தை நான் இழக்க முடியாது. என்னை இவை ஆளவும் கூடாது. அதற்கு ஒரு வேலை செய்கிறேன், பார்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டது. பின்பு, ஓடிப் போய் ரொம்ப ரொம்ப நீளமான ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டது. திமிங்கிலத்திடம் சென்றது.

"மகா பலமுள்ள திமிங்கிலப் பிரபுவே! என் பாழிக்கு அருகே ஒரு சகதி இருக்கிறது. அதிலே ஒரு பசுமாடு வந்து புதைந்து விட்டது. அது இங்கிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. அதை இழுத்து இழுத்துப் பார்த்தேன்; என்னால் இழுக்க முடியவில்லை. நீயோ பலவான். அதை இழுத்துவிட்டு, எனக்கு உதவி புரிய மாட்டாயா?" என்று கேட்டது.

"ஆஹா! தடையில்லாமல் செய்கிறேன்" என்றது திமிங்கிலம்.

"அப்படியானால் இந்தக் கயிற்றின் ஒரு முனையை உன் வாலில் கட்டுகிறேன். மறு முனையைக் கொண்டுபோய், பசுமாட்டின் கொம்பில் கட்டுகிறேன். கட்டித் தயாரானதும், என் தம்பட்டையை அடிக்கிறேன். அந்தச் சத்தம் கேட்டதும், நீ இழு. பலமாய் இழு; ஏனென்றால், மாடு ரொம்ப ஆழமாய்ப் பதிந்திருக்கிறது" என்று சொல்லியது முயல்.

"கொம்பு வரையில் புதைந்திருந்தாலும் அதை இழுத்து விடுகிறேன். பயப்படாதே, போ." என்று தைரியம் கூறியது திமிங்கிலம்.

அதன்மேல் திமிங்கிலத்தின் வாலில், கயிற்றின் ஒரு முனையைக் கட்டிவிட்டு, முயல் போயிற்று.

எங்கே போயிற்று? யானையிடம்தான்.

"மகா வலிமையுள்ள யானை ராஜாவே! என் பாழிக்குப் பக்கத்தில், சகதியில் ஒரு பசுமாடு புதைந்துவிட்டது. அதை வெளியே இழுத்து உதவிபுரிய மாட்டாயா?" என்று கேட்டது.

"இருபது பசுமாடானாலும் இழுத்து விடுகிறேன். அஞ்சாதே" என்றது யானை.

"அப்படியானால், இந்தக் கயிற்று முனையை உன் துதிக்கையில் கட்டிவிடுகிறேன். மறு முனையை மாட்டின் வாலில் கட்டித் தயார் செய்துவிட்டு, என் தம்பட்டையை அடிக்கிறேன். உடனே இழு. முழுப் பலத்தோடு இழு; ஏனென்றால், மாடு ரொம்ப ஆழத்தில் புதைந்திருக்கிறது" என்று முயல் கூறியது.

"அப்படியே செய்" என்று துதிக்கையை நீட்டியது யானை. அதில், கயிற்று முனையைக் கட்டிவிட்டு அகன்றது முயல்.

கொஞ்ச நேரம் கழித்து முயலின் தம்பட்டைச் சத்தம் கேட்டது. உடனே இந்தப் பக்கத்தில் யானையும் அந்தப் பக்கத்தில் திமிங்கிலமும் 'பிர், பிர்' என்று கயிற்றை இழுத்தன. இரண்டும் வெகு தூரத்தில் இருந்ததால், ஒன்றுக்கொன்று பார்க்கவில்லை; பசுமாட்டையே இழுப்பதாக இரண்டும் நினைத்துக் கொண்டன. ஆனால், என்ன இழுத்தும் கயிறு துளிக்கூட அசையவில்லை.

'நீலா'

கடைசியில், யானைக்குக் கோபம் வந்தது. துதிக்கையை மகா வேகமாக ஒரு சுழற்றுச் சுழற்றி இழுத்தது. திமிங்கிலம் ஒரு குட்டிக் கரணம்போட்டு, கரையில் வந்து விழுந்தது. அதற்கும் ரொம்பக் கோபம் வந்தது. தலையைக் 'குபீர்' என்று தண்ணீரில் பாய்ச்சி, வாலை ஒரு வட்ட வளையம் போட்டு இழுத்தது. யானை உருட்டி யடித்துக்கொண்டு புரண்டது. இப்படியே இது இழுக்க அது இழுக்க, அது உருள இது புரள, வெகு நேரம் தமாஷ் நடந்தது.

இதையெல்லாம் தூரத்திலே ஒரு பாறையில் உட்கார்ந்து, வேடிக்கை பார்த்துக்கொண்டு, சிரித்தது முயல்.

கடைசியில், கயிற்றை மேலே சுற்றிச் சுற்றிக்கொண்டு, யானை நீரோரமும் திமிங்கிலம் கரையோரமும் வந்துவிட்டன. இரண்டுக்கும் மகா கோபம் வந்தது.

"நீயா பசு வேஷம் போட்டாய்! உன்னை என்ன பாடு படுத்துகிறேன், பார்" என்று வீரிட்டது யானை.

"நீதானா இந்தப் பரிகாசம் செய்தாய்! உன்னை விட்டேனா, பார்" என்று கறுவியது திமிங்கிலம்.

அதன்பின், மிக உக்கிரமாய்க் கயிற்றை இரண்டும் இழுத்தன. ஆனால், கடைசியிலே கயிறுதான் அறுந்தது. யானை தரையிலே மல்லாக்க விழுந்தது; திமிங்கிலம் நீரிலே பல்டியடித்தது.

பிறகு, அவை ஒன்றுடன் ஒன்று துவேஷங்கொண்டு, பேசவே யில்லை.

முயல் ஒரு புதரிலே உட்கார்ந்து, "அவைகளின் வலிமை கொம்பிலும் வாலிலும் இருக்கிறது; எனது சுதந்தரமோ என் மூளையில் இருக்கிறது" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, 'களுக், களுக்' கென்று சிரித்து ஆனந்தப்பட்டது.

---

பாலர் பாட்டு

# செடியின் கதை

தே. ப. பெருமாள்

சின்னஞ் சிறுவிதையாய்—மண்ணில்
சேர்ந்து வாழ்கையிலே
உன்னும் இறையருளால்—மூளையாம்
உருவைப் பெற்றேனே!

உறக்கம் கொள்கையிலே—வான
ஒளியும் நல்மழையும்
மறத்த லின்றிவந்தே—என்றன்
மயக்கம் தீர்த்தவம்மா!

வெளியில் வந்திடுக—என்றவை
விரும்பிக் கூப்பிடவே
தெளிவைப் பெற்றேநான்—வரவே
சிந்தை இசைந்தேனே.

வையகம் வந்தேனே—இன்ப
வனப்பைக் கண்டேனே,
மெய்யும் இசைபெறவே—இந்த
மேதினி காப்பேனே!

**யுத்தபீதி விளைவுகள்:** பாக்கி விஷயங்களில் யுத்தபீதி எத்தனை தடுமாற்றங்களை உண்டாக்கி யிருக்கிறதோ அதே மாதிரி கலசல்களை, ஸினிமாத் தொழில் துறையிலும் உண்டாக்கியிருக்கிறது. சென்னையி லிருந்த பல விநியோகக் கம்பெனிகள் வெளியூருக்குப் புறப்பட்டு விட்டன. ஸ்டுடியோக்களிலும் பல, தங்கள் 'மாடமாளிகை கூடகோபுரங்களை' யெல்லாம் (தாளும் களிமண்ணும் மூங்கில் சிம்புந்தான்) அங்கேயே போட்டுவிட்டு வெளிப்பட்டுவிட்டன.

**விநியோகிகளில்**

நாராயணன் கம்பெனி கோயமுத்தூரை அடைந்தது.

ஜெமினி கும்பகோணம் சென்றது.

ஸவுத் இந்தியா பிக்சர்ஸூம் பேமஸ் டாக்கீஸூம் காரைக்குடி வந்து சேர்ந்தன.

**ஸ்டுடியோக்களில்**

நியூடோன், தேவகோட்டையில் குடியேறி வருகிறதாம்.

ஜெமினியும் பிரயாண முஸ்தீப்பா யிருந்ததாகக்கேள்வி. பின்னால், நந்தனாரைப் பூர்த்தி செய்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று வேலை நடந்து வருகிறதாம்.

பிரகதியின் தலைமைக் காரியாலயம் காரைக்குடி வந்து சேர்ந்துள்ளது.

சுந்தரம் சௌண்டு ஸ்டுடியோஸ் மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டது. இதன் லிமிடெட் கம்பெனியைக் கலைத்துவிடப் போகிறார்களாம். பிறகு புதிய பெயரோடு இந்த ஸ்டுடியோ கோயமுத்தூரைச் சேர்ந்த பேரூரில் அமைக்கப்படலாம்.

இவையெல்லாம் தவிர, பிலிம் சேம்பர் ஆப் காமேர்ஸ் கும்பகோணம் சென்றுவிட்டது.

மேலும், தமிழ் நாட்டிலேயே அநேகமாய் முதல் ஸினிமாப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய 'ஸினிமா உலகம்' கோயமுத்தூர் சென்று, முன்னிலும் அதிகக் கவர்ச்சியுடனும் சிறந்த கதை, கட்டுரை படங்களுடனும் வெளிவருகிறது.

இப்படிக் காரியாலயங்கள், ஸ்டுடியோக்களின் இருப்பிடங்களில் கோளாறுகள் ஏற்பட்டதால், புதிய படவேலைகள் கொஞ்சம் கொஞ்சம் தடைப்பட் டிருக்கின்றன. ஆனால், வசூல் விஷயம் அவ்வளவு மோசமில்லையாம். கடற்கரை நகரங்களையும், ராணுவ முக்கிய ஸ்தலங்கள் என்று கருதி ஜனங்கள் வெளியேறிய நகரங்களையும் தவிர, மற்ற இடங்களில் வசூல் ஏறக்குறைய முன் போலவேதான் இருக்கிறதாம். சொல்லப்போனால் மொத்த வசூல் முன்மாதிரியேதான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. முன்னே சென்னையில் படம் பார்த்தவர்கள் இப்போது கும்பகோணத்திலும் கோயமுத்தூரிலும் மாயவரத்திலும் காரைக்குடியிலும் பார்க்கிறார்கள். அவ்வளவு தானே?

தெலுங்கு 'பாக்யலட்சுமி'யில் நடிக்கிறார் நாகையா

**இதோ வருகின்றன:** ஸவுத் இந்தியா பிக்சர்ஸார் அடுத்த மாதம் 'ஆராய்ச்சி மணி'யையும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் 'கண்ணகி', 'தேவகன்யா', தெலுங்கு 'பாக்கியலட்சுமி' ஆகிய படங்களையும் விநியோகிக்கப் போகிறார்கள்.

ஜூபிடரின் 'கண்ணகி'யில் பி. யு. சின்னப்பா, கண்ணாம்பாளும், கந்தன் ஸ்டுடியோவின் 'தேவகன்யா'வில் ஹொன்னப்ப பாகவதர், ஜானகியும், 'ஆராய்ச்சி மணி'யில் பி. பி. ரங்காச்சாரி, சந்தானலட்சுமியும், 'பாக்யலட்சுமி'யில் நாகையா, மாலதியும் நடித்துள்ளார்கள். அன்றியும், ஹாஸ்ய நடிப்பில் ஜனங்களின் மனதைக் கவர்ந்துள்ள அந்தக் கிருஷ்ணன் - மதுரம் ஜோடி, 'ஆராய்ச்சிமணி', 'கண்ணகி' இரண்டிலும் நடிக்கிறார்கள்.

*

பிரகதியின் 'என் மனைவி' வெளிவந்து, பல இடங்களிலும் வெற்றிகரமாய் ஓடி வருகிறது. சாரங்கபாணி, செல்லம், நாகர்கோயில் மகாதேவன், மீனலோசனி ஆகியவர் நடிக்கும் இதை, சமூக ஹாஸ்யப் படம் என்று சொல்லலாம்.

* *

ஜூபிடரின் 'ஸந்யாசி ஸம்சாரி' என்னும் சமூகப்படம் பூர்த்தியாகி ஸென்ஸார் செய்யப்பட்டுவிட்டது. இதன் டைரக்டர் திரு. எம். கிருஷ்ண ரத்தினம். ஸி. எஸ். டி. சிங், பி. எஸ். ஞானம் முதலியவர்கள் இதில் நடித்திருக்கிறார்கள். 16,000 அடி நீளமுள்ள இந்தப் படத்திலே, எமன், ஸாவித்திரி, ஸத்தியவான் எல்லாரும் வருகிறார்களாம். ரொம்பத் தமாஷாயிருக்கிறதாம்.

* *

**பாகவதர் நடிக்கும் படம்:** கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் நாராயணன் கம்பெனியின் 'பொய்யாமொழிப் புலவர்' அல்லது 'சிவயோகி' என்ற தமிழ்ப்படம் தயாரிக்கிறார்கள். இதற்குச் 'சீவ கவி' என்று இப்போது பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது. எம். கே. தியாகராஜ பாகவதர் கதாநாயகர். பிரபாத் 'சீதா கல்யாண'த்தில் சீதையாக நடித்த

எம். ஆர். சந்தானலட்சுமி 'தமிழறியும் பெருமா'ளாகப் பூஜை செய்கிருர்

ஜயா என்ற குடும்பப் பெண் கதாநாயகி. கிருஷ்ணன் - மதுரமும் இந்தப் படத்தில் இருக்கிருர்கள். ராஜா சாண்டோ டைரக்டர். 'இளங்கோவன்' கதையையமைத்து, சம்பாஷணைகளைச் சித்தரித்திருக்கிருர். பாடல்கள் பாவநாசம் சிவனுடையவை. படப்பிடிப்பு நடந்து வருகிறது.

*　　　　*

'தமிழறியும் பெருமாள்' அநேக இடங்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. வி. ஏ. செல்லப்பா நக்கீரராகத் தோன்றி உணர்ச்சி ததும்ப நடித்திருப்பதுடன், நன்ருகவும் பாடியிருக்கிருர். சந்தானலட்சுமி அழகாக நடித்திருக்கிருர். ரகுநாத் என்னும் வாலிபர் டைரக்ட் செய்திருக்கிருர். ஒளி, ஒலிப்பதிவுகள் திருப்திகரமாக இருக்கின்றன. 'இளங்கோவன்' வசனம். சிறப்புக்குக் கேட்பானேன்?

*　　　　*

அப்னு-கார் என்ற ஹிந்திப் படம் வெளிவந்திருக்கிறது. உணர்ச்சியும் கலா ருசியும் மிகுந்த இந்தப் படத்தைப் பிரபல டைரக்டர் தேவகி போஸ் தயாரித்திருக்கிருர். இதில் கதாநாயகனைத் தோன்றும் சந்திரமோஹனின் நடிப்பு சிறப்பா யிருக்கிறதாம். சாந்தா ஆப்தே மிக நேர்த்தியாய் நடித்திருக்கிருராம். மாயா பானர்ஜி, ஜகதீஷ் ஜீவன் முதலியோரும் இதில் நடித்துள்ளார்கள். அருமையான படம் என்று தெரிகிறது.

*　　　　*

**ஹாலிவுட் தேர்தல்:** பதினைன்காவது ஆண்டு அகாடெமி விருந்து ஹாலிவுட்டில் நடந்தது. சென்ற வருஷத்து உன்னதப் படம் எது, உயர்தர நடிகர் யார் என்ற விஷயமாகப் பின்வருவோருக்குச் சன்மானங்கள் அளிக்கப்பட்டன: 'ஸார்ஜண்ட் யார்க்'கில் நடித்த காரிகிராண்ட், 'சந்தேகம்' என்பதில் நடித்த ஜோன்பாண்டே, 'ஹங்க்ரீன் இங்மை வேலி'யை டைரக்ட் செய்த ஜான்போர்ட், அதே படத்தில் நடித்த டொனல்ட் கிரீப்ஸ், 'க்ரேட்லே'யில் நடித்த மேரிஸ்டார், 'ஸிடிஸன்கேன்' என்ற படத்தின் கதாசிரியர்களான ஆர்ஸன் வெல்ஸ், ஹெர்மின் மான்கீவிஸ் ஆகியவர்கள் அந்தச் சன்மானங்களைப் பெற்ருர்கள்.

*　　　　*

**பிரபாத்-சாந்தாராம் ராஜி:** பிரபாத் கம்பெனிக்கும் டைரெக்டர் சாந்தாராமுக்கும் இருந்து வந்த தகராறில் ஒரு ராஜி ஏற்பட்டுவிட்டது. திரு. சாந்தாராமுக்கு மேற்படி கம்பெனியில் 3 லட்ச ரூபாய்க்குப் பங்கு இருக்கிறதென்றும், அதைப் பெற்றுக்கொண்டு கம்பெனியிலிருந்து அவர் விலகிவிடலாமென்றும், இதர நான்கு டைரக்டர்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். சாந்தாராமும் அதற்குச் சம்மதித்து விட்டார்.

**மூடிய தியேட்டர்கள்:** 1941-ஆம் வருஷ இந்தியாவில் மொத்தம் 223 ஸினிமாத் தியேட்டர்கள் மூடப்பட்டனவாம். ஜூனகாட் சமஸ்தானத்தில், சமஸ்தான சர்க்காரின் உத்திரவுப்படி, சகல ஸினிமாக் கொட்டகைகளும் மூடப்பட்டனவாம்.

*　　　　*

**நீளம் குறைந்துவிடும்:** இந்தியத் தற்காப்புச் சட்டத்தின்படி முழு நீளப் படங்கள் 11,000 அடிக்கு மேலும், விளம்பர ட்ரெய்லர்கள் 400 அடிக்கு மேலும் போகக்கூடாதென இந்திய சர்க்கார் தடை விதித்திருக்கிருர்கள். ஆகையால், இனிப் பிடிக்கப்படும் படங்கள், 20 ஆயிரம் 30 ஆயிரம் அடிகள் போகமாட்டா. யுத்தத்தால் ஏற்பட்ட ஒரு நன்மை என்றே இதைச் சொல்லவேண்டும்.

*　　　　*

'ஸத்யபாமா' என்னும் தெலுங்குப் படம் ஆந்திர நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. பாமா பரிணயத்தின் மொழிபெயர்ப்புத்தான் ஸத்யபாமா. இந்தப் படத்தை ஒய். வி. ராவ் டைரக்ட் செய்திருக்கிருர். அவரே இதில் கிருஷ்ணனுகவும் தோன்றியிருக்கிருர். பாமாவாகப் புஷ்பவல்லி நடித்திருக்கிருர். இதர நடிகர்களும் தங்கள் பாகங்களுக்கேற்றபடி நடித்திருக்கிருர்கள். படம் பாதகமில்லையாம்.

*　　　　*

வாஹினியின் **பக்த போத்தண்ணு**வின் படப்பிடிப்பு பூர்த்தியாகி வெள்ளித் திரைக்கு வரத் தயாராகிக்கொண்டிருக்கிறதாம். ஆந்திராவின் பிரபல நட்சத்திரமான திரு. நாகையா கதாநாயகனை ஜோராய் நடித்திருக்கிருராம்.

'சன்யாசி சம்சாரி'யில் ஸி. ரீஎஸ். டி. சிங்கும், பி. எஸ். ஞானமும்




Is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

**INDIAN OVERSEAS BANK LTD**

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

| | |
|---|---|
| கன்னனூர் | சிங்கப்பூர் |
| கோயம்புத்தூர் | புதுக்கோட்டை |
| தேவகோட்டை | ரங்கூன் |
| காரைக்குடி | சிவகங்கா |
| குலாலம்பூர் | மேட்டூர் டாம் |
| பினங்கு | தலைச்சேரி (சப் ஆபீஸ்) |

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு**
**லிமிடெட்**

**“ராமவிலாஸ்” லஸ்சர்ச் ரோட்**
**மைலாப்பூர், மதராஸ்**



: நாதன்ஸ் :

**காப்பி**

குணத்துக்கும் மணத்துக்கும்
சிறந்தது

**நாதன் & கம்பெனி,**
கல்லுக்கட்டி,
காரைக்குடி.


## முக்கிய

# அறிவிப்பு

சென்னையிலிருந்து சக்தி காரியாலயம் மாற்றப்பட்டுள்ளதை நண்பர்கள் அறிவார்கள். இது சம்பந்தமாக ஒரு முக்கிய விஷயத்தை அவர்கள் கவனிக்க வேண்டுகிறோம். அதாவது :

‘சக்தி’ புத்தகங்கள் சம்பந்தமான இலாக்கா மதுரைக்கு மாற்றப்பட்டுள்ளது. ‘சக்தி’ பத்திரிகை மட்டிலும் காரைக்குடிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆதலால், புத்தகங்கள் சம்பந்தமாகக் கடிதம் எழுதுவோர் மதுரைக்கும், பத்திரிகை சம்பந்தமாக எழுதுவோர் காரைக்குடிக்கும் எழுதவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

**‘சக்தி’ காரியாலயத்தார்**

# பேப்பர்

★

அச்சாபீஸ்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய உயர்தரமான பேப்பர், மை முதலியன எங்களிடம் கிடைக்கும்

உங்களுக்கு வேண்டியவைகளுக்கு நேரிலோ, கடிதமூலமாக எழுதித் தகவல் தெரிந்து கொள்ளலாம்

★

## சக்தி காரியாலயம்

பேப்பர் வியாபாரிகள்

**கல்லுக்கட்டி, காரைக்குடி**

# தமிழ் அன்பர்களுக்கு - -

- - அரிய சந்தர்ப்பம்

இன்று

அமெரிக்கர் மீண்டும் பேரார்வத்துடன்
ஏராளமாய்ப் படிக்கும் ஒரு நூல்

**தமிழில் தயாராகி விட்டது**

அதுதான்

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் எழுதிய

# போரும் காதலும்

திரு. பொ. திருகூடசுந்தரம், எம்.ஏ., பி.எல்.
மொழிபெயர்த்துள்ளார்

மூன்று பாகங்கள். ஒவ்வொரு பாகமும் தனித்தனி ரூ. 2-8-0. மூன்று பாகங்களும் சேர்ந்து ரூ. 7-8-0 ஆகிறது.

ஜூலை 1உ முதல் பாகமும், செப்டம்பர் 15உ இரண்டாம் பாகமும், அக்டோபர் 30உ மூன்றாம் பாகமும் வெளிவரும்.

இப்பொழுதே அதாவது ஜூலை மாதம் 15உக்குள் முன் பணமாக ரூ. 7-0-0 மட்டில் அனுப்பித் தருவோருக்கு மூன்று பாகங்களும் அவ்வப்போது அனுப்பப்படும். தபால் செலவும் இனம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்க வேண்டாம்.

மானேஜர்,

**சக்தி காரியாலயம்**

செஞ்சை, காரைக்குடி — வடக்கு வெளி வீதி, மதுரை



Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
Devakottah Road, Senjai, Karaikudi. Joint Editor: T. J. Ranganathan.

நாள் முழுதும்
மணம் கமழ
# மைசூர்
சந்தன சோப்

மைசூர் சந்தன சோப்பின் ரம்யமான மணம் அதற்குப் பிரத்யேகமானது. ஸ்நானத்திற்கே ஒரு தனி சுகத்தையும் ஒரு அலாதி கௌரவத்தையும் தருகிறது. அழகுதானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை. பண்டைக் காலம் தொட்டு, சந்தனம் ஒரு இன்றியமையாத வாசனைத் திரவியமாகக் கருதப்பட்டு வருகிறது. இன்றே சந்தனத்தின் கந்தமும் மங்கள குணங்களும் மைசூர் சந்தன சோப்பிலேயே அமைந்திருக்கிறது.

**எப்பொழுதும் எங்கும் கிடைக்கும்**
தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜெண்டுகள்
பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், சென்னை